www.padippakam.com

Mr. Jude

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

தினமுரசு வாரமலர்

பெப்.28–மார்.06,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 298



## வெடிகுண்டுகளும் வேவுப் புலிகளும்

## அம்மையாரின் சீற்றம்



## அஜித் பாதி நான் பாதி

## காட்டிக் கொடுத்த கமரா



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## காவல்துறையின் தாமதம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தென்னிலங்கையில்
முஸ்லிம்களுக்கு எதிராக
வன்முறை
கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது!

அலபடகம, பன்னல,
நொச்சியாகம
ஆகிய பகுதிகளில்
முஸ்லிம்கள்
தாக்கப்பட்டுள்ளனர்.
அவர்களது உடைமைகள்
சூறையாடப்பட்டுள்ளன!

தனி நபர்களுக்கிடையே
ஏற்பட்ட மோதல்கள்
சமூக மோதல்களாக
மாற்றப்பட்டுள்ளன!

மேற்படி சம்பவங்கள்
நடைபெற்ற பகுதிகளில்
முஸ்லிம்களது உடைமைகளை
நாசமாக்குவதற்கு
வன்முறை சக்திகளுக்கு
போதிய சந்தர்ப்பம்
கிடைத்திருக்கிறது!

சிறு பொறியாக
இருந்தபோதே
அவசர நடவடிக்கையெடுத்து
அணைத்திருக்க வேண்டிய
காவல்துறையினர்
ஆமை வேகத்தில்
செயற்பட்டுள்ளனர்!

சிறு பொறி
தீயாகப் பரவி
நாசம் விளைவித்தபின்னரே
தீ அணைக்கப்பட்டிருக்கிறது!

இதற்கு முன்னர்
இரத்தினபுரியில்
தமிழ் மக்கள் மீதும்
இத்தகைய வன்முறையே
ஏவிவிடப்பட்டது!

அங்கும் காவல்துறை
வேடிக்கை பார்த்துவிட்டே
பின்னர் தடுத்திருக்கிறது!

இன்றுவரை அந்தக்
கொடுமைகளுக்குக்
காரணமானவர்கள்மீது
நடவடிக்கை எடுக்கப்படவில்லை!
காவல்துறையின்
அலட்சியப் போக்குக் குறித்தும்
அரசு கவலைப்படவில்லை!

அதேபோன்றே
தற்போது முஸ்லிம்கள்
தாக்கப்பட்ட விடயத்திலும்
உடனடியாக
தகுந்த நடவடிக்கைகள்
எடுக்கப்படவில்லை!

சமூக மோதலைத்
தூண்டும் சக்திகளையும்,
குற்றம் புரிந்தவர்களையும்
காவல்துறை நினைத்தால்
கண்டுபிடித்துக் கைதாக்க
அதிக நேரமாகாது!

காவல்துறை தாமதித்தால்
அதற்கான உத்தரவை
அரசு பிறப்பிக்கலாம்!

ஆனால், அரசாங்கம்
பாதிக்கப்பட்டவர்களோடு சேர்ந்து
தானும் ஒப்பாரி வைத்து,
புலம்பிக் கொண்டிருக்கிறது!

'தீய சக்திகளது
செயல்' என்று
அரசு அறிவித்திருக்கிறது!

யார் அந்த
தீய சக்திகள் என்று
கண்டுபிடித்து
சட்டத்தின் முன் நிறுத்தும்
அதிகாரம் இருக்கும்போது,
புலம்புவது ஏன்?

நடவடிக்கை எடுத்தால்
பேரினவாதிகளது
ஆதரவு நழுவும்!

நடவடிக்கை எடுக்காது
விட்டாலும்
முஸ்லிம்களது வாக்குகள்
திசைமாறும்!

ஆளும் தரப்பின்
தாம சங்கடம்
இதுதான்!

'கூழுக்கும் ஆசை
மீசைக்கும் ஆசை'....
சிங்கள வாக்குகளும் தேவை;
முஸ்லிம் வாக்குகளும் தேவை.

அதுதான் 'தீய சக்திகளது
செயல்' என்று
காற்றில் கத்திவீசி
சாடிக் கொண்டிருக்கிறார்கள்!

எல்லாவற்றையுமே
அரசியலாக்குவதும்
எதிரணிமீது
பழிபோட்டுத் தப்புவதுமே
ஆட்சியில் இருப்போரின்
அன்றாடப் பணியாகியதோ
என்று மக்கள்
சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர்!

தேர்தல் காலங்களில்,
'எதிரணியின் சார்பாளர்கள்'
என்று கூறப்பட்டு
காவல்துறையினர் பலர்மீது
நடவடிக்கை எடுக்கப்படுகிறது!

ஆனால், கலவரங்களில்
காலதாமதமாகச் செயற்படும்
காவல் துறையினர்மீது மட்டும்
நடவடிக்கை எடுப்பதற்கு
அரசு முன்வருவதில்லை!

உரிய நடவடிக்கைக்குப்
பதிலாக
உரத்து ஒப்பாரிவைப்பதில்
எவ்வித பலனுமில்லை!

வெள்ளம் வரும் முன்னர்
அணை கட்டுவதுமில்லை;
வெள்ளம் பாய்ந்த பின்னரும்
தக்க நடவடிக்கையில்லை
என்றால் என்ன அர்த்தம்?

அரசிடம் இருந்து
பாதிக்கப்பட்ட மக்கள்
எதிர்பார்ப்பது
அனுதாப வார்த்தைகளோ,
அறிக்கைகளோ அல்ல.
ஆரோக்கியமான
நடவடிக்கைகளையே
எதிர்பார்த்து நிற்கின்றனர்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஆசைக்கோர் அணை

இந்த உலகில் மனிதனாகப் பிறந்துள்ள எம்மைச் சுற்றி எண்ணற்ற உயிரினங்களும் உயிரற்ற ஜடப் பொருட்களும் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் மனிதனை ஏதோ ஒரு வகையில் மனிதனை ஈர்க்கவே செய்கின்றன.

குழந்தையாக இருக்கும்போதே தாய்மீது அன்பு, தந்தை மீது பாசம், சகோதர சகோதரிகள் மீதும் உற்றார் உறவினர் மீதும் ஒருவகைப் பற்று ஏற்பட்டுவிடுகிறது. தவிர விளையாட்டுப் பொருட்கள்மீதும் ஒரு பாந்தம் ஏற்பட்டுவிடுகிறது. குழந்தை வளர வளர இத்தகைய பாசப்பிணைப்புகளும் விரிவடைந்து விடுகின்றன. வாழ்க்கை வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் பலவகை ஜடப்பொருட்களின் பால அதிக நாட்டம் அதிகரிக்கிறது. இதற்கிடையில் குடும்ப வாழ்வில் ஈடுபட்டால், பல்வேறு பண்டங்களின்மீது பற்றுதல் ஏற்பட்டு அவற்றைத் தனதுடைமை ஆக்கிக்கொள்ள ஆசை ஏற்படுகிறது.

ஆசை பேராசையாக மாறுகிறது. தன் குடும்பத்துக்கும் தனக்கும் தேவையானவற்றை விலை கொடுத்தே வாங்க வேண்டும். ஆகவே பணம் தேடுவதில் நம் நாட்டம் அதிகரிக்கிறது.நினைத்த பொருள் கிடைத்துவிட்டால் எல்லாம் முடிந்துவிடுமா? ஆசை அடங்கிவிடுமா? இல்லை... ஆசை வளர்ந்து கொண்டே போகும்.

ஆசை வளர வளர நமது எண்ணங்கள் எங்கெங்கெல்லாமோ செல்கின்றன. கடிவாளம் இல்லாத காட்டுக்குதிரைபோலாகி விடுகிறோம். கவலைகள் சூழ்கின்றன. ஆசைகள் நிறைவேறாத நிலையில் பலதரப்பட்ட பாவச் செயல்களுக்கு மனிதன் தூண்டப்படுகிறான். இதனால் வாழ்க்கையின் இலட்சியம் சிதறி மனிதன் மிருகமாகி விடுகிறான்.

ஆகவே ஆசையை அடக்கப் பழகிக்கொள்ளவேண்டும். இதற்கு உறுதுணை புரியக்கூடியது 'தியானம்' எனும் அபூர்வமான வித்தையாகும்.

ஞானேந்திரன்.

## ஆன்மீகம்



## யார் பலசாலி?

நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் ஓரிடத்தில் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது அவ்விடத்தில் பலர் பாறாங்கற்களைச் சுமந்து கொண்டிருப்பதைக் கண்டு, "ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்?" என விசாரித்தார்கள்.

அதற்கு அவர்கள், "எங்களில் அதிக பலசாலி யார்? என்பதைப் பரீட்சிக்கிறோம்!" என விடை பகர்ந்தனர்.

"உங்களில் அதிக பலசாலி யார் என்று நான் சொல்லட்டுமா?" என நபியவர்கள் கேட்க,

"சொல்லுங்கள் தூதுவர் அவர்களே!" என ஆவலாக ஒரே குரலில் வேண்டினார்கள் அவர்கள்.

யார் சந்தோசமாக இருக்கும் நேரத்தில் அதிக பாவத்தில் ஈடுபடவில்லையோ,

"யார் கோபம் தலைக்கேறிய போதிலும் உண்மைக்கு மாறாகப் பேசாமல் நடந்து கொள்கிறாரோ, யார் அதிகாரமிருந்தும், தனக்குரியதைத் தவிர வேறெதையும் எடுக்கவில்லையோ, அத்தகையவர்தான் உங்களில் சிறந்த பலசாலி!" என்றார்கள் நபி கோமான்.

தொகுப்பு: ஜப்பார் எம்.ஜெஸீல், சாய்ந்தமருது-08.

## கவிதைப் போட்டி இல.295



### பரிசுக்குரிய கவிதை

**முறு(க,வ)ல்!**

முனைப்புடனே
முறுகலது
தொடர்கையிலே
முகத்தினிலே
முறுவலது
எப்படியோ?

ரேணுகா றிபாய்தீன்-
ஏறாவூர்.2.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

**அக்கா வருவாளோ....?**

அப்பாவும் இல்லை
அம்மாவும் இல்லை
அக்கா வருவாளோ....
ஆறுதல் சொல்ல?

களுவாஞ்சிக்குடி நாதன்-
கல்லடி- உப்போடை.

**சபாஷ்**

பிறர் சிரிக்க
வாழ்வதைவிட
சிரித்து வாழ்வது
சாலச் சிறந்தது!

அ. யாழினி- மட்டக்களப்பு.

**புரியும்!**

அகத்தின் அழகு
முகத்தில் தெரியும்!
அகதிகள் நிலைமை
இவர்களில் புரியும்!

செல்வி ப்ரியநேசி-
களுந்துறை (தெற்கு).

**சம நிலை!**

நாற்புறமும் முள் வேலி
காவலுக்குப் போர் வீரன்
அகதிகள் நாம் ராஜாக்களா?
ராஜாக்களும் அகதிகளா?

ம. திருவரசுராசா- வவுனியா.

**கண்டுபிடிப்பார்களா?**

கொலம்பஸ்- அமெரிக்காவை
கண்டுபிடித்தார்.
கப்றல்- பிரேஸிலை கண்டுபிடித்தார்.
ஐ.நா.சபை எங்களைக்
கண்டுபிடிக்குமா?

கே. அரி- கல்லடி, மட்டக்களப்பு

**நாமழுவோம்**

காலமெல்லாம்
நாமழுதோம்....
கண்டு கொள்ள யாருமில்லை!
கணப்பொழுதே
நாம் சிரித்தோம்....
காலமெல்லாம் படம் சிரிக்கும்!

நிஜந்திக்கா கனகசிங்கம்- மட்டக்களப்பு.

**(சு)தந்திர வேடிக்கை....**

உடுதுணிக்கு பஞ்சம் வந்தது,
உணவின்றி உயிர்கள் போகுது.
உண்மையான சுதந்திரம் என்பது
உப்பு நீரில் எழுத்துக்களோ...?

ஆ. மனோஷா- பண்டாரநாயக்க
மாவத்தை, கொழும்பு-12.

**நிறமாற்றம்!**

நிலமா...
பச்சையா...?
எங்கள்
பார்வையில்
எல்லாமே...?
பூஜ்ஜியம்!

கயல் வண்ணன்-
வவுனியா.

**எங்கள் உலகம்**

உலக
உருண்டையைப் பற்றி
எங்களுக்குத்
தெரியாது!
ஒரு உருண்டைச்
சோறு கிடைத்தால்
அதுதான்
எங்கள் உலகம்!

த. நகுலேஸ்வரன்- கல்லடி, மட்டக்களப்பு.

**என் செய்ய?**

எங்கள்-
சோகத்தினை மறைக்க
புன்னகைக்க முடியும்
ஆனால்-
தேகத்தினை மறைக்க..?

எம். இஸ்மத்- மீராக்கேணி
வீதி, ஏறாவூர்.

**வேதனைச் சிரிப்பு!**

மருந்தே கிடையாது அம்மா செத்தார்!
உணவே கிடையாது அப்பா செத்தார்!
எவையுமே கிடையாத -உமக்கு
சுதந்திர தினச் செய்தி கேட்க
சிரிப்புத்தான் வருகிறதோ!

எஸ். விசாகன்- வவுனியா.

## கவிதைப் போட்டி இல.298



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 06.03.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.298
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## புதிய படைப்பாளிகள்

முரசே!

'வெண்ணிலா சூரிய குமாரன்' போன்ற புதிய படைப்பாளிகளை அறிமுகப் படுத்தியுள்ளாய். எவ்வித ஆரவாரமும் இல்லாது யதார்த்த இலக்கிய சிருஷ்டிகளை 'முரசு' உருவாக்கி வருகிறது. 'முரசு' தெரிவு செய்து தரும் சமகால கதைகள் என்றென்றும் நிலைக்கக் கூடியவை.

வி.சந்திரசேகர்,
முல்லைத்தீவு.

## சொர்க்கமல்ல

சினிமாப் பகுதியில் 'முரசு' தரும் கிசு கிசு செய்திகள்கூட விரைவில் உண்மையாகி விடுகின்றனவே. தமிழ்நாட்டிலிருந்து தகவல்தரும் மயன், திரையுலகம் ஒன்றும் சொர்க்கமல்ல நரகம்தான் என்பதை நாமறிய வைக்கிறார். தமிழக சினிமா இதழ் ஒன்றிலும் இதே மயன் எழுதி வருவதாகத் தெரிகிறது. பாராட்டுக்கள்.

பி.சுரேந்தர்,
மட்டக்களப்பு.

## மனிதன் கடிக்கலாமா?

முரசே! உன்னைப் பார்த்து கோலம் போடும் பத்திரிகைகள் சில, உன்மீதே உரசிப்பார்க்கின்றன. இவற்றுக்கெல்லாம் பதில் சொன்னால் உன் தரம்தானே தாழ்ந்து போகும்? நக்கீரனுக்கும் இதனை தெரிவிக்கவும். நாய் மனிதனைக் கடிக்கலாம். மனிதன் நாயைக் கடிக்கலாமா? கடித்தால் மனிதனுக்கே இழுக்கு!

சி.கமலேந்திரன், சுவிற்ஸர்லாந்து.

## இளவரசியின் சோகம்

அன்புள்ள முரசுக்கு;

டயானா தொடர்ந்து ஏமாற்றப்படுகிறார். அன்பைத் தேடிய இளவரசிக்கு படரக் கிடைத்த மரம் எல்லாம் சொத்தி மரம். புவனா திரட்டி எழுதிவரும் தகவல்கள் அருமை. ஹஸ்னற்கானும் டயானாவை ஏமாற்றி விடுவாரோ? இளவரசியின் சோகம் என் கண்களையும் ஈரமாக்குகிறது.

சி.வசந்தா, கொழும்பு-07.

## தேர்தல் கேலி

முரசே!

காதிலை பூ கந்தசாமியார் கலக்குகிறார். தேர்தல், கேலி அட்டகாசமாக இருந்தது. ரஜினியின் கருத்துக்கு கலைஞர் கூறிய மழுப்பலை தன் பாணியில் சாடியிருந்தார் கந்தசாமி.

பா.முகைதீன், அநுராதபுரம்.



## எழுத்தரசு

முரசே!

கண்ணதாசன் கவியரசு மட்டுமல்ல. எழுத்தரசு. அவரது வாழ்க்கை அனுபவச் சுரங்கம். இடி அமீன் தொடர் பிரமாதம். ரசிகனுக்கு இந்த ரசிகனின் பாராட்டுக்கள்.

எஸ்.திவாகரன், கனடா.

## இங்கும் முரசு

இங்கும் 'முரசு' கிடைக்கத் தொடங்கியிருக்கிறது. 294வது முரசு முதல் கிடைத்துள்ளது. பிரமாதம். நம் நாட்டில் இருந்து இப்படியொரு பத்திரிகையா? இந்திய சஞ்சிகையோ என்று சந்தேகத்தோடு வாங்கினேன். இந்திய சஞ்சிகைகளை விட அச்சும், அமைப்பும் பிரமாதம். ஆக்கங்கள் பற்றி கூறவா வேண்டும்?

கா.ராமநாதன், திருச்சி-இந்தியா.

## விழலுக்கிறைத்த நீர்

முரசே! தமிழ்க் கட்சிகளுக்கு புத்தி சொல்வதும், இக் கட்சிகள் திருந்தும் என்று நினைப்பதும் 'விழலுக்கு இறைத்த நீர்' போன்றது. தெரிந்துகொண்டே தவறு செய்கிறார்கள். இப்போதுகூட எதிர்க்கட்சியும், 'ஆளும் கட்சியும் ஒன்று சேரவேண்டும்' என்று பழைய பல்லாவியை பாடுகிறார்களே! இவர்களா திருந்துவர்?

எம்.முகிலன், வவுனியா.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

* நுவைஸ் ஏ.மஜீத், நேரியகுளம்.
* எஸ்.எம்.பௌசி, கொழும்பு-15.
* எம்.ஸ்ரீரஞ்சனி, உடப்பு.
* ஜே.வர்ணகுலம், கனடா.
* எம்.ரவூப், கொழும்பு-15.
* எஸ்.எம்.தர்சி, பத்தனை.
* ரி.தியாகராஜா, நமுனுகல பஜார்.
* ஏ.ரவிஷங்கர், மட்டக்களப்பு.
* கே.யோகேந்திரன், ஜெர்மன்.
* சோ.ரங்கநாதன், மட்டக்களப்பு.
* எம்.சாஹிப், ஏறாவூர்.
* செல்வி அ.ரேணுகலா, மட்டக்களப்பு.
* வி.பவானி, சுவிஸ்.
* சி.தங்கராஜன், மன்னார்.
* பி.ஜேக்கப், கனடா.
* எஃப்.சோமாஸ்கந்தர், ஹட்டன்.
* விக்கி முத்தையா, கனடா.
* வ.தம்பியப்பா, வாழைச்சேனை.
* வரதன் செல்லத்துரை, அவுஸ்திரேலியா.
* இ.தவராஜா, தேற்றாத்தீவு.
* தி.பிரியந்தி, திருமலை.
* ஏ.எஸ்.ஹாரீஸ், வாழைச்சேனை.
* தி.லலிதகோபன், மட்டக்களப்பு.
* அ.ரவிபாலன், அமெரிக்கா.
* இ.சதாசிவம், நுவரெலியா.
* பூ.ராம், ஜெர்மன்.
* கே.சிதம்பரநாதன், ஃபிரான்ஸ்.
* என்.சிவகுமார், கொழும்பு-14.
* தி.சுந்தரலிங்கம், மட்டக்களப்பு.
* தி.சாந்தரூபன், ஜப்பான்.
* ஆ.இரட்ணராஜ், இலண்டன்.
* எஸ்.அருள் செல்வம், பசறை.
* அ.விஜிதா, மன்னார்.
* எஸ்.ஜெசிதரன், மாத்தளை.
* ப.சசிகுமார், விசுவமடு.
* எம்.குமார், முல்லைத்தீவு.
* மு.ஜெயதீபன், முல்லைத்தீவு.
* த.தியாகராஜன், ஜப்பான்.
* சபா.ஜெகதீஷ், மூதூர்.
* அ.ரவி, சென்னை-இந்தியா.
* என்.கிருஷ்ணன், இறக்காமம்.
* ஆர்.விஸ்வநாதன், மட்டக்களப்பு.
* பா.உதயகுமார், யாழ்ப்பாணம்.
* எஸ்.லோகிதவாணி, மட்டக்களப்பு.
* கே.எம்.இப்றாகீம், ஏறாவூர்.
* ந.குருபரன், தன்னீரூற்று.
* மா.தணிகாசலம், டென்மார்க்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266



படிப்பகம்

www.padippakam.com

# சர்வமத தூதுக்குழுவின் வன்னி விஜயம்?

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு முட்டுக்கட்டை?

**வ**ன்னிக்குச் சென்றுவந்த சர்வமத குழுவில் உள்ள சிலர் புலிகள் தம்மிடம் கூறாத கருத்துக்களையும் வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு தெரிவித்து வருகின்றனர்.

தாயகக் கோட்பாட்டை கைவிட புலிகள் தயாராக உள்ளதாக மதகுரு ஒருவர் சமீபத் தில் கூறியுள்ளார். தம்மிடம் புலிகள் அதனைத் தெரிவித்தனர் என்றும் குறிப்பிட்ட மதகுரு கூறியுள்ளார்.

"தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றுத் திட்டம் அரசிடம் இருந்தால் முன்வைக்கட்டும். பரிசீ லிக்கிறோம். சுயாட்சி அதிகாரம் கொண்ட தீர்வு முன்வைக்கப்பட்டால் பரிசீலிப்போம்!" என்றே புலிகளின் பிரதிநிதிகள் சர்வமத தூதுக் குழுவினரிடம் கூறியுள்ளனர்.

அதனையே தாயகக் கோட்பாட்டை புலிகள் கைவிடத் தயார் என்று குறிப்பிட்ட மதகுரு அர்த்தப்படுத்தியுள்ளார் என்று தெரி கிறது.

வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பிரதேசம் என்பதே தாயகக் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது. தமிழீ ழக் கோரிக்கையும், தாயகக் கோட்பாடும் ஒன்றல்ல.

ஏனைய தமிழ்க் கட்சிகள்கூட தாயகக் கோட்பாட்டைக் கைவிட்டதாகக் கூறவில்லை.

சர்வமத தூதுக்குழுவில் சென்றுவந்த மதகுருவானவர்களில் ஒருவரான கெனத் பெர்னாண்டோ சில ஆண்டுகளுக்கு முன்ன ரும் அரசுக்கும், புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டவர். ஒரு கட்டத்தில் இவரது நடவடிக்கைகளில் புலிகள் சந்தேகம் அடைந்தனர். அவர் சமாதானத் தூதராக அல்லாமல், சிறீலங்கா அரசின் தூதராக நடந்து கொள்கிறார் என்று பகிரங்க மாகக் கண்டித்திருந்தனர்.

### மறைமுக அனுமதி

தற்போதும் மதகுருமார் குழுவின் முயற்சி கள் தற்காலிக பரபரப்பாக இருக்குமே தவிர, அரசு-புலிகள் இடையே பேச்சுக்கு வழிவகுக்கமாட்டாது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிய கோரிக்கை முனைப்படைந்து வருவதால் தான், சர்வமத தூதுக்குழுவின் முயற்சிக்கு அரச தரப்பு மறைமுகமாக அனுமதியளித்த தாகத் தெரியவருகிறது.

தென்னாபிரிக்க பாராளுமன்ற உறுப் பினர்கள் குழுவினர் வன்னிக்குச் செல்ல அனுமதி கேட்டபோது பாதுகாப்புக் கார ணங்களைக்கூறி அனுமதி மறுக்கப்பட்டது. அதேபோல வெளிநாட்டுப் பத்திரிகையாளர் கள் பலர் தமது சொந்தப் பொறுப்பில் சென்று வர முயன்றும் அனுமதி கிடைக்கவில்லை.

மதகுருமார்களுக்கு மட்டும் அனுமதி கிடைத்தமை பல்வேறு ஊகங்களுக்கு இட மளித்துள்ளன.

### சந்தேகம்

இந்த நாட்டுக்குள் சமாதான முயற்சிகள் நடப்பதாக வெளியுலகை நம்பவைக்கவும், சமீபகாலத்தில் அரசுக்கு ஏற்பட்டுள்ள அப கீர்த்திகளைத் தணிப்பதற்குமே சர்வமத தூதுக்குழுவின் முயற்சிகள் ஒரு குறிப்பிட்ட காலம் தொடர்வதையும் அது பற்றிய செய்தி கள் பத்திரிகைகளில் வருவதையும் அரசு விரும்புவதாகக் கூறப்படுகிறது.

புலிகளுடன் தொடர்புகொள்ள அரசு முயற்சிப்பதாக இலங்கையின் இந்தியத் தூதர் மங்கள முனசிங்கா கூறியுள்ளார். இதுவும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புலிகளுடன் இலங்கை அரசு இரகசிய மாகத் தொடர்பு கொள்வதானால் அதனை இலங்கைத் தூதர் வெளியிட்டே இருக்க மாட்டார். அப்படி தொடர்பு கொள்வது இரக சியமல்ல என்றால் அதனை ஒரு தூதர் தெரி விக்க வேண்டியதில்லை. அரசே கூறியிருக்கும்.

### நிர்ப்பந்தம்

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடி வுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்கள் இலங்கை அரசை வலியுறுத்த ஆரம்பித்துள் ளன. இதன் காரணமாகவே புலிகளுடன் பேச்சு நடத்த ஆர்வம் காட்டுவது போன்ற செய்திகள் இராஜதந்திர வட்டாரங்களை எட்டச் செய்யப்படுகின்றன.

இத்தகைய செய்திகளுக்கு சாதகமாகவே சர்வமத தூதுக்குழுவினரின் விஜயத்தை மறை முகமாக அரசு ஊக்குவித்ததாக பலத்த சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

சர்வமத தூதுக்குழுவில் உள்ள சிலர் அரசுக்கு விசுவாசமானவர்கள் என்பது புலிகளுக்கும் தெரியுமாம். சந்திக்க மறுத்தால் தம்மை சமாதானத்திற்கு எதிரானவர்கள் என்று கூறுவார்கள் என்பதாலேயே சந்திக்க இணங்கினராம்.

### புலிகளின் நிலை

"மதகுருமாரின் முயற்சியை அரசு பயன் படுத்த நினைக்கிறது. ஆனால் இந்த நாட்டுக் குள் பிரச்சனையைத் தீர்க்க முடியாது என் பதே மதகுருமாரின் முயற்சி தோல்வியடையும் போது மேலும் நிருபணமாகப் போகிறது. என்றாலும் மதகுருமாரின் முயற்சி தோற்ப தற்கு புலிகள் காரணம் என்று கூறத்தக்கதாக நாம் நடந்துகொள்ள மாட்டோம். ஆனால் அரசுடனான எந்தப் பேச்சும் இரகசியமாக நடக்கமாட்டாது!" என்று புலிகளது வட்டா ரங்கள் கூறியுள்ளன. ■

# யாழ்–கொழும்பு பயணம்!-புலிகள் பலத்த எச்சரிக்கை!

(நமது நிருபர்)

**யா**ழ்-கொழும்பு விமான சேவையில் பயணம் செய்ய வேண்டாம் என்று புலிகள் மீண்டும் எச்சரித்துள்ளனர்.

தனியார் கப்பல் சேவைகளில் போக்கு வரத்து செய்வதை தாம் தடை செய்யப்போவ தில்லை என்றும் புலிகளது எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் விமான சேவை நடத்த அனு மதிக்கவும் புலிகள் முன்வந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. சீருடையினரை ஏற்றிச் செல்வதில்லை என்ற முடிவை அரசு ஏற்கும் பட்சத்தில் தனியார் விமான சேவைக்கு அனுமதியளிக்க புலிகள் முன்வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. எனினும் இது பற்றி உத்தி யோகபூர்வமாக புலிகள் எதனையும் தெரி விக்கவில்லை.

யாழ் போக்குவரத்துத் தொடர்பாக தமது நிலைப்பாட்டை சுவரொட்டிகள் மூலம் தெரிவிப்பதை விடுத்து, உத்தியோகபூர்வமாக புலிகள் தெரிவிக்க வேண்டும் என்று யாழ் மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

விமான சேவையை நிறுத்துமாறு புலிகள் கடிதம் அனுப்பினர். தற்காலிகமாக மறு அறிவித்தல்வரை நிறுத்துமாறே கூறியிருந் தனர். தற்போது அவர்களது நிலைப்பாட்டை தெரிவித்தால் தாம் போக்குவரத்து நடத்த உதவியாக இருக்கும் என்று தனியார் விமான சேவை நிறுவனத்தினரும் கூறுகின்றனர்.

புலிகள் தனியார் விமான சேவைக்கு தடை விதித்ததாகக் கூறியே தனியார் விமான சேவைக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் புலிகள் அனு மதித்தாலும் தனியார் விமான சேவைக்கு அரசு அனுமதி வழங்குவது சந்தேகமே.

# பாவனைக்கு உதவாத அரிசி

## அரச அதிபர் வக்காலத்து!

**யா**ழ் குடாநாட்டு மக்களுக்கு அரசால் அனுப்பப்பட்ட அரிசி பாவனைக்கு உதவாத நிலையில் இருந்துள்ளது.

ஏற்கனவே பலதடவை இவ்வாறான-பாவனைக்கு உதவாத பொருட்கள் யாழ் மக்களுக்கு அனுப்பப்படுவதாக புகார்கள் கூறப்பட்டு வந்துள்ளன.

இதேவேளை சமீபத்தில் பாவனைக்கு உதவாத அரிசி அனுப்பப்பட்டது பற்றி யாழ் அரச அதிபர் வக்காலத்து வாங்கி யுள்ளமை யாழ் மக்களிடம் பலத்த விச னத்தை ஏற்படுத்தியுள்ளது.

கப்பலில் கொண்டு வரும்போது கடல் தண்ணீர் பட்டு அரிசி பழுதடைந்திருக்கலாம் என்று அவர் நியாயம் கற்பித்துள்ளார். "இவ்வாறு அவர் கூறவேண்டிய காரணம் என்ன?" என்று பலரும் சந்தேகம் தெரி வித்துள்ளனர். ●

# கடற்கரையில் சண்டைக்காட்சி?

## வில்லன்களை விரட்டிய அமெரிக்கர்

**அ**ண்மையில் தென் இலங்கையிலுள்ள உல்லாச புரியான ஹிக்கடுவைக் கடற்கரை யில் நடைபெற்ற சம்பவம் ஒன்று கருத்தைக் கவரத்தக்கதாகவுள்ளது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி கடற்கரையில் வைத்துக் குண்டர் கள் சிலரின் 'தாக்குத'லுக்குள்ளானார். கடற் கரையிலிருந்த வேறு பலர் 'நமக்கேன் வம்பு' என்று வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்துள்ளனர்.

மற்றொரு புறம் கடற்காற்று வாங்கிக் கொண்டிருந்த ஒருவர் பாய்ந்தோடிச் சென்று குண்டர்களுக்கு 'சினிமாஸ்டை'லில் குத்துவிட்டு அவர்களை விரட்டி அடித்து உதைத்து-அப் பெண்மணியைக் காப்பாற்றியுள்ளார். அவர் இல்லையானால் ரீட்டாவுக்கு நேர்ந்த கதியே அப் பெண்ணுக்கு ஏற்பட்டிருக்கும்.

வில்லன்களை விரட்டி அடித்தவர் யார் என்று விசாரித்ததில், அவர் ஒரு அமெரிக்கக் கடற்படைப் பயிற்சி அதிகாரி என்பது தெரியவந்தது. தென்னிலங்கையில் ஒரு முகாமில் சிறீலங்கா கடற்படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக வந்திருக்கும் அவர், விடுமுறையைக் களிப்பதற்காக கடற்கரைக்கு வந்திருந்தாராம்.

இதன் மூலம் அமெரிக்க பயிற்சி தொடருவதும் வெளிப்படையாகி யுள்ளது.

பிறநாட்டு உல்லாசப் பயணிகளை இந் நாட்டுக்கு வருமாறு வருந்தி அழைத்து அந் நியச் செலாவணியைக் கறக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுவரும் அரசு, அவ்வாறு வரும் உல்லாசப் பயணிகளுக்குப் போதுமான பாதுகாப்பினை வழங்கத் தவறிவிடுகிறது.

சில சந்தர்ப்பங்களில் பெண் பயணி கள் சிலர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி யிருக்கின்றனர். ஏராளமான பணமும் விலை உயர்ந்த பொருட்களும் அவர்களிடம் சூறை யாடப்பட்டுள்ளன. சில கொலைகளும் நடந் துள்ளன.

இவ் விவரங்கள் வெளிநாடுகளில் தெரிய வருமானால் உல்லாசப் பயணிகள் இங்கு வருவது மேலும் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. ■

# குடாநாட்டில் கோரக்கொலை

## கடத்தல்கள் தொடர்கின்றன!

**பு**ளொட் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் சதீஷ் யாழ் நகரில் வைத்து ஒரு மாதத்துக்கு முன்னர் சுடப்பட்டிருந்தார்.

அவர் சுடப்பட்ட அதே இடத்தில் மனி தத் தலை ஒன்று 23.02.99 அன்று- இரத்தம் சொட்டச் சொட்ட வைக்கப்பட்டிருந்தது. 24.02.99 அன்று சதீஷின் 31வது நினைவு நாளாகும். அதனை முன்னிட்டே சதீஷின் கொலைக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஆனால் கொல்லப்பட்டவர் புலி என்ப தற்கு ஆதாரம் எதுவுமில்லை. இக் கொலைக் கும் யாழ் படை வட்டாரங்களுக்கும் தொடர் பில்லை என்று தெரிகிறது.

அதே சமயம் யாழ் குடாநாட்டில் ஆட்களைக் கைது செய்யும் அதிகாரம் தமிழ்க் கட்சிகளுக்கு வழங்கப்படவில்லை என்று சில நாட்களுக்கு முன்னர்தான் யாழ் இராணுவ அதிகாரி கூறியிருந்தார். ஆனால் ஆட் கடத்தல்கள் தொடர்வதோடு, கோரக் கொலைகளும் அரங்கேறிவருகின்றன.

தமிழ்க் கட்சிகள் சில யாழ் குடாநாட்டில் தடுப்பு முகாம்கள் நடத்தி வருகின்றன. தமிழ்க் கட்சியொன்றால் பிடித்துச் செல்லப் பட்ட தமிழ் இளைஞர் ஒருவரே தலை வெட் டப்பட்டுள்ளார்.

மிகக் கொடூரமான இக் கொலை நட வடிக்கை மக்களை பீதியில் ஆழ்த்துவதற்கா கவே செய்யப்பட்டுள்ளது. ■

# வெளிநாட்டு திரைகளில்

## 'ஓயாத அலைகள்–02'

**கி**ளிநொச்சி மற்றும் பரந்தன், ஆனை யிறவுப் பகுதிகளில் புலிகள் நடத்திய தாக்கு தலுக்கு 'ஓயாத அலைகள்-02' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது.

தற்போது அத்தாக்குதல் காட்சிகள் உட்பட, வன்னிப் போர்முனை நடவடிக்கை கள் பலவற்றை உள்ளடக்கிய குறுந் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத் திரைப்படம் தற்போது பிரிட்டன் உட்பட பல நாடுகளில் திரையிடப்பட்டுள்ளது. பெரும் திரளான மக்கள் இதனை காணச் செல்கின்றனர்.

மூன்று மணி நேரம் ஓடக்கூடிய குறுந் திரைப்படமாகத் தயாராகியுள்ளது. ஓயாத அலைகள்-02 மட்டுமன்றி, மாங்குளம் பகுதியில் நடைபெற்ற மோதல்களும் இடம்பெற்றுள்ளன.

# எதிர்பார்ப்பும் தாக்குதலும்

**கி**ளாலி கடலில் 18.02.99 அன்று புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதல் நடப்பதற்கு முன்பாக 17ம் திகதி புதன்கிழமையன்று, புலிகள் விரைவில் ஒரு தாக்குதலை மேற்கொள்ளக் கூடும் என்று, ஆனையிறவிலுள்ள 54 வது இராணுவப் பிரிவின் தலைமை நிலையத்தில் இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் சிலர் கூடி விவாதித்துள்ளனர். அவர்களு டைய எதிர்பார்ப்புக் கேற்ப அடுத்த நாளே புலிகள் தாக்கியுள்ளனர்.

16.02.99 செவ்வாய்க்கிழமையன்று கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா, அண்மைக் காலங்களில் கடற்படை யினர் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்கு தல்களைப் பராட்டியுள்ளார்.

பெப்ரவரி 11ம் திகதியன்று தமிழ்நாட்டி லிருந்து மருந்துப்பொருட்கள் ஏற்றி வந்த இரு கப்பல்களைக் கடற்படையினர் தாக்கி யதை அவர் எடுத்துக்காட்டினார்.

அவர் பாராட்டிய 24 மணிநேரத்தின் பின்னரே கிளாலியில் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இவ்வாறு கொழும்பு ஆங்கில இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

# பயிற்சி முகாமில் வெடி விபத்து!

## 4 பேர் கவலைக்கிடம் - 3 பேர் காயம்!

**மோ**ட்டார் குண்டுகளைக் கையாள் வது சம்பந்தமான பயிற்சி நடந்து கொண்டி ருந்தபோது 60.மி.மீ மோட்டாரில் குண்டு இடப்பட்டு சில வினாடிகளில் மேலே உந்தப் பட்ட குண்டு, 60 அடி உயரத்தில் ஆகாயத் தில் வைத்து வெடித்துச் சிதறியது.

இதனால் அவ்விடத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த ஏராளமான படையினரில் ஒன்பது பேர் காயப்பட்டு உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் பட்டனர். இதில் 4 பேரின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. மாதுறு ஓயா பயிற்சி முகாமிலேயே இச்சம்பவம் நடந்துள்ளது. ●

# புலிகளால் வாகனங்கள் கடத்தல்!

## படையினரால் வீதிகள் தகர்ப்பு!

**ம**ட்டக்களப்பு நகரப் பகுதிக்குள் நுழைந்த புலிகள் இயக்கத்தினர் ஒரு வார காலப்பகுதியில் அரச வாகனங்கள் மூன்றைக் கடத்திச் சென்றனர். பாதுகாப்புத் தரப்பின ரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு பட்டப்பகலிலேயே துணிகரமாக பாதுகாப் புத் தரப்பினரின் கண்காணிப்பின் கீழுள்ள பகுதிக்கூடாகவே அவற்றைக் கொண்டு சென்றனர்.

இதனையடுத்துப் படையினரும் பதில் நடவடிக்கை எடுத்தனர். வாகனங்கள் கொண்டு செல்லப்பட்ட அடுத்தடுத்த நாட் கள் குறிப்பிட்ட ஒரு சில பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டன.

சுற்றி வளைக்கப்பட்ட பகுதிகளில் புலி களால் கடத்தப்பட்ட வாகனங்கள் இல்லை. அவற்றைத் தம்வசமுள்ள பகுதிகளுக்கு உடன டியாகவே புலிகள் எடுத்துச் சென்று விட்ட னர் என்பது படையினருக்கு நன்கு தெரிந் திருந்த போதிலும் சுற்றி வளைப்புக்கள் நடாத்தப்பட்டன.

கொழும்பிலிருந்து வந்த வாகனங்களும், உள்ளூர்ப் போக்குவரத்து வாகனங்களும் காலையிலிருந்து பகல் வரை முற்றாகத் தடை செய்யப்பட்டது. இதனால் பாடசாலை மாணவர்களும், அலுவலகங்களுக்குச் செல் வோரும் எங்குமே செல்ல முடியாததாகிவிட்டது.

முன்னரும் பல தடவைகளில் புலிகள் வாகனங்களைக் கடத்திச் செல்கிறார்கள் எனக் கருதி படையினர் சித்தாண்டிப் பகுதி யின் முக்கிய உள் வீதிகளில் கிடங்குகளைத் தோண்டியும், குண்டு வைத்தும் தகர்த்தெறிந் துள்ளனர். இவ்விதம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட மகிழடிக் கட்டுப்பாலத்தைப் புலிகள் செப்பனிட்டு அப்பகுதி விவசாயி களின் போக்குவரத்துக்கு வழி சமைத்தனர்.

இப்பொழுது பெரும்போக அறுவடை யும், சிறுபோக விதைப்பும் ஆரம்பித்திருக்கும் தறுவாயில் மகிழடிக்கட்டு வீதியின் ஏற் கெனவே தகர்க்கப்பட்ட பகுதிக்கு சிறிது முன்னாலும் உப்போடையில் ஒரு பாலமும் படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப் பட்டுள்ளன.

இதனால் ஆயிரக்கணக்கான விவசாயி கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உடைக்கப்பட்ட பாலத்தைத் திருத்தி பொது மக்களின் போக்குவரத்தைச் சீர் செய்வதற்கு படையினர் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். அந்த வீதிகளாலேயே கடத்திய வாகனத்தைப் புலிகள் கொண்டு செல்கின்றனர் என்பது படையினரது குற்றச்சாட்டாகும். ■

# வாக்காளருக்கு அன்பளிப்பு

(கண்டி நிருபர்)

**க**ண்டி மாவட்டப் பாராளுமன்ற எதிரணி உறுப்பினர் ஒருவர் தமது பரிவார மாகாணசபை வேட்பாளர்களுடன் முஸ்லிம் கள் பெரும் அளவில் வாழும் மடவளைக்குச் சென்று ஒருவருக்கு தலா 10 கூரைத் தகடு கள் (32 கேஜ்) என்ற ரீதியில் 150 பேருக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

தகடுகளைப் பெற 600 பேர் விண்ணப் பித்திருந்தனராம். இவர்களில் 500 பேர் தெரிவாகி, சீட்டுக்குலுக்கியபின் அதிர்ஷ்ட சாலிகள் 150 பேர் தெரிவானார்களாம். அவர்களுக்கே அந்தத் தகடுகள் மேடை அமைத்து வழங்கப்பட்டன.

எஞ்சிய 350 பேரும் முகத்தைச் சுளித்துக் கொண்டு போய்விட்டனராம்.

மாகாணசபைத் தேர்தல்களுக்கான முன்னோடி வலை வீச்சே இது என்பது தெரியாததல்ல. ■

# புலி உறுப்பினர் சரண்!

## பலியெனத் தகவலில்லை!

**ம**ட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதி சுற்றி வளைப்பின்போது அப்பகுதிப் பொறுப் பாளரான பிரதாப் எனும் புலி உறுப்பினர் கொல்லப்பட்டார் என்று அரச வானொலிச் செய்தியில் சொல்லப்பட்டது.

ஆனால் அவ்வாறு யாரும் அந்தப்பகுதி யில் குறிப்பிட்ட நாட்களில் கொல்லப்பட்டதாக புலிகள் எதனையும் தெரிவிக்கவில்லை. அப் பகுதிப் பொதுமக்களும் அப்படியான ஒரு தாக்குதல் நடந்ததாகவே தாம் அறியவில்லை என்று தெரிவிக்கிறார்கள்.

இதனிடையே புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் வேட்டையாடச் சென்றபோது, அவ ருடன்கூட உதவிக்குச் சென்ற நான்கு பொது மக்களில் ஒருவர் பதுங்கியிருந்த படையின ரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இச்சம்பவம் மட்டக்களப்பு-பதுளை வீதியில் உள்ள எழுபத்தெட்டு எனும் இடத்தில் கடந்த 21.02.99 அன்று பி.ப. 2 மணிக்கு நடந்தது.

இதேவேளை புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மை.தேவ குமாரி (தாரிணி) என்பவர் மட்டக்களப்பு நகரிலுள்ள தனது தந்தையுடன் வந்து பொலி ஸாரிடம் சரணடைந்துள்ளார். இவரது நட வடிக்கை ஒன்றுக்காக புலிகளது பொறுப்பாள ரால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாலேயே இவர் அதிருப்தி அடைந்தாராம். அதனாலேயே பொலிசில் சரணடைந்தார் என்று மறுபக்கத் தகவல்கள் கூறுகின்றன.

# மூள்கிறது பிரசாரப் போர்

## பாழாகிறது நகர் அழகு

(கண்டி நிருபர்)

**எ**திர்வரும் மத்திய மாகாண சபைத் தேர்தலையொட்டி கண்டி நகரில் ஏட்டிக்குப் போட்டியாக ஒட்டப்படும் தேர்தல் பிரசார சுவரொட்டிகள் கண்டி நகரை பாழ் படுத்தி வருவதாக சூழல் பாதுகாப்பு மீது அக்கறை யும் ஆர்வமும் கொண்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒருவருக்குப் பின்னால் ஒருவர் ஒட்டும் இவ்வாறான சுவரொட்டிகள் பலவும், மத்திய போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான அரசுடைமை பஸ்களிலேயே பெருவாரியாக காணப்படுகின்றன.

தேர்தல் பிரசார வேலைகளுக்காக யானையும் நகர வீதிகளில் ஒரு வேட்பாளருக் காக உலா வருகின்றது. ஐ.தே.கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினரே இந்த யானையை பிரசார நடவடிக்கைக் காகப் பயன்படுத்தி வருகிறார்.

மகாவலி கங்கையில் விடப்பட்டிருக்கும் தெப்பமும் தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன் படுகின்றது. ■



படிப்பகம்

www.padippakam.com

# சந்தை திறக்க படையினர் தடைவிதிப்பு!
## மக்கள்மீது பலவித கட்டுப்பாடுகள்!

மட்டக்களப்பு- சித்தாண்டியில் படையினரின் தலையீட்டால் அங்குள்ள பொதுமக்கள் பலவிதமான நெருக்கடிகளை அனுபவிப்பதாக பா.உ. அலிஸாஹிர் மௌலானாவிடம் மக்கள் அமைப்புக்கள் முறையிட்டுள்ளன.

அவர்களது புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "சித்தாண்டியில் படையினர் ஒலி பெருக்கிமூலம் அழைப்புவிடுத்து முறக்கொட்டான்சேனையிலுள்ள காடுகளை வெட்டித் துப்புரவாக்குவதற்காக ஆண் பெண் வித்தியாசமின்றி கூட்டிச் செல்கின்றனர். இரவு ஏழு மணிக்குப் பின் விளக்குகளை அணைத்துவிட வேண்டும். இது பெரும்போக அறுவடைக் காலமாக இருந்தும் வயல் வாடிகளுக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்ல முடியாது. அனுமதியில்லாமல் கடைக்குச் சாமான்கள் கொண்டு வரமுடியாது படையினரின் உத்தரவில்லாமல் கோயில்களில் பூசை அனுஷ்டானங்களை நடத்த முடியாது.

அத்துடன் இதுவரை காலமும் எமது கிராமத்தில் பொதுச்சந்தை ஒன்று இருக்கவில்லை. இதனால் சுபீட்சத்திட்ட (சமுர்த்தி) செயலணியினரின் சிபார்சின் பேரில் ஒரு பொதுச் சந்தை கட்டப்பட்டுள்ளது. ஆனால் அதனைத் "திறக்கவிடமாட்டோம்" என முறக்கொட்டான்சேனை இராணுவத்தினர் கூறுகிறார்கள். சந்தைக் கட்டடத்தில் கடைகளை வைத்திருப்பவர்களுக்குரிய வியாபார அனுமதிப் பத்திரங்கள் செல்லுபடியற்றதாக்கப்படும் எனவும் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக எமது கிராமத்தைச் சுற்றிவளைத்து ஆண், பெண் வேறுபாடில்லாமல் கைது செய்து சித்திரவதைக்குட்படுத்துகிறார்கள். எமது மக்கள் சுதந்திரமின்றி அடக்கி வைக்கப்பட்டுள்ளார்கள்!" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து உடன் பாதுகாப்பு அதிகாரிகளிடம் எடுத்துக் கூறி நடவடிக்கை எடுப்பதாக பா.உ அலிஸாஹிர் மௌலானா மக்களிடம் கூறினார்.

# நாடு முழுக்க
## இராமர் கோவில்!

(கண்டி நிருபர்)

1981 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் படி சிங்கள மக்களின் எண்ணிக்கை இந்நாட்டின் சனத் தொகையில் 70% ஆகும்.

ஆனால் இன்றுவரை நாம் அதே எண்ணிக்கையில்தானா இருக்கின்றோம்? இப்படி கேள்வி எழுப்பி உள்ளவர் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் வி.எம்.மத்தும பண்டார.

கண்டி கெப்பட்டிபொல பௌத்த மண்டபத்தில் இடம்பெற்ற பௌத்த அமைப்புக்களின் கூட்டம் ஒன்றில் பேசிய பொழுதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

"இன்று சீத்தா எலியவிலும் கண்டி உடவத்தை காட்டுப்பிரதேசத்திலும் இராமருக்கு கோயில் கட்டும் ஆர்வம் தமிழர்கள் மத்தியில் மேலோங்கி உள்ளது. இதனைப் பார்க்கும் பொழுது நாடு பூராவுமே இராமர் கோயில்கள் உருவாகலாம். அஸ்கிரியாவிலும் இதே போன்ற கோயில் கட்ட முயற்சிக்கிறார்களாம்." இப்படி அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஊதியம் நிறுத்தம்
## ஊழியர் அவதி!

(நமது நிருபர்)

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சிற்றூழியராக பணிபுரியும் 09 பேருக்கு வழங்கப்பட்டுவந்த சம்பளம் கடந்த ஆகஸ்ட் மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த 09 பேரும் நிவாரண அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களாவர். சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளதால் இவர்கள் பலத்த சிரமங்களை மேற்கொண்டு தமது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இவர்களுக்கான சம்பளத்தை கல்முனை கல்விக் காரியாலயமே வழங்கி வந்தது. புதிதாக சம்பளம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதனை வழங்குவதில் காரியாலயம் இழுத்தடிப்புச் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்கலாசாலையில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பத்துமாதக் கடனும் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு கடனுக்காக விண்ணப்பித்து உறுதிப்பத்திரத்தில் ஒப்பமிட்ட இவர்கள் இக்கடன் தமக்கு கிடைக்காமல் இருப்பது ஏன் எனக் கேட்கின்றனர்.

# தரைமட்டமான பள்ளிவாசல்
## மறுபடி கட்ட நிதி தேவை!

(மன்னார் நிருபர்)

நீங்கள் படத்தில் காண்பது இலங்கை விமானப் படையினரால் 1990 ஒக்டோபர் 31ஆம் திகதி குண்டு வீசித் தகர்க்கப்பட்ட மன்னார்-தாராபுரம் ஹுஸைனியா ஜும் ஆப் பள்ளிவாசலின் தோற்றமாகும்.



இப்பள்ளிவாசல் சிதைவுற்று இடிபாடுகளுடன் காணப்பட்டபோது மன்னார் புனர்வாழ்வு செயலகம் ரூபா. 65 ஆயிரம் வழங்கியது. அப்பணத்தில் பள்ளிவாசல் இருந்த தடயமே இல்லாமல் இடிபாடுகளை அகற்ற மட்டுமே முடிந்தது.

ஒரே நேரத்தில் இரண்டாயிரம் பேர்வரை தொழக்கூடியதாகவிருந்த இப்பள்ளிவாசல் இன்று கிரிக்கெட் மைதானம் போன்று காட்சி தருகிறது.

இதனை புனர்நிர்மாணம் செய்ய குறைந்தது 65 இலட்சமாவது தேவைப்படும். ஆனால் இதற்காக 10 இலட்சத்திற்கு உட் பட்ட தொகையே ஒதுக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

சிதைந்த இடிபாடுகளுடன் காணப்பட்டாலாவது வெளிநாட்டு நிறுவனங்கள், அரபு நாடுகளின் உதவியுடன் புனர்நிர்மாணம் செய்திருக்கலாம்.

# ஆட் கடத்தலும் விடுவிப்பும்

புலிகளிடமிருந்து வந்து படையினரிடம் சரணடைந்ததாகக் கூறி, படையினரின் முகாமில் ஒட்டி உறவாடித் திரிந்த நபர் பின்னர் படையினரின் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மீண்டும் புலிகளிடம் போய்ச் சேர்ந்துவிட்டார். இந்தச் சம்பவம் சிலகாலங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு- வாகரையில் நடந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அவர் படையினரின் முகாமில் ஒட்டி உறவாடிப் பழகிய காலத்தில் படையினருடன் நட்பு வைத்திருந்ததால் சிலரின் விவரங்களைத் திரட்டிக்கொண்டு சென்றிருந்தார். அதனடிப்படையில் மட்டக்களப்பு எகெட் (EHED) எனும் உதவி நிறுவனத்தைச் சேர்ந்த மார்க் என்பவரும் மற்றும் வாகரையைச் சேர்ந்த மீன் வியாபாரி ஒருவரும் புலிகளால் விசாரணைக்கெனக் கைது செய்யப்பட்டனர். அதன் பின்னர் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக அவர்களைப் பற்றி எதுவும் தகவல் இல்லாதிருந்ததால் அவ்விருவரும் புலிகளால் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என்றே மக்கள் கருதினார்கள்.

எனினும் சுமார் நான்கு மாத விசாரணைக்குப் பின் அவ்விருவரும் புலிகளால் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை கடந்த சில நாட்களுக்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகம்-வந்தாறுமூலையில் பாதுகாப்பு ஊழியராகக் கடமை புரியும் ஒருவர் விசாரணைக்கென புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பாதுகாப்பு ஊழியரின் மைத்துனர் செங்கலடி-பதுளை வீதியிலுள்ள புளொட் முகாம் பொறுப்பாளராக இருந்து தற்போது வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார் என்று கூறப்படுகிறது.


RAMY CDS RAMY CDS RAMY CDS RAMY CDS

உலகப் பிரசித்தி பெற்ற
உயர்தர ரமி இசைத்தட்டுகள்

ஆங்கிலோ-இந்திய கூட்டுத் தயாரிப்பாளர்கள் EMI-RPG அமைப்புடன் RAMIY இணைந்து பழைய-புதியபாடல்களை சர்வதேசத் தரத்தில் (CD's) இசைத்தட்டுக்களாகவெளியிட்டுள்ளனர்.
இவற்றை இலங்கையில் அறிமுகப்படுத்துவதில்
ஏ.கே.வி. எம்போரியம் பெருமைப்படுகிறது.
நாடெங்கும் விற்பனை முகவர்கள் தேவை.
நியாய விலையில்-சர்வதேசத் தரத்தில்-RAMIY CDS.
எமது விசேட வெளியீடு மன்னார் மடு மாதா மீதான கிறிஸ்தவ கீதங்கள்

A.K.V. EMPORIUM
F 119, PEOPLES PARK,
COLOMBO-11.
Phone:435744, 472129

சுவிற்ஸர்லாந்தில் —
RAMIY RECORDS
GMBH
KOCHLI STR-028
8004-ZURICH.
Phone: 004181252525013



BRIGHT NEW METHOD
SPOKEN THAMIL
மொழி விருத்தி
தபால் மூலம் கல்வி
ஆங்கிலம் / சிங்களம் ஆகிய மொழிகளில் தபால் மூலம் கல்வி போதிக்கும் Bright நிறுவனம்.
புலம் பெயர்ந்த தமிழ் மாணவர்களுக்காக
(வெளிநாட்டுணர்களுக்கு)
தாய் மொழி, தமிழ் மொழியின் பாரம் பரியத்துடன் இலக்கண இலக்கிய அறிவை மொழிவிருத்தி நூல்கள் ஊடாக அபிவிருத்தி செய்யும் பாடத்திட்டம்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்க
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, P. O. BOX NO: 162,
C. C. S. M. C. C.-11. SRI LANKA.
TELE: 434770, 074 - 718592 FAX: 333279





கலை அலங்கார வகுப்புக்கள்
* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* மலர் மொக்கை சேர்தல்
* 4 மாத கற்கைநெறி
ஆரம்பம்: 28-02-99
சான்றிதழ்கள் வழங்கப்படும்
FASNAZ BEAUTY SALON
142, டபிள்யு. ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு-06. T.P: 589457





மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உன்னத சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இந் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.
நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



தெய்வீக மருத்துவம்
சர்வதேச சமூக தெய்வீக சேவை
CHARITY REGED NO. HA\04\BT\219
NTSF துயர் தீர்க்குமிடம்

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், காதல், கல்வி, தொழில், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள் எனபவற்றிற்கும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன நீங்கற்று தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டமெனும் சோதிடத்தினால் உங்கள் பலன்களையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர் (SAMP) "நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பலன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்."

தெய்வீகம் ஸ்ரீலங்கா,
தலைமை அலுவலகம்
கல்லடி-அரசவிடுதி வீதி, மட்டக்களப்பு.

THEIVEEGAM SRI LANKA,
HEAD OFFICE
BATTICALOA. SRI LANKA.
T.PHONE: 065-24825

"வாழ்விலிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"



DANCE
பயிற்சி நெறியின் இறுதியில் வெற்றி பெறுங்கள்.
சிறந்த நடனக்கலைஞன்
ரூ. 25,000/=
சிறந்த நடனக்கலைத்தாரகை
ரூ. 20,000/=
சிறு பிள்ளைகளுக்கு
B.M.X சைக்கிள்
இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவில் சர்வதேச டிப்ளோமா பயிற்சி பெற்ற நடன பயிற்றுனரான
SHAAN PERERA
நடாத்தும்
WESTEN & INDIAN DANCE
நடாத்தும்
தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில்
தெஹிவளை
S.D.S. JAYASINGHE HALL, DEHIWELA
ஜயசிங்க மண்டபம், தெஹிவளை.
ADDRESS:-
DOUBLE'S
P.O.BOX: 53



விளம்பரப் பகுதி

தபால் மூலம் விஞ்ஞானம்
G.C.E. (A/L) – இரசாயனவியல்
Year 9,10,11 – விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்
Year 5 – ஆரம்ப விஞ்ஞானம்
ஆசிரியர்:
குமார் சிவப்பிரகாசம்
விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்.
P.T.C.
14, Covington Road,
Batticaloa.



காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளி நாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை.
கொழும்பு-6.
T.P:- 586218




# 6ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 01.10.1938

உதிர்வு: 25.02.1993

திருமதி மேரிறோஸ் மங்களநாயகம்

எங்கள் அன்பு தெய்வமே அம்மா, எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஆறு சென்றிடினும் அம்மாவின் பிரிவுத் துயர் இன்றும் எமது நெஞ்சை விட்டகலவில்லை அம்மா! பாசத்துடன் எம்மை வளர்த்து எங்களை கண்ணீர் கடலில் ஆழ்த்தி விட்டீரே அம்மா! உங்கள் ஆன்மா சாந்தியடைய நாம் தினமும் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
கணவர், அம்மா, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்.

தகவல்: திரு மங்களநாயகம், 70 நியூனம் சதுக்கம், கொழும்பு-13.


உலகத் தமிழ் பேனாநண்பர் இதழ்
(இது ஒரு ஐரோப்பிய மாணவர்கள் வெளியீடு)
நீங்களும் உலகத் தமிழ் பேனா நண்பர் இதழில் இணைந்து உங்கள் சிந்தனைகளை சர்வதேசமெங்கும் அகல விடுங்கள். உங்கள் நட்புக் கரங்களை இன்னும் நீள விடுங்கள். நீங்கள் உங்களை இணைத்துக் கொள்வதற்கும், உங்கள் ஆக்கங்களை வெளியிடுவதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
N.Suganthini
Arthur Van Schendellaan-1o
6711 Dc-Ede
THE NETHELANDS



மனோதத்துவ வைத்தியம்
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
வவுனியாவில் பெப்ரவரி 13,14,15ம் திகதிகளில் சந்திக்கலாம்
(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(HOTEL VASANTHAM), 40, கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365
கொழும்பில் பெப்ரவரி 21 முதல் 28 வரை சந்திக்கலாம்
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388
கல்முனையில் மார்ச் 6,7,8ம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329
கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.



மஹாசக்தி மருத்துவம்
GOVT APPROVED CHARITABLE Services Reg NO. HA 14-BT/176
காலம் பகைக்கும்போது காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத் தடைகளும் கணவன், மனைவி குடும்பபிரச்சனைகள், அன்புக்குரியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், மதுவிற்கு அடிமை, தகாத உறவு, தீய சக்திகளின் தொல்லைகள், தீராத உடல்நோய், மனநோய், மருந்தீடு, வேறு பிரச்சனைகளும் ஏற்படலாம். இவைகளிலிருந்து விடுபட அல்லது வெற்றிகொள்ள இலவசமாக சோதிட மருத்துவ மனோதத்துவ, மாந்திரீக ஆன்மீக ஆலோசனைகள் வழங்குகின்றார் மஹாசக்தி உபாசகர் (வைத்திய கலாநிதி) சுகாதார அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட இந்தியன் வைத்தியசாலையின் டாக்டர்- "மந்திரயோகி"
(D.H.M.S.D.Ac (இலங்கை), M.B.B.S.H.D.S.M (இந்தியா)) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் வெளியில் சொல்லமுடியாத வெட்கமான, வேதனையான பிரச்சனைகள் நோய்கள், தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள் கோரிக்கைகளை எழுதியும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு தபால் மூலம் விருப்பங்களை நிறைவேற்றலாம். மாலை 4-30 மணியிலிருந்து 6.30 மணிவரை தியான (MEDITATION) நேரமாகையால் தொடர்பு கொள்ளபடாது. விரும்பி அனுப்பும் குருதட்சணைகளை ஏற்று முதலில் உடன் கவனிக்கப்படும். மணியோடர் நாற்ற எடுக்கவேண்டிய பெயர் GURUSACKTHY CENTRE" (INDIAN CLINIC) விலாசம். மட்டக்களப்பு கல்லடி, மணிக்கூட்டு கோபுரத்துக்கு கிழக்குப்பக்கம் இராமகிருஷ்ணபுரம் வீதியில்.
தொலைபேசி இலக்கம் 065-24872
INDIAN CLINIC (GURUSKTHY CENTRE)
KALLADY-BATTICALOA (P.O) (SRI LANKA)




படிப்பகம்

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# கடற்பரப்பில் சிறுத்தையணி பாய்ச்சல்

கடற்பரப்பில் சமீபகாலமாக கடற்படையினர் நடத்திய தாக்குதல்கள் கடற்புலிகள் தரப்பில் தொடர் இழப்புக்களை ஏற்படுத்தி வந்தன.

களஞ்சியப்படுத்தல் நடவடிக்கை முடிந்ததும் பதிலடி நடவடிக்கையில் கடற்புலிகள் ஈடுபடுவர் என்று சென்றவாரம் ஊகம் தெரிவித்தோமல்லவா.

18.02.99 அன்று அதிகாலையில் கடலில் புலிகளின் பதிலடி நடவடிக்கை கிளாலியில் நடந்திருக்கிறது.

கடற்புலிகள் மீதான தொடர் தாக்குதல்களையடுத்து, கடற்படையினரின் ரோந்துக்கள் அதிகரித்திருந்தன.

இம்முறை பதிலடி நடவடிக்கையில் கடற்புலிகளோ, கடற் கரும்புலிகளோ ஈடுபடுத்தப்படவில்லை.

பிரபாகரனது நேரடி கட்டுப்பாட்டில் உள்ள சிறுத்தை படையணியின் கடற்பிரிவினரே பதிலடி நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டனர்.

கிளாலிப் பகுதியில் ரோந்தில் ஈடுபடும் கடற்படைக் கலங்கள்மீது தாக்குதல் நடைபெறும் அதே நேரத்தில், இன்னொரு அணி கிளாலி கடற்படை தளம்மீது தாக்குதல் நடத்தி ஊடுருவது என்பதே திட்டம்.

18.02.99 அதிகாலை கிளாலி கடற்படை தளம் நோக்கியும், கடற்படையினரின் ரோந்துப் படகுகளை குறிவைத்தும் சிறுத்தையணி கடற்பிரிவினர் பத்துக்கு மேற்பட்ட படகுகளில் விரைந்தனர்.

தமது ராடர்கள் மூலம் கடற்படையினர் ரோந்துகளை புலிகள் அவதானித்தனர்.

கிளாலி கடற்படைத் தளத்திற்கு இரண்டு கடல் மைல் தூரத்தில் இரு வோட்டர் ஜெட் படகுகள் ரோந்தில் ஈடுபட்டிருந்தன. கடற்படை விசேஷ கொமாண்டோக்கள் அதில் இருந்தனர்.

கிளாலி கடற்பகுதி ஆழம் குறைந்தது என்பதால் வோட்டர் ஜெட் படகுகளே அங்கு ரோந்தில் ஈடுபடுத்தப்படுவதுண்டு.

வோட்டர் ஜெட் படகுகளை கண்ட சிறுத்தையணியின் படகுகள் அதி வேகமாக விரைந்து அவற்றின்மீது தாக்குதலை ஆரம்பித்தன.

மிகக்கூடிய குதிரைவலுக் கொண்ட இயந்திரம் பொருத்தப்பட்ட சிறுத்தை படையணிப் படகுகள் குறுகிய நேரத்தில் வோட்டர் ஜெட் படகுகளை சமீபித்து சுற்றிவளைத்து விட்டன.

அதேநேரம் கிளாலிக் கடற்படை தளமும் சிறுத்தை அணியின் தாக்குதலுக்கு உள்ளானது.

இதனால் கடற்படை தளத்தில் இருந்து, கடற்பரப்பில் முற்றுகைக்கு உள்ளான ரோந்துப் படகுகளுக்கு உதவி வழங்கமுடியவில்லை.

சிறுத்தை அணியினர் தளத்திற்குள் ஊடுருவ விடாது தடுப்பதற்கான தாக்குதல்களில் தளத்திலுள்ள கடற்படையினர் ஈடுபட்டிருந்தனர்.

சிறுத்தை அணியினர் தளத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருக்க, விமானப் படையினரின் உதவியைக் கேட்டு கடற்படையினரால் தகவல் அனுப்பப்பட்டது.

அதே நேரம் கடற்பரப்பில் சிறுத்தை அணியினர் வோட்டர் ஜெட் ஒன்றை முற்றுகையிட அதில் இருந்த கடற்படை வீரர்கள் கடலில் குதித்தனர்.

அந்த வோட்டர் ஜெட் படகு சிறுத்தை அணியினரால் கைப்பற்றப்பட்டது. இன்னொரு வோட்டர் ஜெட் முற்றுகையில் இருந்து தப்பி கிளாலி தளம் நோக்கி விரைந்தது. அதனை நோக்கியும் தாக்குதல் தொடர்ந்ததில் அதுவும் பலத்த சேதத்திற்கு உள்ளானதாக அறியப்படுகிறது.

அதிகாலை ஒரு மணியளவில் ஆரம்பித்த தாக்குதல் இரு மணி நேரமாக நடந்து கொண்டிருக்கையில், விமானப்படையினர் உதவிக்கு விரைந்தனர்.

பொழுது புலர்ந்து கொண்டிருந்தமையால், விமானப்படையினர் இனம் கண்டு தாக்குவது சுலபம். அதனால் சிறுத்தையணியினர் கிளாலித் தள முற்றுகையை கைவிட்டு திரும்பினார்கள்.

விமானப்படை உதவிக்கு வருவதற்கு முன்னரே, கைப்பற்றப்பட்ட வோட்டர்ஜெட் படகை தமது தளத்துக்கு கொண்டுசென்று விட்டது சிறுத்தையணி.

இந்த கடற்சமரிலும், கடற்படை தளம் மீதான தாக்குதலிலும் சிறுத்தையணிக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. இரண்டு வோட்டர் ஜெட்டில் ஒன்று நாசம், மற்றொன்று எம் வசம் என்று புலிகள் கூற, கடற்படையினரோ ஒரு படகு மூழ்கியதாகவும், இன்னொன்று தப்பியதாகவும் கூறியுள்ளனர். தமது தரப்பில் ஒருவரை காணவில்லை, இருவர் காயம் என்று கூறியுள்ளனர்.

கடற்படை கூறியுள்ள இழப்பு விபரம் பற்றி தணிக்கைக் காரணமாக கருத்துத் தெரிவிக்க முடியாது.

வோட்டர் ஜெட்டில் இருந்த கடற்படையினர் சிலர் கடலில் குதித்து தளம் நோக்கி நீந்திச் சென்றுமுள்ளனர். தளம் அருகிலிருந்தமையால் உயிரிழப்பு குறைந்துள்ளது.

சமீபகாலத்தில் கடற்பரப்பில் கடற்புலிகள் மீது தொடர் தாக்குதல் நடத்திய கடற்படையினருக்கு கிளாலி சமர் சறுக்கல்தான். அதனால் கிளாலி சமரை சிறிதுபோல காண்பிக்கவே முயலுவர்.

ஆனால் ஒரு வோட்டர் ஜெட் படகின் விலை மட்டும் நம்நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட 70 இலட்சம் ரூபாய். இப் படகில் விமான எதிர்ப்புக்குப் பயன்படுத்தக் கூடிய நீண்டதூர இயந்திரத் துப்பாக்கி 01, ஏ.கே.எல்.எம்.ஜி துப்பாக்கி, ராடர் சாதனம், பகல், இரவு நீண்டதூர தொலைநோக்கி, மற்றும் சக்திமிக்க தொலைத் தொடர்பு சாதனம் என்பவை இருந்துள்ளன.



அவ்வாறு நோக்கும்போது சிறுத்தையணியிடம் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள தளபாடங்களை (படகு உட்பட) கடற்படையினர் பறிகொடுத்துள்ளனர்.

விசேஷ கொமாண்டோ அணியைச் சேர்ந்த கடற்படை உயர்தர பொறியியலாளரான ஹேவவசம என்பவர் காணாமல் போயுள்ளதாக கடற்படையினர் கூறியுள்ளனர்.

அவரது உடலை எடுத்து இறுதி மரியாதையுடன் தாம் தகனம் செய்துவிட்டதாக புலிகள் கூறியுள்ளனர்.

1993ல் நாகதேவன் துறை கடற்படை தளம்மீதான தவளைப் பாய்ச்சல் தாக்குதலின் போதும் ஐந்து வோட்டர் ஜெட் படகுகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கடற்புலிகளது தாக்குதலை சமாளிக்கவும், கடலில் புலிகளது நடமாட்டத்தை தடுப்பதற்கும் கடற்படையினர் இப்போது விமானப்படையினருடன் இணைந்து நடவடிக்கைளில் ஈடுபடுகின்றனர்.

இதனால் கடற்புலிகளது படகுகள் கடற்பரப்பில் நின்று சண்டையிடுவது சிரமமான காரியம்.

இருளோடு இருளாக சென்றே தாக்குதல்களில் ஈடுபடலாம். அப்போதும் வெளிச்ச குண்டுகளை வீசி விமானப்படையினர் இனம் காணலாம்.

எனவே, கடற்பரப்பில் விமானப்படைக்கு எதிரான தாக்குதலுக்கும் கடற்புலிகள் தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர்.

***

**வ**ன்னியில் மீண்டும் மழை பொழியத் தொடங்கியுள்ளது. கடும் மழை.

பல குளங்கள் வான் பாயும் நிலையில் உள்ளன.

18.02.99 அன்று மட்டும் 60 மி.மீட்டர் மழை பொழிந்துள்ளது. 19.02.99 இல் 8.5 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

இதனால் வன்னியில் படையினரின் நகர்வுகள் மேலும் தாமதமாகியுள்ளன. தற்போதைக்கு படை நடவடிக்கை பாரியளவு நடப்பதற்கான கள நிலவரம் காணப்படவில்லை.

தினசரி பல புலிகள் கொல்லப்படுவதாக படைத்தரப்பு செய்தி வெளியிட்டபடியே இருக்கிறது. அந்தக் கணக்கின்படி பார்த்தால் இப்போது புலிகளே வன்னியில் இருக்க மாட்டார்கள்.

கடந்த வாரத்தில் நான்கு புலிகள்வரை வன்னியில் படையினரது தாக்குதலில் பலியானதாக பெயர் விபரங்கள் வெளியாகின.

இவர்களில் சிலர் வேவுப் புலிகள். படையினரது நிலைகள் பற்றிய தகவல்களை திரட்டுவதற்கு சென்றபோதே, பதுங்கியிருந்த படையினரால் சுடப்பட்டுள்ளனர்.

புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் படையினர் ஊடுருவி தாக்குவதாக செய்திகள் வந்தன.

ஊடுருவல் என்பது படையணிகள் நிலைகொண்டிருக்கும் பகுதிகளுக்குள் புகுவதாகும்.

வன்னியில் புலிகளும் படையினரும் அரண்கள் அமைத்து நிலை கொண்டுள்ள முன்னரங்க நிலைகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் உள்ளன.

இப்பகுதிகளில் நடமாட்டம் இருப்பதில்லை. எப்போதாவது நடமாட்டம் இருக்கும். அவ்வாறான சமயங்களில் பதுங்கியிருந்து தாக்குவதும் உண்டு. இதனை ஊடுருவுவது என்று கூறமுடியாது.

நெடுங்கேணி வீதியில் அவ்வாறுதான் படையினர் தாக்குதல்கள் நடத்தினர்.

ஆனால் இது அடிக்கடி நடக்க முடியாது.

தமது முன்னரங்க நிலைகளை அண்டிய பகுதிகளுக்குள்ளும் படையினர் பதுங்கியிருப்பர்.

இப்பகுதிகளில் வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வேவுப்புலிகளும் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

ஒருபுறம் வெடிகுண்டுகளை தயாரிப்பதில் பயிற்சிகள் நடந்து வருகின்றன. இப்பயிற்சிகளின் போதும் விபத்துக்கள் ஏற்பட்டிருந்தன.

கரும்புலித் தாக்குதல்கள், மற்றும் வெடிமருந்துக்களை கையாள்வதற்கான பயிற்சிகள் புதிய அணிகளுக்கு அளிக்கப்பட்டபோதே வெடிவிபத்துக்கள் நேர்ந்தன.

வெடிகுண்டுகளை பயன்படுத்தி பாரிய அழிவுகளை வன்னிப் போர்முனையில் ஏற்படுத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

குறைந்த இழப்போடு எதிர்த்தரப்பில் பாரிய இழப்புக்களை உருவாக்கக்கூடிய கரும்புலித் தாக்குதல் உட்பட வெடிகுண்டுத் தாக்குதல்களை படையினர்மீது புலிகள் பிரயோகிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

மறுபுறத்தில் வேவுப் புலிகளும் படையினரது நிலைகளை தினசரி கவனித்து தகவல்கள் திரட்டி வருகின்றனர். 22.02.99 அன்று ஒட்டிசுட்டானில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்ட வேவுப்புலி ஒருவர் படையினர் சுட்டதில் பலியாகியுள்ளார்.

அதேபோல 21.02.99 அன்று பரந்தன் பகுதியில் உள்ள படையினரது முன்னரங்க நிலைகளைப் பற்றிய தகவல் அறிவதில் ஈடுபட்டிருந்த வேவுப்புலி ஒருவரும் பலியாகியுள்ளார்.

வேவுத் தகவல்கள் தொடர்ந்து திரட்டப்பட்டே வருகின்றன. ஒவ்வொரு பாரிய நடவடிக்கைக்கும் முன்னர் வேவுப் புலிகள் பலர் பலியாவதுண்டு.

வேவுப்புலிகளது தகவல்களை வைத்தே தாக்குதல் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

கடந்த சில மாதகாலமாக வன்னியில் தாக்குதலுக்கான தயாரிப்புக்களும், வேவு நடவடிக்கைகளுமே புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேவுத் தகவல்களை ஆராய்ந்த பின்னரே எந்த முனையில் தாக்குதல் நடத்துவது என்பதை இறுதியாக தீர்மானிக்கின்றனர்.

வேவுப் புலிகள் பலியானதாக புலிகள் வெளியே கூறமுடியாது. அதனால் தாக்குதலில் பலியானதாகவோ, படையினர் பதுங்கியிருந்து தாக்கியதாகவோதான் கூறுவர்.

அவ்வாறு கூறுவதை வைத்தே, புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் படையினர் அடிக்கடி ஊடுருவி பதுங்கியிருந்து தாக்குவதாக செய்திகள் கூறப்பட்டுவிடுகின்றன.

●●●

**யா**ழ் குடாநாட்டில் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கு தமிழ்க் கட்சிகளிடமே ஆட்கள் கேட்டுள்ளனர் படையினர்.

ஊர்காவல் படையினர் அணியும் நீலமும், காவியும் கலந்த சீருடை தரலாம். ஊதியமும் தரலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதனை வெளியே சொல்ல வெட்கப்பட்டு, பொலிஸ் சீருடை தருவதாக கூறினர். இராணுவ சீருடை தருவதாக்கூறினர் என்று தமிழ்க் கட்சிகள் ஒவ்வொருவிதமாக பத்திரிகைகளுக்கு கூறியுள்ளன.

பொலிஸ் சீருடையோ, இராணுவச் சீருடையோகூட தமிழ்க் கட்சி உறுப்பினர்களுக்கு தருமளவுக்கு இந்த முன்னாள் போராளிகள்மீது படையினருக்கு மதிப்பிருப்பதாக தெரியவில்லை.

சாதாரண ஊர்க்காவல் படையினர் அணியும் சீருடைதான் கொடுக்க முன்வந்துள்ளனர்.

இது மிகப் பரிதாபகரமான நிலை. ஒவ்வொரு இயக்கத்திலும் உள்ள சாதாரண உறுப்பினரைக்கூட இராணுவரீதியில் நோக்கினால், குறைந்த பட்சம் இராணுவ சிப்பாய்க்கு நிகராக என்றாலும் கருதப்பட வேண்டியவர்கள்.

அவர்களை போதிய பயிற்சியோ, பொலிஸ் பணிக்குரிய தகுதியோ இல்லாத காரணத்தால் ஊர்காவல் படையினராக உள்ளோருக்கு சமமாகவே படையினர் மதித்துள்ளனர். புலிகள் தங்களை போராளிகளாக மதிக்கவில்லை என்று கூறும் இக் கட்சிகள் படையினர் தங்களை ஊர்காவல் படையினராக நோக்கியதையிட்டு சிறிதளவும் கோபப்படவில்லை.

பொலிஸ் சீருடையோ, இராணுவ சீருடையோ வழங்கினால் இக் கட்சிகள் தங்கள் பெயரையே கெடுத்து விடுவார்கள் என்பதே படைத்தரப்பின் நினைப்பு.

சீருடை எதுவும் கொடுக்காமல் ஆயுதம் கொடுத்தாலும் இவர்களை அடையாளம் காணமுடியாமல் போகலாம்.

ஆகவேதான் ஊர்க்காவல் படைக்குரிய சீருடையும் ஊதியமும் தருவதாக கூறப்பட்டது.

ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய கட்சிகள் இதற்கு உடன்பட மறுத்துள்ளன. புளொட் பிரதிநிதி படையதிகாரியிடமே 'நல்ல திட்டம் இது' என்று வரவேற்றுள்ளார். மௌனமாக இருந்துவிட்டது ரெலோ. பின்னர் வெளியே வந்து பத்திரிகைகளுக்கு கூறும்போது, பயிற்சி தந்தால் பெற்றுக் கொள்வோம், சீருடை வேண்டாம் என்று கூறியுள்ளது ரெலோ.

தம் உறுப்பினர்களை இவ்வாறு தரம் குறைத்து மதிப்பிட்டதை ஆட்சேபிக்க எந்த வொரு தமிழ்க் கட்சியும் முன்வரவில்லை.

ஊர்க்காவல்படைக்குக்கூட ஆள்சேர்ப்பது கடினமாக இருப்பதால் தமிழ்க் கட்சிகளிடம் ஆட்கள் கேட்கப்பட்டுள்ளது. வெளியே இருந்து ஆள் சேர்க்க முடிந்திருந்தால் ஊர்க்காவல் படைக்குகூட தமிழ்க் கட்சி உறுப்பினர்களை நம்பிச் சேர்க்க முன்வந்திருப்பார்களா என்பது கேள்விக் குறிதான்!

ஊர்க்காவல் படையின் சீருடையைக் கொடுத்தால்கூட அந்த உடையைப் பயன்படுத்தியே வித்தை காட்டி விடுவார்களோ என்று மக்கள் பயந்து கொண்டிருக்கின்றனர்.

**நாரதர்**

## அதிரடி அய்யாத்துரை



***ஏப்ரல் முதலாம் திகதி*** முட்டாள்கள் தினத்தில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படுவது பற்றி கூறியிருந்தேன் அல்வோ? நண்பர் ஒருவர் காட்டமாக கடிதம் போட்டிருக்கிறார். "முதலாம் திகதி மட்டும் தான் முட்டாள்கள் தினம் என்று நீர் நினைப்பதுமாதிரி, சம்பந்தப்பட்டவையும் நினைப்பினம் என்றோ நினைத்துவிட்டீர்? நீர் ஒரு முட்டாள்!" என்று எழுதியிருந்தார். யோசித்துப்பார்த்த பின்னர் அவர் கூறுவதும் சரி மாதிரித்தான் பட்டது- என்ன, விளங்குதோ?!

***களுத்துறைச் சிறையில்*** முரசுக்கு அனுமதியில்லையாம். களவாக கொண்டுவந்து தரப்படுகிறதாம். விலை என்ன தெரியுமா? 200 முதல் 300 ரூபா வரை போகுதாம். சிறையில் இருந்து வந்த ஒருவர் ஐ.பி.சி. வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறிய தகவல்தான் அது. தடுப்பதின் நோக்கம் அதுதானோ? களுத்துறைச் சிறை அதிகாரியுடன் இது தொடர்பாக 'முரசு' நிர்வாகம் தொடர்பு கொள்ள இருக்கிறது.

***தொல்லை தவிர்ப்புக் குழுவால்*** பயன் இல்லை என்று அடிக்கடி சுட்டிக் காட்டுவதால், தற்போது ஒரு வித்தியாசமான அறிக்கை வருகிறது. மேலதிகாரியிடம் எடுத்துக் கூறியதால் குறிப்பிட்ட அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று செய்தி தருகினம். என்ன நடவடிக்கை என்று கூறினால் தானே உண்மை தெரியும்? சும்மா செல்லமாகத் திட்டுவதும் ஒரு நடவடிக்கைதானே!

***யாழ் குடாநாட்டில்*** சீருடையினர் தரப்பு இழப்புக்கள் வெளியே மூச்! ரெண்டு எழுத்தாரின் தாக்குதலில் மூன்றுபேர் பலியானதாகவும், அதைத் தொடர்ந்தே அப்பகுதி மக்கள்மீது ஆத்திரம் காட்டப்பட்டதாகவும் பட்சி கூறுகிறது. தாக்கியவர்களுக்கு இடமாற்றம்; இதுபோல இனிமேல் நடக்காது என்று உத்தரவாதம். இதுபோலத்தான் சென்ற ஆண்டும் ஆனைக்கோட்டையில் விளாசிப்போட்டு கூறப்பட்டது. மன்னிப்பும் கோரப்பட்டது. நிற்க, இடமாற்றம் தேவையானால் விண்ணப்பம் போடத் தேவையில்லை. தம் எண்ணப்படி சனத்துக்கு நாலு சாத்துச் சாத்தினால் போதும் என்ற மாதிரியல்லோ கிடக்குது! தமிழ்க் கட்சிகள் இது பற்றி மூச்சுக் காட்டவில்லை. சனத்திற்கு விழுந்தது ஜனநாயகத்தின் மீது விழுந்த அடியல்ல; 'ஜனநாயக அடி' என்று நினைச்சுப் போட்டினமாக்கும்.

***வவுனியாவில்*** கழகத்தினர் நாட்காட்டிகளை விற்பனை செய்திருக்கினம். நாட்காட்டியை மாட்டினால் சீருடையினர் தர்ம அடி கொடுப்பினமல்லோ? அதனால் "தம்பிமார், பணம் தருகிறோம், நாட்காட்டியை நீங்களே வச்சிருங்கோ குஞ்சுகள்" என்று கடைக்காரர் பவ்வியமாகக் கூறிப் போட்டினமாம். நாட்காட்டி ஒன்றுக்கு நூறு ரூபா வீதம் அறவிடப்பட்டதாம்.

***"கழகம் கூறி*** நாம் என்ன கேட்பது?" என்பதுதான் மற்றைய இயக்கத்தின் பிடிவாதம். இதனால் அரச அதிகாரிகள் உட்பட பொதுமக்கள் பலர் வரிவிடயத்தில் விடுத்த கோரிக்கையையும் அவை காது கொடுத்து கேட்க மறுத்துப் போட்டினமாம்.

***தங்களுடைய முகாமை*** தாங்களே தாக்கிய 24 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெலிகம்வெஹர என்ற பகுதியில் உள்ள முகாமில்தான் இது நடந்திருக்கிறது. முகாம் அதிகாரி துவக்கைத் தூக்கிச் சுட, அவருக்கும் வேலையைக் காட்டிப்போட்டினமாம். அவருக்கும் காயம். பாதாளக் கோஷ்டிக்கு ஆயுதம் விற்கத்தான் இந்த விளையாட்டு. 'பயங்கரவாத சக்திகள்' உள்ளேயே இருக்கினம் போலகிடக்கு!

***ஆறாம் வகுப்பு,*** ஒன்பதாம் வகுப்பு பாடப் புத்தகங்களில் வரலாறு திரித்து எழுதப்பட்டிருக்கிறது. ரெண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மேற்படி புத்தகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. புதிய புத்தகங்கள் தயாரித்துக் கொடுத்திருக்கினம். தமிழர்கள் வந்தேறு குடிகள் என்று அர்த்தப்பட வரலாறுகள் திரிக்கப்பட்டிருக்குது. இதையெல்லாம் ஏன் 'டமில்' கட்சிகள் கண்டுகொள்வதில்லை; கொள்கை கோட்பாடெல்லாம் ஆற்றில் போனபின்னர், வரலாறாவது அதுக்காகத் தகராறாவது?!

***கொழும்பு பொரளைப்*** பகுதியில் இந்து அலயமும், பௌத்த ஆலயமும் அக்கம் பக்கம் இருந்திருக்கின்றன. சமீபத்தில் பெரிய மதகுருவுக்கு ஞானம் பிறந்து, 'பௌத்த கோயில் அருகே இந்துக்கோயில் ஏன், எதற்கு' என்று கேட்டு இடித்துப் போட்டுவிட்டாராம். இதுவன்றோ ஜீவகாருண்யம்!

***குஷ்புவின்*** நடன நிகழ்ச்சிக்குக்கூட "ப்ளீஸ் வாருங்கள்; மிற் பண்ணுகிறோம்" என்கிறார் அரை குறை அறிவிப்பாளர் ஒருவர். அவசியமற்ற ஆங்கிலத் திணிப்புக்கள் தேவைதானோ? சைக்கிளை மிதியுந்து, என்று சொல்லத் தேவையில்லை. அதுபோல தேவையற்ற ஆங்கிலக் கலப்பும் வேண்டாம். அறிவிப்பாளர்களது தரமும் உச்சரிப்புத் திறனும் குறைந்து வருகிறது. அதனை மறைக்கவே ஆங்கில வார்த்தைகளைக் கலந்து சோடிக்கிறார்கள். விஷயம் அதுதான்!

இந்தவாரக் கவிதை:
***மாடுகூட***
***அம்மா என்கிறது!***
***மழலையோ***
***'மம்மி' என்கிறது!***



படிப்பகம்

www.padippakam.com

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# ராஜீவ் கொலை
# இருளில் சில வெளிச்சங்கள்




ராஜீவ்காந்தி கொலையான செய்தி இரவு 10.40 மணிக்கு பொலிஸ் ஐ.ஜியான ராகவனால்தான் முதன் முதலில் உறுதி செய்யப்பட்டு ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு அறிவிக்கப்பட்டது.

ராஜீவ் இறந்துவிட்டாரா, குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டோர் மத்தியில் ராஜீவ் உடல் கிடக்கிறதா என்பதை நன்கு உறுதி செய்ய வேண்டியிருந்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இருதய நோய் உள்ளவர். குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதும் அவரை பாதுகாப்பாக அவரது காவலர்கள் கொண்டு சென்றுவிட்டனர்.

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவரான மரகதம்சந்திரசேகரை அவரது மகன் காரில்



ராஜீவ் காந்தியைத் தேடுகிறார்கள். மூப்பனார், ஜெயந்தி நடராஜன்

ஏற்றிக்கொண்டு பறந்து போய்விட்டார்.

கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் ராஜீவை கைவிட்டு தலை தெறிக்க ஓடிவிட்டனர்.

மூப்பனார், ஜெயந்தி நடராஜன், போன்ற சிலர்தான் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிடாது ராஜீவ்காந்தியைத் தேடினார்கள்.

ஜெயந்தி நடராஜன் துணிச்சலான பெண்மணி. பிணங்களுக்கு இடையே ராஜீவ் காந்தி கிடந்துவிடக்கூடாதே என்று வேண்டியபடியே தேடிக் கொண்டிருந்தார்.

ராஜீவ்காந்தியின் பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவர் பிரதீப் குப்தா. அவர் தரையில் மல்லாந்து கிடப்பதை ஜெயந்தி நடராஜன் பார்த்துவிட்டார். மூப்பனாரும் அவரைக் கவனித்துவிட்டார்.

பிரதீப் குப்தாவின் உடல் முழுக்க இரத்தம். அவர் ஏதோ முனகிக் கொண்டிருந்தார்.

மூப்பனார் மடங்கி அமர்ந்து, பிரதீப் குப்தாவின் தலையைத் தூக்கி உடலை அசைக்க முயற்சி செய்தார்.

மூப்பனாரைப் பார்த்து குப்தா ஏதோ முனகினார். 'ராஜீவ்ஜி எங்கே' என்று அழுதபடியே கேட்டார் மூப்பனார்.

குப்தா ஏதோ சொல்வதற்காக உதடுகளை அசைத்தார். வார்த்தைகள் வரவில்லை.

காற்றுத்தான் வந்தது. மறு நொடியே அவர் தலை துவண்டுபோனது. மூப்பனார் தன் தலையில் அடித்துக்கொண்டார்.

அதே நேரம் ஜெயந்தி நடராஜ னின் பார்வை பிரதீப் குப்தாவின் கால் முட்டியருகே சென்றது.

அங்கே.. அங்கே... கண்ட காட்சியால்

ஜெயந்தி நடராஜனுக்கு மயக்கம் வருவது போலிருந்தது.

தன்னையறியாமலேயே ஜெய்ந்தி நடராஜன் வாய்விட்டு கத்தியபோதுதான் மூப்பனாரும் கவனித்தார்.

பிரதீப் குப்தாவின் முட்டிமீது ஒரு தலை குப்புறக் கிடந்தது.

பின் தலையைப் பார்த்ததுமே அது ராஜீவின் தலை என்பது மூப்பானார், ஜெயந்தி நடராஜன் இருவருக்கும் தெரிந்துவிட்டது.

'எல்லாம் முடிந்து போய்விட்டது, எல்லாமே முடிந்து போய்விட்டது' என்று மூப்பனார் ஒரு குழந்தை போன்று அழத் தொடங்கிவிட்டார்.

பிரதீப் குப்தா என்ற பாதுகாப்பு அதி காரி, மார்ச் மாதத்தில் இந்திய சஞ்சிகை யான 'இந்தியா ருடே' செய்தியாளரிடம், "பாதுகாப்புக் குறித்து ராஜீவ் காந்தி அசட்டையாக இருக்கிறார். ஆனால் நாங்கள் ஜாக்கிரதையாக இருக்கிறோம். ராஜீவ் ஜிக்கு ஏதாவது நிகழ்ந்தால் அது என் பிணத்தின் மீதுதான் நடக்கும்" என்று கூறியிருந்தார்.

பிரதீப் குப்தா இறந்த பின்னர் 'இந்தியா ருடே' அவர் கூறியதை வெளியிட்டது.

ராஜீவ் காந்தியுடன் செங்கல்பட்டு மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் முகமது இக்பாலும் கொல்லப்பட்டிருந்தார். பெரம்புதூர் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்தவர் அவர்தான்.

ராஜீவ் கொல்லப்பட்ட செய்தி மறுநாள் காலையில்தான் இந்தியா முழுக்கப் பரவியது.

### காரணம் யார்

ராஜீவ் கொலைக்கு காரணம் யார்? உடனடியாக கிளம்பிய கேள்வி அதுதான்.

விடுதலைப் புலிகளா?

சீக்கிய தீவிரவாதிகளா?

எங்கும் அதே கேள்விதான் எதிரொலித்தது.

கொலை நடந்த செய்தி அறிந்ததும், இந்திய உளவுப் பிரிவுகளில் ஒன்றான 'றோ' இலண்டனில் இருந்த கிட்டுவுடன் தொடர்பு கொண்டது.

கிட்டுவுடன் தொடர்ந்தும் தொடர்பை பேணி வந்தது 'றோ'. அதனால் உடனடியாகத் தொடர்பு கொண்டு விசாரித்தது.

"எமக்கும் இக் கொலைக்கும் தொடர்பு கிடையாது" என்று திட்டவட்டமாக கூறிவிட்டார் கிட்டு.

கிட்டுவுக்கு உண்மையிலேயே அப்போது தகவல் தெரிந்திருக்கவில்லை.

ஆனால் கிட்டுவே அப்படி திட்டவட்டமாக மறுத்தமையால், புலிகளுக்கும் இக் கொலைக்கும் தொடர்பில்லை என்று அரசுக்கு கூறிவிட்டது 'றோ'.

இதனால் கொலைக்கு யார் காரணம் என்று உடனடியாக கூறமுடியாத நிலை இந்திய அரசுக்கு ஏற்பட்டது.

கலிபோர்னியாவில் உள்ள பத்திரிகை அலுவலகம் ஒன்றுக்கு மர்ம தொலைபேசி அழைப்பு.

"விடுதலைப் புலிகள் பேசுகிறோம். ராஜீவ் கொலைக்கு நாங்கள்தான் காரணம்" என்று அந்த மர்மக்குரல் கூறியது.

புலிகளை மாட்டிவிட வேறு சக்திகள் செய்த சதிதான் ராஜீவ் கொலையோ? என்று அதனால் சந்தேகம் ஏற்பட்டது.

### மறுப்பறிக்கை

விடுதலைப் புலிகளது சர்வதேச பொறுப்பாளர் கிட்டு உடனடியாக மறுப்பொன்றை வெளியிட்டார்.

ராஜீவ் கொலைக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. எம்மால் மட்டும்தான் வெடி குண்டுகளை தயாரிக்க முடியும் என்றில்லை.

ராஜீவ் கொலை தொடர்பான விசாரணைக்கு உதவத் தயாராக இருக்கிறோம். இந்தியா விரும்பினால் கொலையாளிகளை கண்டு பிடிக்க உதவத் தயாராக இருக்கிறோம்' என்று கிட்டு கூறினார்.

இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பல கிட்டுவை தொடர்பு கொண்டு பேட்டிகள் எடுத்து வெளியிட்டன.

கொலையை செய்தது யார்? சந்தேகம் நீடித்தது.

கொலையான இடத்தில் உடல் சிதறிய நிலையில் கிடந்த பெண்மீது புலனாய்வாளருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அப்பெண்ணின் தலை தனியாகக் கிடந்தது. இடுப்புக்கு மேற்புறம் சிதைவடைந்திருந்தது.

'உடம்பில் குண்டைக் கட்டி வந்து வெடிக்க வைத்திருக்கலாம்' என்ற சந்தேகம் அப்போது தான் வந்தது. எனினும் அது உறுதியாக வில்லை.

பலியானவர்களது உடல்கள் யாவும் அடையாளம் காணப்பட்டுவிட்டன. அப் பெண்ணின் உடலுக்கு மட்டும் யாரும் உரிமை கோரவில்லை என்பதும் சந்தேகத்துக்கு தூபமிட்டது.

### எஸ்.ஐ.டி

ராஜீவ் கொலையை விசாரிக்க சிறப்புப் புலனாய்வு குழுவை (எஸ்.ஐ.டி) நியமித்தது மத்திய அரசு.

இக் குழுவுக்கு 'தலைமை ஏற்றவர் ஒரு தமிழர். பெயர் கார்த்திகேயன். ஐ.ஜி (இன்ஸ்பெக்டர் ஜெனரல்) தரத்தில் இருந்தவர். 1964ம் ஆண்டு முதல் பொலிஸ் சேவையில் இருந்தவர்.

சிறப்பு புலனாய்வுக் குழுவின் முக்கிய அதிகாரிகளாக அமுத்காந்த், அமித் வர்மா, வினோத் ராஜு, புருஷோத்தமன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

சென்னையில் சிறப்பு புலனாய்வு குழுவுக்கு தனி அலுவலகம் தரப்பட்டது.

அதற்கு 'மல்லிகை' என்று பெயர் சூட்டப்பட்டது. அங்குதான் சூடான விசாரணைகள் ஆரம்பமாயின.

சிறப்புப் புலனாய்வுக் குழுவினருக்கும் முதலில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்றே இருந்தது.

மே மாதம் 23ம் திகதிவரை எந்த உருப்படியான தகவலும் புலனாய்வுத் துறைக்கு கிடைக்கவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் கமரா ஒன்று கிடந்தது.

அது ஹரிபாபுவின் கமரா என்பதோ, புலிகளுடன் தொடர்புடையவர் என்பதோ அப்போது புலனாய்வுக் குழுவினருக்கும் தெரியாது.

அந்தக் கமரா பெரும் திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதும், பல முக்கிய தகவல்களை தனக்குள் வைத்திருக்கிறது என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை.

அதனால் கமராவில் அதிக கவனம் செலுத்தாமல்; ஏனைய விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இந்தியாவின் பிரபல தடவியல் நிபுணர் சந்திரசேகர். ராஜீவ் கொலை வழக்கில் இவருக்கும் முக்கிய பாத்திரம் இருக்கிறது.

தடயங்கள் ஒவ்வொன்றையும் கண்கொத்திப் பாம்பாக ஆராய்ந்த சந்திரசேகர், தற்கொலை அங்கியின் சிதறிய பாகங்களை கண்டு பிடித்தார்.

காஞ்சிபுரம் மருத்துவமனையில் தாணுவின் சிதைந்த உடலின் பாகங்கள் பாதுகாக்கப்பட்டன.

### கமரா

இதே நேரம் கொலை நடந்த இடத்தில் கிடந்த கமராவை மீட்க சுபா ஸ்டூடியோ உரிமையாளர் சுபா சுந்தரம் பல முயற்சிகள் செய்திருக்கிறார்.

படப்பிடிப்பாளரான ஹரிபாபுவின் தந்தை அதற்கு முன்னர் சுபாசுந்தரத்தை சந்தித்து, தன் மகன் எங்கே? என்று கேட்டிருக்கிறார்.



கார்த்திகேயன்

அதற்கு சுபாசுந்தரம் சரியாக பதில் கூறவில்லை. இதனால் ஹரிபாபுவின் தந்தை பொலிசில் புகார் கொடுத்திருக்கிறார்.

கொலை நடந்த இடத்தில் கிடந்த கமரா தன்னுடையது என்றும், அதனை ஹரிபாபு பெற்றுச் சென்றதாகவும் பொலிசில் கூறிய சுபாசுந்தரம், கமராவை தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரியிருக்கிறார்.

இந்த தகவல்கள் புலனாய்வுப் பிரிவுக்கு எட்டியதும், சுபாசுந்தரம்மீது அவர்களுக்கு லேசான சந்தேகம் ஏற்பட்டது.

உடனடியாக அந்தக் கமரா எடுத்த படங்களை உற்று நோக்கினார்கள்.

நோக்க, நோக்க பல வெளிச்சங்கள் கிடைத்தன. இருட்டாக இருந்த புலனாய்வை கமரா தந்த தகவல்கள் வெளிச்சமாக்கின.

ஒரு பெண் மாலையுடன் நிற்கிறார். அவர் அருகே சிலர் நிற்கின்றனர். அதே பெண் ராஜீவ் காந்திக்கு மாலையிட நெருங்குகிறார். அதன்பின்னர் எதுவுமில்லை.

காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு விரைந்தது புலனாய்வுக் குழு.

அங்கு சிதைந்திருந்த பெண்ணின் உடலில் காணப்பட்ட சுரிதாரின் நிறமும், படத்தில் கையில் மாலையுடன் நின்ற பெண்ணின் சுரிதாரும் ஒரே நிறத்தில் இருப்பதைக் கண்டு கொண்டனர்.

தடவியல் நிபுணர் சந்திரசேகரும் அதனை உறுதி செய்தார். புலனாய்வுக் குழுவுக்கு நம்பிக்கை பிறந்தது.

அதனையடுத்து அப் பெண்ணின் தலையை வைத்து தோற்றத்தை கண்டறிய பலவிதமான முயற்சிகள் நடந்தன.

தடவியல் நிபுணர் சந்திரசேகர் தன் முயற்சியில் வெற்றிபெற்றபோது, படத்தில் உள்ள பெண்ணும், உடல் சிதறிய பெண்ணும் ஒருவர் தான் என்ற உண்மை உறுதியானது.

இக்கட்டத்தில் பெண் ஒருவரே ராஜீவை கொன்றிருக்கலாம் என்ற சந்தேகம் பத்திரிகைகள் மூலம் வெளியானது.

தமிழக காவல்துறை பொறுப்பதிகாரி யாக இருந்து ஓய்வு பெற்றவர் அருண்.

செய்திகளைப் பார்த்த அருண் புலனாய்வுக்குழுவுக்கு முக்கிய தகவல் ஒன்றை தந்தார்.

ஆங்கிலப் படம் ஒன்றில் பெண் ஒருவர் இடுப்பில் குண்டைக் கட்டிச் சென்று ஜனாதிபதியை கொலை செய்கிறார். அது போல ராஜீவ் கொலையும் நடந்திருக்கலாம் என்பதே முன்னாள் ஐ.ஜி. அருண் கூறிய ஊகம்.

அருண் கூறிய படத்தின் பெயர், 'டெல்டா ;,போர்ஸ் II'

(ஆனால் அப்படம் வெளியாக முன்னரே ஜெய்சங்கர் நடித்த தமிழ்ப்படம் ஒன்றில் பெண் ஒருவர் இடுப்பில் குண்டோடு சென்று தாக்குதல் நடத்துவது போன்ற காட்சி வருகிறது)

அருண் கூறியதை வைத்து ஆராய்ந்த போது, அது உண்மைதான் என்பது புலனாகியது.

ராஜீவை கொல்ல வந்த பெண்ணும் குண்டை அணிந்து வந்திருக்கிறார் என்பதை தடவியல் நிபுணர் உறுதி செய்தார்.

அதனால் விசாரணையில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து அப் பெண்ணின் அருகே நின்றவர்கள்மீது புலனாய்வுத் துறையின் பார்வை பாய்ந்தது.

காங்கிரஸ் பிரமுகர்கள் பலரை அழைத்து புகைப்படங்களை காண்பித்தனர்.

கையில் மாலையுடன் நிற்கும் பெண்ணையோ, அவரது அருகில் நிற்கும் ஆட்களையோ எங்காவது பார்த்ததுண்டா, தெரியுமா? என்று துருவத் தொடங்கினார்கள்.

பலன் கிட்டவில்லை.

சிறப்புப் புலனாய்வுக்குழு அடுத்த முயற்சியில் இறங்கியது.

ராஜீவ் கொலை நடந்த இடத்தில் மர்மமாக கிடந்த கமராவில் எடுக்கப்பட்ட படம் இதுதான் என்று செய்தி கூறி பத்திரிகைகளுக்கு புகைப்படங்களை விநியோகித்தனர்.

அதற்குப் பலன் கிடைத்தது.

கையில மாலையுடன் நின்ற பெண்ணையும், குறிப்புப் புத்தகத்துடன் நிற்கும் ஆணையும் தெரியவில்லை. ஏனைய இருவரையும் தெரியும் என்று கூறினார்கள் பலர்.

அவர்களில் ஒருவர் லதா கண்ணன். இன்னொருவர் அவரது மகள் கோகிலா கண்ணன்.

இருவரும் குண்டுவெடிப்பில் தாணுவின் அருகில் நின்று பலியானவர்கள்.

அவர்கள் அடையாளம் காணப்பட்டதால், தாணு, சிவராசன் இருவரும்தான் சந்தேகத்திற்குரியவர்கள் என்பது உறுதியானது.

அதனையடுத்து தாணு, சிவராசன் ஆகியோரது படங்களை தனித்தனியாக வெளியிட்டனர். அவர்களைப் பற்றி தகவல் தருவோருக்கு ஐந்து இலட்சம் ரூபா சன்மானம் இந்திய அரசால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகமும் அந்தத்தகவலை மும் மொழிகளிலும் விளம்பரமாக வெளியிட்டது.

இலங்கை அரசின் உளவுத்துறை மற்றும், தமிழ்க்கட்சிகளது உதவியும் கோரப்பட்டது.

இலங்கை அரசின் தேசிய புலனாய்வுத் துறையினர் தமிழ்க் கட்சிகளிடம்சிவராசன், தாணு பற்றிய தகவல்கள் இருக்குமா? என்று அறிவதற்கு ஓடுப்பட்டுத் திரிந்தனர்.

தகவல்கள் கிட்டவில்லை. யார், எவர் என்ற பெயர்களைக்கூட அறியமுடியவில்லை.

அறியமுடியாமலேயே போயிருக்கும்,

திருத்துறைப்பூண்டியில் புலி உறுப்பினர் ஒருவர் செய்த சிறு தவறு, புலனாய்வுக்குழுவினருக்கு ராஜீவ் கொலையின் இன்னொரு முடிச்சை அவிழ்க்க உதவியது.

(தொடர்ந்து வரும்)

## கிட்டு மறுப்பு

### ராஜீவ் படுகொலை–புகார்களுக்கு மறுப்பு

ராஜீவ் படுகொலைக்கும் தமது இயக்கத்திற்கும் எள்ளவும் தொடர்பில்லை என்றார் தளபதி கிட்டு.

லண்டனில் இருக்கும் விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு அளித்த பேட்டி:

ராஜீவ்காந்தி படுகொலைக்கும் எங்கள் இயக்கத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. நாங்கள் ஒருபோதும் இந்திய அரசியலில் தலையிட்டது இல்லை.

நாங்கள் இதில் தலையிடவே இல்லை. காலம் வரும்போது இதை புரிந்து கொள்வீர்கள்.



**கேள்வி:** இலங்கைக்கு ராஜீவ் அமைதிப்படையை அனுப்பியதைக் கண்டித்து விடுதலைப்புலிகள் புகார் கூறுகிறார்களே?

**பதில்:** இந்தியாவிலேயே பல பிரச்சினைகள் உள்ளன.

**கேள்வி:** தி.மு.க. ஆட்சிக் கலைப்பைக் கண்டித்து இந்த சம்பவம் நடந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறதே?

**பதில்:** தி.மு.கவிற்காக செயற்பட நாங்கள் ஒன்றும் கூலிப்பட்டாளங்கள் அல்ல மேலும் தி.மு.க.மீது தனிப்பட்ட அக்கறை எதுவும் எங்களுக்குக் கிடையாது. எனவே, இந்த சம்பவத்தில் எங்களுக்கும் தி.மு.கவிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. நீண்ட நாட்களாகவே இந்தியாவில் உள்ள அரசியல் காரணமாக எதற்கு எடுத்தாலும் எங்கள் மீது புகார் கூறுகின்றனர்.

**கேள்வி:** கலிபோர்னியாவில் ஒருவர் பத்திரிக்கை அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு விடுதலைப்புலிகள் சார்பில் பேசியுள்ளார். நாங்கள் தான் ராஜீவைக் கொன்றோம் என்று கூறியுள்ளாரே?

**பதில்:** ஒரு பத்திரிகை ஆபீசுக்கு போன் செய்து யாரும் எதுவும் கூறலாம். அப்படிப்பட்ட முட்டாள்கள் கலிபோர்னியாவில் அதிகம்பேர் உள்ளனர். ஆனால் பத்திரிகையாளர்கள் முட்டாள்கள் இல்லை. எனது குரல் பல பத்திரிக்கைகள் காதுக்கு நன்றாகத் தெரியும் என்றார் கிட்டு. மேலும், தனது பேட்டியில் நான் அழைப்பு விடுத்ததும் இந்திய அரசு சார்பில் தங்களை யாரும் சந்திக்கவில்லை என்றும், தமிழ் நாட்டில் நிறைய தமிழ் குழுக்கள் பயிற்சி பெற்றிருப்பதாகவும் இந்தியாவிலேயே விலை குறைவாக ஆயுதம் கிடைக்கிறது என்றும் கூறியுள்ளார்.

(இந்தியாவிலிருந்து வெளியாகும் சண்டே 23.06.91)

## விடுபட்ட தகவல்

சென்னை நந்தனத்தில் நடைபெற்ற வி.பி.சிங்கின் கூட்டத்தில் ராஜீவ் கொலைக்கான ஒத்திகை பார்க்கப்பட்டதாக விபரித்திருந்தேன் அல்லவா.

அதில் ஒரு தகவல் விடுபட்டு விட்டது. அக் கூட்டத்தில் பிரதமர் வி.பி.சிங்குக்கு தாணு மாலை அணிவித்ததுடன், அவர் காலைத் தொட்டு ஆசிவாங்குவது போலவும் பாவனை செய்துவிட்டே மேடையைவிட்டு இறங்கினார்.

ராஜீவுக்கும் மேடையில் வைத்து மாலை மிடுவதுதான் முதல் தீட்டப்பட்ட திட்டம். மேடையில் மாலை போட அனுமதி கிடையாது என்பதாலேயே திட்டத்தில் உடனடியாக மாறுதல் செய்யப்பட்டது. மேடையை நோக்கிவரும் போதே மாலையிட்டார் தாணு.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# புலிகளின் தாக்குதல் நிறுத்தம்!

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அப்பட்டமான தேர்தல் முறைகேடுகளில் ஆளும் தரப்பு இறங்கியதால், உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் அதன் இமேஜ் பாரிய சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிக்காவின் இமேஜை மறுபடி கட்டியெழுப்ப பலத்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

வெளிப்படையாகவே முறைகேடுகளில் இறங்கி கையும், களவுமாக மாட்டிக்கொண்ட தமது அணியினர்மீது சந்திரிக்கா அம்மையாரும் சீற்றம் அடைந்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் புகைப் படம் எடுத்து ஆவணப்படுத்துமளவுக்கு தமது அணியினர் விவேகமின்றி பகிரங்கமாக அத்துமீறல்களில் ஈடுபட்டமை அம்மையாருக்கே அதிர்ச்சியளித்துள்ளது.

இவ்வாறு மாட்டிக் கொள்ளுவார்கள் என்று அம்மையார் மட்டுமன்றி, முக்கிய அமைச்சர்கள்கூட எண்ணியிருக்கவில்லை. அதனால்தான் தேர்தல் முடிந்த சூட்டோடு நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், 'அங்கு நடந்த சிறு சம்பவங்களை பெரிதுபடுத்த வேண்டாம்' என்றும், 'ஐ.தே.கட்சியினரே வன்முறைகளில் ஈடுபட்டனர்' என்றும் துணிந்து கூறியிருந்தனர்.

ஆனால் மறுநாளே தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் வெளியிட்ட புகைப்பட ஆதாரங்கள் ஆட்சியாளரின் முகத்தில் கரி பூசியதுடன், மறுப்புக்களை கேலிக்குரியதாக மாற்றியிருந்தது.

இதன் பின்னரே தமது தரப்பு முறைகேடுகளை ஆட்சியாளர்கள் மென்று விழுங்கி ஒப்புக் கொண்டனர்.

தவறுகளை ஒப்புக்கொள்வதை இருவிதமாக வகைப்படுத்தலாம். உண்மையாகவே மனம் வருந்தியோ, மனம் திருந்தியோ ஒப்புக் கொள்வது முதல் வகையானது.

மறைக்கவே முடியாத நிலையில் தவறை ஒப்புக் கொள்வது இரண்டாவது வகையானது.

உண்மையாகவே ஒருவர் தனது தவறுக்காக வருந்துகிறாரோ இல்லையா என்பதை எவ்வாறு கண்டு பிடிப்பது? என்று கேள்வி எழுகிறது.

தவறை ஒப்புக் கொள்வதோடு நின்றுவிடாது, அத்தவறுக்கான பரிகாரம் காண்பதும், மேற்கொண்டு அதே தவறு இடம்பெறாதவகையில் நடவடிக்கை எடுப்பதுவுமே, உளப்பூர்வமாக தவறை ஒப்புக்கொள்வதன் வெளிப்பாடாகும்.

இங்கு ஆட்சியாளர்களால் இதுவரை தவறுகள் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட பல சம்பவங்கள், தவிர்க்க முடியாமல் ஒப்புக் கொள்ளப்பட்டவையாகவே அமைந்திருக்கின்றன.

சில உதாரணங்களை நாம் நோக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

களுத்துறை சிறையில் தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டபோது, புலிகள்தான் கொல்லப்பட்டனர் என்றே அரச பிரசார சாதனங்கள் சித்தரித்தன.

சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் செய்த பின்னரே, சிறைக் காவலர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டதுடன், விசாரணைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை எந்தவொரு அதிகாரிமீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விசாரணைக் குழு விசாரணைக்கு நேர்ந்த கதி பற்றியும் தெரியவில்லை.

அதே களுத்துறை சிறைச்சாலையில் தற்போது தமிழ்ப் பெண் கைதிகள் கேவலமாக நடத்தப்படுவதாக புகார்கள் வந்த வண்ணமே உள்ளன. இம்முறை பெப்ரவரி 04ம் திகதியன்று உண்ணாவிரதம் இருந்த தமிழ்ப் பெண் கைதியும் தாக்கப்பட்டுள்ளார்.

எனவே, களுத்துறை சிறை விவகாரத்தில் விசாரணைக் குழு நியமிப்பு பற்றிய அரசின் அறிவிப்பானது, வெளியுலக கண்டனங்களை தணிப்பதற்கும், அரசின் இமேஜை பாதுகாப்பதற்குமான முயற்சியாகவே விளங்கியிருந்தது. தவறுக்கு காரணமானவர்களை கண்டறிந்து தண்டனை கொடுப்பதாகவோ, மேலும் அதே தவறுகள் நிகழாது தடுப்பதற்கான விருப்பமாகவோ அமைந்திருக்கவில்லை.

யாழ் குடாநாட்டில் செம்மணி புதைகுழி விவகாரத்தை முடிமறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல.

குற்றவாளி கூறிய வாக்குமூலத்தை கவனத்தில் எடுக்க முடியாது என்று பொறுப்பான அமைச்சரான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறியிருந்தார்.

நீதிமன்றத்தில் கூறியது பொய் என்று ராஜபக்ஷவிடம் கையொப்பம் பெறுவதற்கு சிறையில் வைத்தே மிரட்டலும், தாக்குதலும் நடந்திருந்தது.

சகல முயற்சிகளும் தோல்வி கண்ட பின்னர், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களது கண்டனங்கள் பரவலான நிலையிலேயே, புதைகுழி தோண்டப்படும் என்று தவிர்க்கமுடியாமல் அரசு அறிவித்திருந்தது.

அதேசமயம் யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விவகாரத்தில் தொடர்புடைய சீருடை அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, மனித உரிமை மீறல்கள் முதற்கொண்டு, ஜனநாயக உரிமை மீறல்கள்வரை முடிமறைக்க முடியாது அம்பலமாகும் நிலையிலேயே ஆட்சியாளர்கள் அவற்றை ஒப்புக்கொள்ள முன்வருகின்றனர்.

மேலும் முடிமறைப்பதைவிட ஒப்புக்கொண்டுவிட்டோ, நடவடிக்கை எடுக்கப்படப் போவதாக காண்பித்துவிட்டோ, குறிப்பிட்ட பிரச்சனையை படிப்படியாக அமுக்கி விடுவதே சாலச் சிறந்தது என்கின்ற உத்தியாகவே அவ்வாறு முன்வருகின்றனர்.

யார் ஆட்சியில் இருந்தாலும் இத்தகைய அணுகு முறையைத்தான் காண முடிந்திருக்கிறது.





வடமேல் மாகாணசபை தேர்தல் முறைகேடுகள் விடயத்திலும், முடி மறைக்க முடியாத நிலையிலேயே முறைகேடுகளை ஆராய கமிட்டி நியமிக்கப்போவதாக அரசு அறிவித்திருந்தது.

அதுமட்டுமன்றி ஆளும் தரப்புக்குள் சிலர் கட்டுப்பாடின்றியும், தன்னிச்சையாகவுமே முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த தற்போது பலத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

சமீபத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

அக் கூட்டத்தில் தேர்தல் முறைகேடுகள் குறித்து அம்மையார் சீற்றம் காட்டியதாகவும், சில அமைச்சர்கள், எம்.பிகள் தொடர்பாக அதிருப்தி தெரிவித்தாகவும் அரச பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவையெல்லாம் ஜனாதிபதியின் இமேஜை தூக்கி நிறுத்துவதற்கான முயற்சிகளில் அடங்கியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் தேர்தல் முறைகேடுகள்மீது அதிருப்தியைக் காட்டுவதனால், தேர்தலையே மறுபடி நடத்த ஏற்பாடுகள் செய்திருக்க முடியும்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலை முற்றாக இரத்துச் செய்துவிட்டு மறு தேர்தல் நடத்துமாறு ஜனாதிபதி அறிவித்திருப்பாரேயானால் அதுவே தவறுக்கான உண்மையான பரிகாரமாகவும், உளப்பூர்வமான நடவடிக்கையாகவும் திகழ்ந்திருக்கும்.

சில அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முறைகேடாக நடந்ததாக அறிக்கைகள் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி கட்சிக் கூட்டத்தில் கூறியதாகவும் அரச பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் யார் என்ற விபரம் மட்டும் கூறப்படவில்லை என்பதும் அவதானிக்கத் தக்கதாகும்.

அமைச்சர்கள் நேரடியாக முறைகேடுகளில் சம்பந்தப்பட்டதாக திட்டவட்டமான தகவல்கள் வெளியாகியிருந்தன. எனவே ஆட்சியாளரால் அதனை மறுக்க முடியாத நிலையில், அவர்கள் கண்டிக்கப்பட்டது போன்ற சித்தரிப்பையே மேற்கண்ட செய்திகள் ஏற்படுத்தியுள்ளன.

உண்மையாகவே தலைமைப்பீடத்தின் விருப்பங்களுக்கு மாறாக சிலர் செயற்பட்டிருந்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு பூரண அதிகாரம் கொண்டவரா கவே ஜனாதிபதி சந்திரிக்கா விளங்குகிறார்.

அவ்வாறு இருந்தும், 'மிகப் பாரிய ஜனநாயகப் படுகொலை' என்று பலராலும் வர்ணிக்கப்படும் தேர்தல் முறைகேடுகளில் சம்பந்தப்பட்ட வர்கள்மீது கண்டனம் மட்டுமே தெரிவிக்கப்பட்டது என்பது தகுந்த பரிகாரமாகாது.

இன்னொன்றையும் உற்று நோக்க வேண்டும். தேர்தல் முறைகேடுகள் என்பவை வாக்களிப்பு தினத்தன்று மட்டுமே நடைபெறும் சம்பவங்களை குறிப்பன அல்ல.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள் அனைத்தும் தேர்தல் முறைகேடுகளுக்குள் அடங்குகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் பற்றிய புகார்கள் தெரிவிக்கப்பட்டன. எதிர்க்கட்சி மட்டுமன்றி பத்திரிகைகளும் முறைகேடுகள் பற்றி போதிய தகவல்களை வெளியிட்டன.

தேர்தல் தினத்தன்று பாரிய உச்சக்கட்ட முறைகேடு நடப்பதற்கான அடித்தளம் போடப்பட்டு வருவதை நாடு முழுக்க அறிந்து கொண்டது. ஆளும் தரப்பு தலைமை தமது தொண்டர்களை கட்டுப்படுத்தவும் போதிய கால அவகாசம் இருந்துள்ளது.

ஆனால், எவ்வாறெனினும் வெற்றி பெற்றுவிட்டு, பின்னர் சமாளித்துக் கொள்ளலாம் என்பது போன்றே ஆளும் தரப்பு தலைமை மௌனம் சாதித்திருந்தது.

இந்நிலையில், தற்போது குறிப்பிட்ட சிலர்தான் காரணம் என்பதுபோல காண்பிக்க நினைப்பது, திட்டமிட்டு நடைபெற்ற தேர்தல் முறைகேடுகளை, ஒரு சிலரது கட்டுப்பாடற்ற செயல் என்று கூறி, அரசின் இமேஜை பாதுகாக்கும் முயற்சியேயாகும்.

ஒரு சில வாக்குச் சாவடிகளில் முறைகேடுகள் நடைபெற்றிருந்தால் அதனை ஒரு சிலரது கட்டுப்பாடற்ற தன்னிச்சையான செயல் என்று கூறிவிடலாம்.

மிகச் கச்சிதமாக திட்டமிட்டு ஒரே நேரத்தில் பரவலாக நடைபெற்ற வன்முறைகளை அவ்வாறு கூற இயலாது.

எவ்வாறு இருப்பினும் இம்முறை எத்தகைய உத்திகளாலும் தமது இமேஜை சரிவில் இருந்து மீட்க அரசால் முடியவில்லை.

இதேவேளை வடமேல் மாகாணசபை தேர்தல் முறைகேடுகளை இனப்பிரச்சனையோடு தொடர்பற்ற பிரச்சனைபோல தமிழ்க் கட்சிகளும், சில விமர்சகர்களும் திசை திருப்பியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் முறைகேடுகள் நடக்கவில்லையா? வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தலில் முறைகேடுகள் நடக்கவில்லையா? என்று இவர்கள் சப்பைக் கட்டு கட்டுகின்றனர்.

அப்போதும் முறைகேடுகள் நடந்தன என்பது உண்மையே. ஆனால் தற்போது தமிழ் பேசும் தரப்பின் தேவை என்ன? இன்றைய ஆட்சியாளர்கள் மனித உரிமைகள் பற்றி அக்கறையாக வெளியுலகில் பேசி வருகின்றனர். யுத்தத்தில் தமிழ் பேசும் மக்களது மனித உரிமைகள் புதைகுழிகளில் தடயம் இன்றி மறைந்து கொண்டிருக்கின்றன.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படுவது, தமிழ் பேசும் தரப்புக்கு உலக அனுதாபம் ஏற்படுவது போன்றவற்றை தடுப்பதற்கு தம்மை சமாதான விரும்பிகளாகவும், ஜனநாயகத்தை மறு சீரமைப்பவர்களாகவும் ஆட்சியாளர்கள் காண்பித்து வருவதே தடைக்கல்லாக இருந்துள்ளது.

ஆனால் ஆட்சியாளர்கள் தம்மைச் சுற்றி தாமே கட்டியெழுப்பிய சமாதான, ஜனநாயக அரசு என்ற தோற்றப்பாட்டை இன்று அவர்களது நடவடிக்கைகளே தகர்க்கத் தொடங்கியுள்ளன.

இது தவிர்க்கமுடியாத ஒரு கட்டமாகும். 'முதலாளித்துவம் தனக்குரிய சவக்குழியை தானே தோண்டும்' என்று கார்ல் மார்க்ஸ் கூறியிருந்தார். அதுபோல அரசுகளும் தமது இமேஜை தாமே தகர்க்கின்றன.

யுத்தம் கள வெற்றிகள் கிட்டாத நிலையில் தேர்தல் வெற்றிக்கு குறுக்கு வழி அவசியமாகியது. இவ்வாறான அவசியங்கள் தமது இமேஜை தாமே தகர்க்கும் நிலைக்கு நம்நாட்டு ஆட்சியாளரையும் கொண்டு செல்லுகின்றன.

இந்த சந்தர்ப்பத்தை தமிழ்பேசும் தரப்பு தமக்கு கிடைத்த வரப்பிரசாதமாக கருதி, உலக அரங்கில் அனுதாபத்தை திரட்ட முற்பட வேண்டும். அதனைவிடுத்து ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் முறைகேடுகள் நடக்கவில்லையா? என்றெல்லாம் ஆட்சியாளருக்கு தோதான வாதங்களைதேடி எடுத்து கொடுப்பதும் மறைமுகமாக அரசுக்கு உதவுவதேயாகும்.

ஆனால் விடுதலைப் புலிகள் இம்முறை வடமேல் மாகாண சபை தேர்தலின்பின்னர் புத்திசாலித்தனமான முடிவொன்றை எடுத்திருந்தனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு பாரிய தாக்குதல் எதனையும் மேற் கொள்வதில்லை என்பதே விடுதலைப் புலிகள் மேற்கொண்ட முடிவாகும்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலை அடுத்து அரசுமீது ஏற்பட்டுள்ள அதிருப்திகளை, தாக்குதல் செய்திகள் திசை திருப்பிவிடும் என்று கருதியே அத்தகைய முடிவை புலிகள் எடுத்ததாக நம்பகமான தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

அதன் காரணமாகவே பெப்ரவரி 04ம் திகதி மின்மாற்றித் தகர்ப்புகள் மூலம் அடையாள எதிர்ப்பு மட்டும் காண்பிக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.

பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தியிருந்தால், அது தலைப்புச் செய்தியாகி, வடமேல் மாகாணசபைத் தேர்தல் முறைகேடுகளும், ஆளும் அணி, எதிரணி மோதல்களும் குட்டிச் செய்திகளாகியிருக்கும்.

அரசுடன் பேச்சு நடத்த மட்டுமன்றி, அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கவும் தாக்குதல் நிறுத்தம் பயன்பட முடியும் என்பதை புலிகள் நிரூபித்துள்ளனர்.

முன்னர் அரசு, எதிர்க்கட்சி முரண்பாடுகளை புலிகள் கவனத்தில் கொள்வதில்லை. தற்போது அந்த முரண்பாடுகளை கவனித்து அதற்கேற்பவும் தமது அரசியல், இராணுவ நகர்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

வடமேல் மாகாணசபைத் தேர்தல் முறைகேடுகளை புலிகளது வெளிநாட்டு பிரசார சாதனங்களும் நன்கு பயன்படுத்தி உள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இவற்றின் மத்தியில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி, முட்டாள்கள் தினத்தில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்கள் ஆட்சியாளர்களுக்கு விஷப்பரீட்சையாக மாறியுள்ளன.

தனது இமேஜை பாதுகாக்கமுனையும் அரசுக்கு, அந்த இமேஜை மேலும் தகர்க்கும் நிர்ப்பந்தத்தை ஏப்ரல் தேர்தல் ஏற்படுத்துமா? பிரசாரம் சூடு பிடித்தபின்னர் அலசலாம். ●

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

ஏப்ரல் மாதம் மாகாணசபைத் தேர்தல் நடைபெற இருப்பதால், செம்மணிப்புதைகுழி அதற்கு முன்னர் தோண்டப்படுமா?

புதைகுழிகளது வயிறுகள் சுத்தமாக உள்ளன என்று தெளிவாக தெரிந்தால்தான், பகிரங்கமாக தோண்ட முன்வருவர்.

அவ்வாறில்லாமல் தோண்டினால் அந்த புதைகுழி விவகாரமே தேர்தல் பிரசாரத்தில் பெரும் தர்மசங்கடத்தை கொடுக்கும்.

வடக்கில் உள்ள புதைகுழிகள் பற்றி தெற்கில் பெரிதாக யாரும் கவலைப்படப்போவதில்லை. அதனை எண்ணி வாக்குப்போடாது விடப்போவதுமில்லை. ஆனால், ஐ.தே.கட்சி ஆட்சிக்கால புதை குழிகள் பற்றி பிரசாரம் செய்யும்போது செம்மணி விவகாரம் உறுத்தலாக இருக்கும்.

அதுமட்டுமல்ல, வடமேல் மாகாணசபைத் தேர்தலில் ஏற்கனவே பெயர் ரிப்பேராகியிருக்கிறது. இக் கட்டத்தில் செம்மணிப் புதைகுழியில் இருந்து உடல்களும் மீட்கப்பட்டால் பெயர் மேலும் கெட்டுப்போகும்.

இவையெல்லாம் யோசிக்கப்படாது இருக்காது. அப்படி இருந்தும் செம்மணியை தோண்ட அரசு துணியுமானால் அது ஆழமாக நோக்கப்பட வேண்டியதே.

கடும் மழைக்காலத்திற்கு முன்பு வரை புதைகுழிகளைத் தோண்ட ஏன் முயற்சிக்கவில்லை?

புதைகுழிகள் உள்ள பகுதிகளில் சந்தேகத்துக்குரிய நடமாட்டங்கள் பற்றி வெளியான செய்திகள் காதில் விழாததுபோல 'நடந்து கொண்டதேன்? போன்ற கேள்விகள் அடுக்கடுக்காக எழுகின்றன.

'தடயங்கள் அகற்றப்பட்டிருந்தால்கூட, கடும் மழையில் அதற்கான அறிகுறிகள் முற்றாக மறைந்து போயிருக்கும்...' என்பதே பலரது அபிப்பிராயம்.

இன்னொரு அப்பிராயமும் உலாவுகிறது. ஒரு சில சடலங்கள் மட்டும் இருக்கக்கூடியதாக விட்டு வைத்திருப்பர். தோண்டும்போது அவை தான் கிடைக்கும்.

இதனால் என்ன இலாபம்? என்று கேட்கலாம்.

நூறு, இருநூறு என்று உடல்களை எதிர் பார்க்கும்போது, ஒன்று, இரண்டு உடல்கள் மட்டுமே கிடைத்தால் சப்பென்றாகிவிடும். தடயங்கள் மறைக்கப்படவில்லை என்றும் கூறிக் கொள்ளலாம்.

இவ்வாறு பலவிதமான சந்தேகங்கள் யாழ் குடாநாட்டிலேயே உலாவுகின்றன.

இன்னொரு விடயமும் உதைக்கிறது.

### புதைகுழிகளும் மாகாண சபையும்

செம்மணி புதைகுழிக்கும் வெளிவிவகார அமைச்சுக்கும் என்ன சம்பந்தம்?

புதைகுழி எப்போது தோண்டப்படும் என்று பாதுகாப்பமைச்சு கூறினாலாவது பொருத்தம் இருக்கும். வெளிவிவகார அமைச்சு ஏன் கூறியது?

வெளியுலகில் செம்மணி விவகாரம் அரசுக்கு பெரும் தலைவலியாக மாறியிருக்கிறது என்பதும், தலைவலியில் இருந்து தப்பவே புதைகுழி தோண்டுவதாக யாழ் நீதிமன்றத்தில் மனுத் தாக்குதல் செய்யப்பட்டுள்ளது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிந்துவிட்டது.

வெளியுலகில் தலைவலியாக மாறியிருக்காது விட்டால், மனுப் போட்டிருப்பார்களா?

அது ஒருபுறமிருக்க, வெளியுலகில் தமது முகத்தைக் காப்பாற்ற புதைகுழியை தோண்ட முன்வருவோர் புதைகுழிகளில் பெருவாரியான உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டால் தம் முகம் சிறுத்துப் போகும் என்பதையும் அறிவார்கள்.

இவ்வாறான காரணங்களும், புதைகுழிகளில் தடயங்கள் அகற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் இரண்டறக் கலக்கும்போது, விபரீதமான எண்ணங்கள் குட்டி போடுகின்றன.

**

வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு ஒன்றாக தேர்தல் நடத்தும் யோசனை அரசுக்கு கிடையாது.

அதனை நேரடியாகக் கூறாமல் சுற்றி வளைத்து கூறுகிறார்கள். தற்போதைக்கு அங்கு மாகாணசபை தேர்தல் கிடையாது என்று கூறியுள்ளார் அமைச்சர் பீரிஸ்.

அவர் கூறியுள்ள காரணம் தேர்தல் கோரிய தமிழ்க் கட்சிகளுக்கு சாட்டையடி.

மக்கள் பங்கு கொள்ளக் கூடிய நிலையில் தான் அங்கு தேர்தல் நடத்தப்படும் என்று கூறியுள்ளார்.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல் நடத்தும்போது, இதே காரணத்தை தமிழ்க் கட்சிகள் கூறின. அரசு கேட்கவில்லை. தமக்கு தேவையாக இருந்தால் மக்கள் இல்லாமலேயே தேர்தல் நடத்தவும் அரசு முன்வரும்.

வடக்கு-கிழக்கு இணைந்திருக்கக்கூடியதாக தேர்தல் நடத்த அரசு விரும்பவில்லை. ஆகவே, மக்கள் பங்குகொள்வது பற்றி கூறியுள்ளது.

புலிகளை ஓரம்கட்டிய பின்னர் தேர்தல் நடத்தலாம் என்பதே அதன் அர்த்தம். அப்படி ஓரம் கட்டினால் வடக்கு-கிழக்குக்கு ஒன்றாக தேர்தல் நடத்தும் அவசியமே இருக்காது. சூத்திரம் அதுதான்.

ஒன்றுமட்டும் உறுதி, தமிழ்க் கட்சிகள் கேட்டதை அரசு கொடுக்காது. அரசு கொடுப்பதைத்தான் இக் கட்சிகள் பெற்றுக் கொள்ள வேண்டும். இக்கட்சிகள் கூறுவதை அரசு கேட்காது. அரசு கூறுவதைத்தான் இக்கட்சிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ■


படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 50

கடந்தவாரம்

**1976 ஜூன் 26ம் திகதி இஸ்ரேலில் இருந்து புறப்பட்ட விமானத்தை கடத்திய கார்லோஸ் குழுவினர் அதனை உகண்டா விமான நிலையத்தில் தரையிறக்கினர். அமீன் கார்லோஸை வரவேற்கிறான். ஆபிரிக்க நாடுகளது மாநாட்டில் கலந்து கொள்ள அமீன் செல்கிறான். விமானப் பயணிகளை மீட்க இஸ்ரேல் அதிரடியான திட்டம் தீட்டுகிறது.**

இனி...

# இடி அமீன்

**ஜூன்** 29ம் திகதி உகண்டா வானொலி கடத்தல்காரர்களின் கோரிக்கைகளை வெளியிட்டது.

இஸ்ரேலிலும், ஏனைய நாடுகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 53 கெரில்லாக்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்பதே பிரதான நிபந்தனை.

இஸ்ரேலிய பயணிகள் நூறுபேர் தவிர, ஏனைய நாட்டவர்களை அவரவர் நாடுகளுக்கு அனுப்பிவிட்டதால், பயணிகளை மீட்கும் முழுப்பொறுப்பும் இஸ்ரேலின் தலையில் விழுந்தது.

இஸ்ரேலிய பாதுகாப்பு சபை கூடியது. 'ஒப்பரேசன் எண்டபே' திட்டம் பற்றி விவாதித்தனர்.

"திட்டத்தில் சிறு பிசகு ஏற்பட்டாலும், நூறு சவப்பெட்டிகளைத்தான் நாம் வரவேற்க வேண்டியிருக்கும்" என்று எச்சரித்தார் பாதுகாப்பமைச்சர் ஷிமோன்.

எண்டபே விமான நிலையத்தில் விமானம் மூலம் கொமாண்டோக்களும் துருப்புக்களும் தரையிறக்கப்பட்டு தாக்குதல் நடத்தலாம்.

அத்திட்டம் பலிக்கத் தவறினால், விக்டோரியா ஏரியாவை கடந்து சென்று தரை வழியாக எண்டபே விமான நிலையத்தை கைப்பற்ற வேண்டும்.

"இரண்டு திட்டங்கள் கைவசம் உள்ளன. கள நிலையைப் பொறுத்து பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று கூறினார் ஜெனரல் குர்.



பிரதமர் இற்ஷாக் ராபின் திட்டத்தை ஏற்றுக் கொண்டு ஒப்புதல் அளித்தார். ஆனாலும் அவரது முகத்தில் 'இத்திட்டம் பலிக்குமா?' என்ற கவலை இருந்தது. சந்தேகம் இருந்தது.

திட்டத்துக்கு ஒப்புதல் பெற்றுவிட்டு தாக்குதலுக்கு கொமாண்டோ அணிகள் புறப்படவிருந்த கடைசி நொடியில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

'உகண்டா அதிபர் இடி அமீன் ஆபிரிக்க நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள சென்றுள்ளார்' என்ற செய்தி அன்றைய பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

இது முன்னரே தெரிந்த செய்திதான். இரகசியச் செய்தியல்ல.

ஆனால், இப்போது அச் செய்தியை பத்திரிகையில் பார்த்தபோது, பாதுகாப்பமைச்சர் ஷிமோனின் மூளைக்குள் தீப்பொறி கிளம்பியது.

'அருமையான யோசனை, இது எப்படி முன்பே தோன்றாமல்போனது' என்று தவித்தபடி மளமளவென்று உத்தரவுகளை பிறப்பித்தார்.

"கொமாண்டோக்கள் புறப்பட வேண்டாம்" என்று உத்தரவு பறந்தது. ஜெனரல் குர் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளை தன்னை வந்து பார்க்குமாறு அழைத்தார்.



கடைசி நேரத்தில் ஏன் தடை வந்தது. ஒருவேளை பயணிகளை விடுவித்துவிட்டனரோ? என்பது போன்ற சந்தேகங்களுடன் அதிகாரிகள் விரைந்தனர்.

அவர்களது குழப்பமிருந்த முகங்களை ஏறிட்டபடியே ஷிமோன், "கடைசி நேரத்தில் குறுக்கிட்டதற்கு மன்னிக்க வேண்டும். திட்டத்தில் சிறு மாறுதல் ஒன்று செய்ய வேண்டியிருக்கிறது" என்று கூறிவிட்டு, அவர்களது முகங்களை நோக்கினார்.

அவர்கள் புதிர்கதை கேட்டது போன்ற பாவனையில் அமர்ந்திருந்தனர். ஷிமோனின் வாயிலிருந்து அடுத்து உதிர்ந்த வார்த்தைகள் புதிர் முடிச்சை மேலும் இறுக்கியது.

"எண்டபே விமான நிலையத்திற்கு எம்முடன் இடி அமீனும் வருகிறார்" என்று கூறிய ஷிமோனின் உதட்டிலிருந்து மர்மப் புன்னகை உதிர்ந்தது.

அதிகாரிகளுக்கு பலத்த ஆச்சரியம். ஆனால் ஜெனரல் குர்ருக்கு கற்பூர மூளை. அவர் பிடித்துக் கொண்டார்.

"இன்னொரு இடி அமீனுக்கு எங்கே போவது?" என்று கேட்டார் குர்.

அவரது புத்திசாலித்தனமான ஊகிப்பை மனதிற்குள் பாராட்டியபடி "அசல் இடி அமீன் உகண்டாவில் இல்லாத இந்த நேரத்தில், நாம் ஒரு நகல் இடி அமீனுடன் உகண்டாவுக்குள் நுழையப் போகிறோம்" என்று ஏனைய அதிகாரிகளுக்கும் புரியும்படி கூறிய ஷிமோன், "இடி அமீனை நாம் உருவாக்கப் போகிறோம். அதற்கேற்ப திட்டத்தில் சிறுமாறுதல் செய்தால் போதும்" என்றார்.

இஸ்ரேலில் உகண்டா நாட்டவர் பலர் இருந்தனர். அவர்களுக்குள் இடி அமீனின் தோற்றத்தை ஒத்த ஒருவரை தேடிக்கண்டு பிடிக்க இரண்டு நாட்கள் தேவைப்பட்டன. "முழுக்க முழுக்க இடி அமீன் போல இல்லாவிட்டாலும் எட்டத்தில் இருந்து பார்க்கும்போது, அமீன் போல தெரியத்தக்கதாக சில ஒப்பனைகள் செய்துவிடலாம்" என்றார் ஷிமோன்.

வலைபோட்டு தேடி நான்கு பேரைக் கொண்டுவந்து ஷிமோன் முன்பாக நிறுத்தினார்கள்.

ஷிமோனுக்கு ஆச்சரியம் தாளவில்லை. அவர்களில் இரண்டு பேர் கிட்டத்தட்ட அமீன் போலவே இருந்தனர்.

அதில் ஒருவரை தெரிவுசெய்த ஷிமோன், "இவருக்கு ஒப்பனையே தேவையில்லை. தலையில் ஒரு தொப்பியை மட்டும் மாட்டி விடுங்கள் போதும்" என்றார்.

"அமீனை கடத்திக் கொண்டு வந்து வைத்துவிட்டு, இவரையே உகண்டாவை கட்டியாளச் சொல்லலாம்" என்று ஜோக்கடித்தார்.

ஜூலை 3ம் திகதி.

ஒப்பரேசன் எண்டபேக்கு நாள் குறிக்கப்பட்டு, கொமாண்டோக்கள் தயாராகினர்.

இன்னொரு அணி தரை வழித்தாக்குதலுக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தது.

மொத்தம் இருநூறு கொமாண்டோக்கள் நடவடிக்கைக்கு தெரிவானார்கள்.

விமான நிலையத்தை எப்படி கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பதற்கான பயிற்சிகளும், ஒத்திகையும் இரவு பகலாக நடந்தன.

எந்த ஒரு நடவடிக்கைக்கு புறப்பட முன்பும் அதற்கேற்ப சில மேலதிகமான பயிற்சிகளும் தரப்பட வேண்டும் என்பது ஷிமோனின் உத்தரவு.

எண்டபே விமான நிலையத்தில் எந்தெந்த விமானங்கள் ஜூலை 3ம் திகதி தரையிறங்க உள்ளன என்ற தகவலை விமான நிலையத்தில் இருந்த தனது உளவாளி மூலம் மொசாட் பெற்றுக் கொடுத்தது.

விமான நிலையத்தின் முழு வரைபடமும் மொசாட் ஊடாக கைக்கு கிடைத்திருந்தது.

எண்டபே விமான நிலையத்தின் கழிப்பறை முதல், கட்டுப்பாட்டு அறைவரையான சகல விபரங்களும் பெறப்பட்டே திட்டம் தயாரானது.

எந்தவொரு கெரில்லா அதிரடி நடவடிக்கைக்கும் தகவலறிதல், உளவறிதல் என்பவையே பிரதானம்.

இஸ்ரேலின் அதிரடி நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கு மொசாட் உளவு நிறுவனத்தின் துல்லியமான தகவலறிதலே பேருதவி புரிந்திருக்கிறது.

'ஒப்பரேசன் எண்டபே' நடவடிக்கைக்கும் மொசாட் மூலம் திரட்டப்பட்ட விமான நிலைய வரைபடமும் மற்றும் தகவல்களுமே முதுகெலும்பாக இருந்தன.

மேஜர் ஜெனரல் ஷொம்றொன் மொசாட்டின் உயரதிகாரி. 'ஒப்பரேசன் எண்டபே' திட்டத்தை தீட்டிய ஜெனரல் குர்ருக்கு தேவைப்பட்ட தகவல்களை எல்லாம் உடனுக்குடன் வழங்கியிருந்தார். ஷொம்றொன்.

பிரிட்டிஷ் விமானம் ஒன்று ஜூலை 3ம் திகதி இரவு பதினொரு மணிக்கு, பிரிட்டிஷ் சரக்கு விமானம் ஒன்று எண்டபே விமான நிலையத்தில் தரையிறங்கும் என்பது தகவல்.

"குட்! அந்த விமானத்திற்கு பதிலாக எமது ஹேர்குலஸ் விமானம் தரையிறங்கும். தாக்குதல் நடத்தப்படும்" என்றார் குர்.

ஹேர்குலஸ் விமானம் துருப்புக்களையும், இராணுவ வாகனங்களையும் தாராளமாக தன் வயிற்றுக்குள் கொண்டு செல்லத்தக்கது.

கொமாண்டோக்களுடன் இரண்டு லாண்ட்ரோலரும் மற்றும் ஒரு திறந்த ஜீப் ஆகியனவும் விமானத்தில் ஏற்றப்பட்டன.

மேஜர் ஜெனரல் ஷொம்ரோன் விமான நிலைய அதிரடி நடவடிக்கைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.



தருவது ரசிகன்

ஜூலை 3ம் திகதி, இரவு மணி பத்து ஐம்பத்தைந்து.

எண்டபே விமான நிலையம் ஒரு அதிரடி தாக்குதலுக்கானகளமாக மாறுவதற்கு மேலும் ஐந்து நிமிடங்களே இருந்தன.

இடி அமீனின் மாளிகையில் கார்லோஸ் கறுப்பழகியுடன் கட்டிலை பகிர்ந்து கொண்டிருந்தான்.

"நீங்கள் உண்மையிலேயே பயங்கரவாதிதான்" என்றாள் அவள்.

"பயங்கரமாகவா இருக்கிறேன்?" இது கார்லோஸ்.

"நான் தோற்றத்தைச் சொல்லவில்லை" இது அவள்

"பின்னே? எதைச் சொல்கிறாய்?" என்று கண்ணடித்தான் கார்லோஸ்.

"உங்கள் செயல்கள்!" என்று சிணுங்கினாள். அவள் வெட்கப்படுவதைப் பார்க்க கார்லோசுக்கு குசியாக இருந்தது.

"பிடிக்கவில்லையா?" என்றான். "சேச்சே, உங்களை இங்கேயே பிடித்து வைத்திருக்கலாம்போலிருக்கிறது" என்று கூறி, கார்லோஸை அவள் கட்டித் தழுவி தன்னோடு இறுக்கிக் கொண்டபோது, இரவு பதினொன்று.

அப்போது எண்டபே விமான நிலையத்தில் இஸ்ரேலிய கொமாண்டோக்கள் தரையிறங்கிக் கொண்டிருந்தனர்.

பிரிட்டிஷ் சரக்கு விமானம் என்று கூறியதும், தரையிறங்கும் அனுமதி கிடைத்தது.

தரையிறங்கியதும் குறுகியதூரம் ஓடிய விமானத்தின் விளக்குகள் திடீரென்று அணைந்தன.

விமான நிலையத்தின் வெளிச்சம் குறைந்த பகுதியை ஒட்டியதாக விமானம் நிறுத்தப்பட்டது.

வந்திருப்பது பிரிட்டிஷ் விமானம் அல்ல என்று கண்டுபிடித்து விடக்கூடாதே என்பதற்காகவே அவ்வாறு நிறுத்தினர்.

விமானத்தின் கதவுகள் திறந்தன.

திறந்த ஜீப்பில் சாரதிக்கு அருகே போலி இடி அமீன் கம்பீரமாக வீற்றிருக்க, அந்த ஜீப்பின் பின்னால் இரண்டு லாண்ட் ரோலர்களில் கொமாண்டோக்கள் சென்றனர்.

விமான நிலையத்தில் நின்றிருந்த அதிகாரிகளுக்கு, திறந்த ஜீப்பில் இடி அமீனைக் கண்டதும் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

திடீரென்று விறைப்பாகி சல்யூட் செய்தனர்.

ஆபிரிக்க நாடுகளது மாநாட்டுக்கு சென்றுவிட்டு திரும்பிவருகிறார் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தனர்.

கடத்தப்பட்ட விமானம் நிறுத்தப்பட்ட பகுதியை நோக்கி போலி அமீன் இருந்த ஜீப் நகர்ந்தது.

பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஒரு அதிகாரிக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

அந்த சந்தேகம் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தியது.

(இடி தொடரும்)

# ஃபயர் நாயகியின் ஃபயர் பேட்டி



பலத்த சர்ச்சையை கிளப்பியுள்ள ஃபயர் படத்தின் நாயகிகள் இருவர். சப்னா ஆஸ்மி. நந்திதா தாஸ்.

ஃபயர் படம் பற்றிய சர்ச்சை இன்னமும் ஓய்ந்தபாடில்லை. இந்தியாவில் பல பெண்கள் அமைப்புக்கள் இப்படத்தை தடை செய்யக்கூடாது என்று குரல் எழுப்பியுள்ளன.

மும்பாய், டில்லியில் ஃபயர் திரையிடப்பட்ட திரையரங்குகள் தாக்கப்பட்டது பழைய செய்தி. சமீபத்தில் தமிழ்நாட்டில் மதுரையிலும் திரையரங்கம் முன்னால் சிவசேனை இயக்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதனால் படம் திரையிடுவது நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து பெண்கள் திரண்டு சென்று படத்தை திரையிடுமாறு ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பெண்கள் எல்லோரும் லெஸ்பியனிசத்தை ஆதரிப்பவர்கள் என்று அர்த்தமல்ல. ஆனால் ஃபயர் படம் வெளிப்படுத்தும் கருத்துக்களுக்கு பெண்களிடம் பலத்த வரவேற்பு கிடைத்திருக்கிறது.

ஃபயர் படத்தில் சப்னா ஆஸ்மியும், நந்திதாவும் உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிடும் காட்சி உட்பட சில காட்சிகளை தணிக்கை குழு கத்தரிக்கவில்லை. படத்தின் கதை அர்த்தமுள்ளதாக இருந்ததால்தான் ஒரு காட்சிகூட வெட்டப்பட வில்லையாம்.

படத்தின் நாயகிகள் இருவரும் அப்படத்தில் நடித்ததுக்காக பெருமைப்படுவதாக கூறுகிறார்கள். ஃபயர் மூலம் அறிமுகமாகியுள்ள இளம் நாயகி நந்திதா தாஸ் சமீபத்தில் அளித்துள்ள பேட்டியொன்றில் அவரது கருத்தைக் காணலாம்.

**கே: ஃபயர் படத்தில் நடித்ததால் எந்த மாதிரியான விமர்சனத்தை எதிர் கொண்டு வருகிறீர்கள்?**

ந: ஃபயர் படத்தைப் பார்த்த பெண்களில் அநேகம்பேர் எங்கள் மொத்த யூனிட்டையும் வாழ்த்தி நன்றி கூறிக் கடிதம் போட்டுள்ளனர். துணிச்சலான முயற்சி என்று பாராட்டியுள்ளனர். இப்படியான சூழலில் சில கும்பல்களின் எதிர்ப்பை கண்டு கொள்ளாதிருப்பதே சரியானது.

**கே: ஃபயர் படத்தின் கதை உங்களுக்கு உடன்பாடானதா?**

ந: கண்டிப்பாக. ஒரு துளி சந்தேகமும் கிடையாது.

என்னுடைய அபிப்பிராயப்படி மனைவியைக் கொடுமைப்படுத்துவது என்பது, வெறுமனே அடிப்பது, உதைப்பது மட்டுமல்ல, அவளை உடல்ரீதியாக திருப்திப்படுத்தாது, ஃபயர் படத்தில் வரும் கணவன் பாத்திரம் போன்று திரும்பிப் படுத்துக் கொள்வதும் கொடுமைப்படுத்துவதற்கு சமம்தான்.

இந்தக் கொடுமை எங்கெல்லாம் நடக்கிறதோ, அங்கெல்லாம் ஃபயர் படத்தின் சம்பவங்கள் நடப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

# ஜெமினி-ஜூலியா-உறவு முறிவு

## திடுக்கிடும் தகவல்கள்



ஜெமினி கணேசன் தனது 79வது வயதில் 35 வயதான ஜூலியா என்ற அழகியை மணந்து கொண்டார்.

ஜெமினி கணேசன் வயாக்ரா போன்ற செக்ஸ் மாத்திரைகளை பாவித்து வருவதாகவும், மதுக் கேளிக்கைகளில் மூழ்கியிருப்பதாகவும் முரசின் சினிவிசிட்டில் 'திரையுலக மறுபக்கம்' பகுதியில் தகவல் வெளியானதல்லவா. இத் தகவல் தமிழகப் பத்திரிகைகளில்கூட வெளிவரவில்லை. முரசின் சினிமா நிருபர் மயன் அனுப்பிய தகவலே அதுவாகும்.

இப்போது அது உறுதியாகியுள்ளது. ஜெமினியின் முதல் மனைவி பாட்ஜி அதனை உறுதி செய்திருக்கிறார்.

இளம் அழகியான ஜூலியாவை 79 வயதான ஜெமினியால் சந்தோசப்படுத்த முடியவில்லை. போதை மாத்திரைகளை அளவுக்கு மீறி பாவித்தும், மது அருந்தியும் அவரது உடல்நிலை மோசமானது. இதனால் அவருக்கும் ஜூலியாவுக்கும் இடையே பிணக்கு ஏற்பட்டது.

இதனையடுத்து தனக்கு விவாகரத்து கேட்டுள்ளார் ஜூலியா. 50 இலட்சம் பணமும், விவாகரத்தும் கேட்டு, ஜெமினியின் முதல் மனைவி பாப்ஜியிடம் தூது விட்டார் ஜூலியா.

இதனை அறிந்த ஜெமினி ஜூலியாவை தாக்கியிருக்கிறார். ஜூலியாவும் திருப்பித் தாக்கியிருக்கிறார்.

தன்னை ஜூலியா தாக்கியதாகக் கூறிப் புலம்பிய ஜெமினி கணேசன், ஜூலியாவை தானும் கொடுமைப்படுத்திய விபரங்களைக் கூறவில்லை.

பெண் துணையின்றி ஒருநாள்கூட தூக்கம் வராது' என்று கூறுபவர் ஜெமினி. அவருக்கு தற்போது வயதாகிவிட்டது. தனது பலவீனத்தை மறைக்க ஜூலியாவிடம் வக்கிரமாக நடந்துகொள்ள முற்பட்டார். அதனையடுத்தே பிரச்சனை ஏற்பட்டதாக ஜூலியா தனக்கு நெருக்கமானவனர்களிடம் கூறியுள்ளார்.

தற்போது ஜெமினி அமெரிக்கா போயிருக்கிறார். அங்கு அவரது மகள் ரேவதி டாக்டராக உள்ளார். போதைப் பழக்கத்தில் இருந்து அவரை மீட்பதற்கான சிகிச்சையை டாக்டர் ரேவதி ஆரம்பித்துள்ளாராம். இத்தகவலை பாப்ஜி கூறியுள்ளார்.

ஜெமினி குடும்பத்திடம் சொத்துக்களுக்கு குறைவில்லை. அதனால்தான் 50 இலட்சம் ரூபாயும், சிங்கப்பூரில் நல்லதொரு வேலையும் கேட்டு பேரம் பேசியுள்ளார் ஜூலியா.

"50 இலட்சம் தரமுடியாது. பத்து இலட்சம் தருகிறோம். ஜெமினியை விட்டு விலகிவிடு என்று ஜெமினியின் முதல் மனைவியும், பிள்ளைகளும் கூறியுள்ளனராம்.

79 வயதில் போய் அவளைத் தொடுவானேன், அவதிப்படுவானேன்?

# ஜீன்ஸ் காப்பாற்றியது?



இத்தாலியில் பாலியல் வல்லுறவு குற்றம் புரிந்த ஒருவரை ஜீன்ஸ் காப்பாற்றி விட்டது.

ரோசா என்னும் 18 வயது இளம் பெண்ணை கார்மைன் என்னும் 45 வயது ஆசாமி கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு கொண்டுள்ளார்.

இதனை ரோசா புகார் செய்தார். நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டதும். ஆசாமிக்கு இரண்டு ஆண்டுகளும் எட்டு மாதங்களும் தண்டனை கிடைத்தது.

தீர்ப்பை அப்பீல் செய்தார் ஆசாமி. அந்த உயர் நீதிமன்ற நீதிபதிக்கு பெண்கள் மேல் என்ன கோபமோ? விசித்திரமான தீர்ப்புக் கூறியுள்ளார்.

ரோசா ஜீன்ஸ் அணிந்திருந்த போதுதான் கடத்தப்பட்டார். ஜீன்ஸ் போட்டவரின் அனுமதி இன்றி, ஜீன்ஸை கழற்றி வல்லுறவு கொள்வது கடினம். ஆகவே ரோசாவின் சம்மதத்துடன்தான் காரியம் நடந்துள்ளது. ஆகவே கார்மைன் விடுதலை செய்யப்படுகிறார்" என்று தீர்ப்பு கூறியுள்ளார் நீதிபதி. ரோசாவின் ஜீன்ஸ் கார்மைனை காப்பாற்றியது.

# மோனிக்கா மோனிக்கா



அமெரிக்காவில் மோனிக்கா விவகாரம் பல்வேறு ரூபங்களில் வெளிப்பட்டு வருகிறது.

வோஷிங்டனில் பாடசாலை ஆசரியை ஒருவர் மோனிக்கா போன்ற தோற்றத்தில் இருந்தார்

அந்த ஆசிரியையை மாணவர் பலர் பயங்கரமாக கிண்டல் பண்ணத் தொடங்கிவிட்டனர்.

அதன் உச்சக்கட்டமாக பாடசாலை வகுப்பறையின் கதவில் கிளின்ரன் படத்தை ஒட்டி, அதன் அருகே ஆசிரியையின் உருவத்தை ஆபாசமாக வரைந்திருந்தனர். வெகுண்டெழுந்த ஆசிரியை அதிபரிடம் புகார் செய்தார்.

இதனையடுத்து மூன்று மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




படிப்பகம்

www.padippakam.com



# நில்லாதே! கவனி! முன்னேறு!

➡ ஒரு சிக்னலை பார்த்தே ஒழுங்காக வாகனம் ஓட்டத் தெரியவில்லை. இத்தனை சிக்னல்களையும் பார்த்தால் பல சாரதிகள் தலைமுடியைப் பிய்த்துக் கொள்வார்களே! நல்லவேளை இது உண்மையான 'சின்னல் போஸ்ட்' அல்ல. இலண்டனின் கிழக்குப் பகுதியில் சிற்ப கலைஞர் ஒருவரால் 75 எரியும் விளக்குகளை கொண்டு உருவாக்கப்பட்ட அலங்கார விளக்குக் கம்பமே இதுவாகும். ஒரு திருப்பத்தில் இதனை வேடிக்கைக்காக நிறுத்தி வைத்தார்கள். சாரதிகள் பலருக்கு மகா கலக்கம். பின்னர் தான் தமாசுக்கு என்று தெரிந்ததாம்.



## தகவல் பெட்டி



# தாவர அதிசயம்

▲ 'பெரிய பட்டாம்பூச்சியோ' என்று எண்ணிவிடாதீர்கள். இது நீங்கள் உண்ணக்கூடியது. நாங்கள் என்ன இடி அமீனா? என்று முறைக்காதீர்கள். இது கத்தரிக்காய்தானே. தாராளமாக சாப்பிடலாம். சென்னையில் தோட்டம் ஒன்றில் ஒட்டிப் பிறந்த நான்கு கத்தரிக் காய்கள்தான் இப்படி காட்சியளிக்கின்றன.

அடுத்த படத்தில் இருப்பது நம் நாட்டு கத்தரிக்காய். திருமலை மாவட்டம் மூதூரில் கைரியா நகர் பகுதியில் உள்ள எம். சாபீர் வீட்டில்தான் இந்த கத்தரிக்காய் காய்த்திருக்கிறது. இறக்கை முளைத்தது போல் இருக்கிறதல்லவா.



# ஆறும் ஆறும்

⬅ ஆறு விரலுடன் பிறப்பது பெரிய அதிசயமல்ல. ஆனால் இரண்டு கைகளிலும் ஆறு விரல்களுடன் பிறப்பது அபூர்வம். அதுவும் அநேகமாக ஐந்தாவது விரலுடன் இணைந்ததாகவே ஆறாவது விரல் இருப்பதுண்டு.

மலையகத்தில் அட்டனில் வசிக்கும் மோகனதாஸ் ரூபதாசனுக்கு இரண்டு கையிலும் ஆறு விரல்கள் இருக்கின்றன பார்த்தீர்களா.

இவர் அட்டன் ஜலண்ட் பாடசாலையில் ஆண்டு ஐந்து படிக்கிறார். ஆறும் ஆறும் பன்னிரண்டு கைவிரல்கள். (பட உதவி: கே.வி.சொக்கலிங்கம்)



# புதுமை

↖ எதனையும் புதுமையாக செய்தால் பலரது கவனத்தை கவரும். இந்த நங்கையர் அணிந்துள்ள தொப்பிகளும் புதுமையானவை என்பதால், நம்மை புருவம் உயர்த்தி பார்க்கத் தூண்டுகின்றன.

மேற்கு ஜேர்மனியில் நடந்த ஆடை அணிவகுப்பில் தோன்றிய தொப்பி அழகிகளே இவர்கள்.



# உயர வள்ளுவர்

⬅ தமிழ்நாட்டில் குமரிமுனை கடலில் பிரமாண்டமான திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு வருகிறது. குமரிமுனை கடலின் நடுவே உள்ள பாறையில் அமைக்கப்பட்டுவரும் இச் சிலையின் உயரம் 133 அடி.

குறைந்தது ஆயிரம் ஆண்டுகள் நிலைக்கக் கூடியதாக இச்சிலை நிறுவப்பட்டு வருகிறது. இதற்காகும் செலவு இந்திய பணமதிப்பில் ஏழு கோடி ரூபாய். புலமையில் உயர்ந்த வள்ளுவருக்கு வழமையைவிட உயர்ந்த சிலை அமைத்து கௌரவிக்கிறார்கள்.



# மனிதரை ருசிபார்க்கும்

➡ கொமொடோ முதலைகள் இன்று உயிர் வாழும் பல்லி இனப் பிராணிகளில் மிகவும் பெரியவை.

மனித மாமிசம் என்றால் கொமொடோக்களுக்கு பெரும் குஷி. இதனால் கொமொடோ வசிக்கும் பகுதிகளுக்கு மனிதர்கள் தலை காட்டுவதே இல்லை. இவை மிக வேகமாக ஓடக்கூடியவை. கால்களிலுள்ள நகங்களும் மிகவும் கூரானவை. அதேபோல் பற்களும் மிகக் கூர்மையானவை.

சாதாரண கொமொடோக்களின் எடை 66 கிலோ வரைதான். ஆனால் இங்குள்ள கொமொடோ முதலை மகா கனம் பொருந்தியது.

1937ம் அண்டு இம்முதலை 3.10 மீட்டர் (10 அடி 2 அங்குலம்) வரை வளர்ந்து விட்டது. அப்போது இதன் எடை 166 கிலோகிராம் (365 இறாத்தல்).

உலக சாதனை படைத்த அந்த முதலை தன் நீள நாக்கை நீட்டியபடி காட்சியளிக்கிறது.



படிப்பகம்

திரையுலக மறுபக்கம் (92)

# தட்டிப் பறித்த வாய்ப்பு

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## நடிகர்கள் மோதல்! தலைவர் சமரசம்

சூப்பர் நட்சத்திரம் நடிக்கும் புதிய படத்தில், அவரது மகளாக முதலில் நடிக்க இருந்தவர் முன்னெழுத்து நடிகை. ரசிப்போடு தொடர்புடைய பெயரைக் கொண்டவர்.

தனக்கு கிடைத்த வாய்ப்பை எண்ணி கனவுலகில் சஞ்சரித்த நடிகையிடம் குறிப்பிட்ட படத்தின் துணை இயக்குநர் காரியம் சாதித்துக் கொண்டார். 'இயக்குநரிடம் நான்தான் உன் பெயரை சிபாரிசு செய்தேன்' என்று கூறியே நடிகையிடம் தன் ஆசையைப் பூர்த்தி செய்திருக்கிறார்.

சூப்பர் நட்சத்திரத்தின் படத்தில் நடிப்பதற்காக எதையும் செய்யத் தயாராக இருந்த நடிகையும், அந்த துணை இயக்குநரின் விருப்பத்தை மனம், முகம் கோணாமல் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்.

திடீரென்று ஒரு நாள் அந்த இடியான செய்தி வந்து நடிகையின் கனவை தகர்த்துவிட்டது.

சூப்பர் நட்சத்திரத்தோடு மகளாக நடிப்பவர் அந்த பிரபலமான நட்சத்திர தம்பதியின் மகள் என்பதே அந்த இடியான செய்தி.

இடிந்து போன ரசிப்பான நடிகை துணை இயக்குநரை தேடினார். 'நான் என்னம்மா செய்ய முடியும். இயக்குநருக்கும் அந்தம்மாவுக்கும் நெருக்கம். தன் மகளுக்கு சான்ஸ் கேட்டாங்க. மறுக்க முடியாம ஒத்துக்கிட்டாரு நம்ம இயக்குநர். என்னை என்ன பண்ணச் சொல்லுறாங்க' என்று கைவிரித்துவிட்டார்.

நடந்தது இதுதான். நட்சத்திர தம்பதி புகழ் மஞ்சளான நடிகை, தன் மகளை சூப்பர் நட்சத்திரத்தின் ஜோடியாக நடிக்க வைக்க படாதபாடு பட்டாராம். சூப்பர் நட்சத்திரத்தை நேரில் கண்டும் குழைந்திருக்கிறார்.

தன் இமேஜுக்கு அந்த சின்னப் பொண்ணுடன் ஜோடியாக நடித்தால் எடுபடாது என்று விட்டார் சூப்பர்.

படத்தின் இயக்குநர் மஞ்சளான நடிகையின்மீது பிரியம் உள்ளவர். ஓய்வுக்காக தம்பதி வீட்டு விருந்துகளுக்கு சென்று வருபவர். அந்த விருந்துகளில் மஞ்சளான நடிகையே நேரடியாக இயக்குநரை கவனித்திருக்கிறார். நடிகையின் கணவருக்கு தன் படங்களில் கதாநாயகனுக்கு ஈடான பாத்திரம் கொடுத்து நன்றிக் கடன் தீர்த்தார் இயக்குநர்.

ஜோடியாக நடிக்க விரும்பியதால், மகளாக நடிக்க விரும்பமாட்டார்கள் என்பதால்தான், ரசிப்பான நடிகையை ஒப்பந்தம் செய்தார் இயக்குநர்.

அந்தச் சமயத்தில் மஞ்சளான நடிகை வெளிநாடு போயிருந்தார். திரும்பி வந்தவருக்கு விமான நிலையத்திலேயே வைத்து தகவல் கூறியிருக்கிறார்கள்.

அங்கிருந்தே செல்போனில் இயக்குநரை பிடித்திருக்கிறார் நடிகை. தன் வழக்கமான தூண்டில் வார்த்தைகளை தேனில் கலந்து தூவியிருக்கிறார்.

'உங்க மகள் நடிக்க ஒகே என்றால் எனக்கு ஆட்சேபனை கிடையாது' என்று கூறிய இயக்குநர், அன்று மாலையே நட்சத்திரத் தம்பதியின் வீட்டுக்கு விஜயம் செய்துவிட்டு மலர்ச்சியோடு திரும்பி வந்திருக்கிறார்.

சூப்பர் நட்சத்திரமும் இயக்குநரின் விருப்பத்துக்கு சம்மதிக்க, ரசிப்பான நடிகை தூக்கி எறியப்பட்டார்.

தன் வாய்ப்பை கெடுத்த நட்சத்திரத் தம்பதியை வாய்க்கு வந்தபடி திட்டித்தீர்த்து வருகிறார் ரசிப்பான நடிகை.

***

## நடிகர்கள் மோதல்

இதுவும் முன்னெழுத்து நடிகை ஒருவரைப் பற்றிய சமாச்சாரம்தான். 'ச'வில் பெயர் தொடங்கும் நடிகருடன் சரசமாடிய 'ந'வில் பெயர் தொடங்கும் நடிகை அவர்.

அவருக்கு சாித்திர வீரன் ஒருவது பெயர் கொண்ட இன்னொரு உயர நடிகர் பாதுகாப்பு கொடுத்தார்.

அவர் பாதுகாப்பு தருகிறார் என்ற தைரியத்தில் 'ச' நடிகரை நடிகை தனிப்பட்ட ரீதியில் கிண்டல் பண்ணியிருக்கிறார்.

தானும் அவரும் சேர்ந்திருந்த காலத்தில் கண்டுபிடித்த அவரது பலவீனங்கள் பற்றி 'ச' நடிகரின் அபிமானம் பெற்ற பிறிதொரு நடிகையிடம் கிண்டல் பண்ணியிருக்கிறார்.

நடிகரின் மதிப்பைப் பெறுவதற்காக அந்த நடிகை அதனை நடிகரிடம் கூறிவிட 'ந' நடிகையை 'மா'வாக அரைக்கும் கோபத்துடன் தேடித்திரிந்திருக்கிறார் நடிகர்.

நடிகைமீது தூசு விழுந்தால்கூட நான் சும்மாயிருக்க மாட்டேன் என்று அறிவான் தூக்காக குறையாக மற்றவர் சவால் விட்டிருக்கிறார்.

இந்த இரண்டு நடிகர்களுமே அரசியல் கட்சி பொன்றின் தீவிர உறுப்பினர்கள். இவர்கள் தகராறு கட்சிக்கே கெட்ட பெயர் என்பதால், அக் கட்சியின் தலைவரே இருவரையும் அழைத்து சமரசம் செய்து வைத்தாராம்.

அந்த நடிகை விடயத்தில் தலையிடுவதில்லை என்று இரண்டு பேரிடமுமே உறுதியும் வாங்கிக் கொண்டாராம். □

## 'எம் பேரு படையப்பா'

'எம் பேரு படையப்பா
இளவட்ட நடையப்பா
எங்கூட உள்ளதெல்லாம்
இளங்சிங்க படையப்பா...'

இவ்வாறு தொடங்கும் பாடலை படையப்பாவில் ரஜினிக்காக எழுதிக் கொடுத்திருக்கிறார் வைரமுத்து.

'முத்து' படத்தில் 'ஒருவன் ஒருவன் முதலாளி' பாடல் வைரமுத்து எழுதி பிரபலமானது.

படையப்பாவிலும் அருமையான தத்துவப் பாடல் ஒன்று இருக்கிறது.

ஓகோகோ கிக்கு ஏறுதே
ஓகோகோ வெட்கம் போனதே
உள்ளுக்குள்ளே ஞானம் ஊறுதே
உண்மையெல்லாம் சொல்லத் தோணுதே
கம்பங்களி தின்னவனும் மண்ணுக்குள்ளே
தங்க பஸ்பம் தின்னவனும் மண்ணுக்குள்ளே
இந்த வாழ்க்கை வாழத்தான்
நாம் பிறக்கையில்
கையில் என்ன கொண்டு வந்தோம்
கொண்டு செல்ல?
குழந்தை- ஞானி இந்த
இருவர் தவிர இங்கே
சுகமாய் இருப்பது
யார் காட்டு?...

என்று தொடர்கிறது அந்தத் தத்துவப்பாடல்.

## வேஷ்...

'முத்து', 'படையப்பா' ... தள்ளியுள்ளவர் ... விஜய் கதா... ஒன்றை விரைவில்... தில் வேஷ்டி கட்... நடிக்கப் போகிற... கிராமத்து க... யாடுபவர் ரவிக்கு... ஒரு வெற்றிப் படம் ... முடிந்ததும் நான் ரெ... கூறியுள்ளாராம்.

## காதல்...

'காதல் கோட்டை... கவிதை' போன்ற வெ... ருப்பவர் இயக்குநர் ... அனுபவத்தைக் கூறுகிற... "நான் முதலாம் வ... ஒரு காதல் ஜோடிக்கி... கொண்டு செல்ல பயன்ப... தபால்கார வேலைக்கு சம்ப... இந்த சாக்லெட்டுக்காகவே... கொடுத்திட்டு வாரேன்' ... பண்ணுவேன்." என்று அந்...

## தாலாட்ட வருவாளா?

'துள்ளாத மனமும் துள்ளும்' விஜய்க்கு இந்த வருடத்தை அமோகமாக ஆரம்பித்து வைத்திருக்கிறது.

'காதலுக்கு மரியாதை' படத்தின் வெற்றிக்கு நிகராக இதுவும் வசூல் குவிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த சந்தோசத்தோடு விஜய் அடுத்து நடிக்கப்போகும் படங்களில் ஒன்று, 'தாலாட்ட வருவாளா'. இப் படத்தில் விஜய் ஜோடியாக இஷா கோபிகர் நடிக்கிறார்.

'என் சுவாசக் காற்றே' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் இஷா கோபிகர். ஆனால் அவர் நடித்து முதலில் வெளியான படம் 'காதல் கவிதை.'

'தாலாட்ட வருவாளா' படத்தில் ரம்பாவும், ரோஜாவும் கௌரவ வேடத்தில் நடிக்கின்றனர். எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் மகன் சரண் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன்: கே. செல்வபாரதி. இசை: 'இளையராஜா.' படத்தை தயாரிப்பவர்: என்.ஏ. சந்திர சேகரன். 'நிலாவே வா' படம் தோல்வி கண்டபின்னர் விஜய் குடும்பத்தினர் தயாரிக்கும் சொந்தப் படம் இது.

## சக்தி

ஊர்மிளாவுக்கு அபாரமான ஞாபக சக்தியாம். யாராவது ஒருவரைப் பார்த்துவிட்டால் எத்தனை ஆண்டுகள். சென்றாலும் மறக்க மாட்டார். ஞாபக சக்தியில் இவரிடம் யானைகள் கூட தோற்றுப் போகும்.

சமீபத்தில் படப்பிடிப் பொன்றில் பாட்டுப் போட்டியில் பழைய புதிய பாடல்களை மறக்காமல் வைத்திருந்து பாடியதால் 25 ஆயிரம் ரூபாய் பணப் பரிசு பெற்றிருக்கிறார்.




## பெண் துணை அவசியம் அஜித் புகழும் ஹீரா

அஜித்குமாருக்கு முதலில் மூன்று எலும்புகள் பாதிக்கப்பட்டிருந்தன. அவற்றை சத்திர சிகிச்சை மூலம் சரிப்படுத்தியிருக்கிறார்கள்.

அஜித்குமார் இனி நடிக்கவே முடியாது என்று சிலர் கதைகட்டி விட்டனர். அத்தனை கதைகளையும் பொய்யாக்கிவிட்டு தேறியிருக்கிறார் அஜித்.

"ஹீராதான் கூடவே இருந்து நம்பிக்கை ஊட்டினார். எந்த ஆணுக்கும் பெண் துணை அவசியம். அந்த துணை நாம் விழும் போது கைகொடுத்து தூக்கி விடக் கூடிய தைரியமான பெண்ணாக இருந்தால் பாக்யம்' என்று நெகிழ்ந்து போகிறார் அஜித்.

சில மாதங்களுக்கு முன்னர் அஜித்துடன் அழுது அடம்பிடித்து சண்டை போட்ட ஹீரா இப்போது, அஜித் புராணம் பாடுகிறார்.

'அஜித் பாதி, நான் பாதி' என்று சொல்லாத குறையாக, அஜித்துடன் எப்போதும் ஒட்டியபடியே இருக்கிறார் ஹீரா.

'என் நல்ல நண்பர் அஜித். அவருக்கு ஒரு சோதனை வரும் போது நாம் உதவாவிட்டால் எப்படி. நான் நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவள். சக மனிதர்களை மதிப்பவள். அவ்வளவு தான் கூற முடியும்" இது ஹீராவின் வாக்குமூலம்.




## 'கடன் மனமே வா'

நடிகர் ராமராஜனுக்கு ஏகப்பட்ட கடன். எம்.பியாக தேர்தலில் நின்றும் ஒரு கோடி வரை கையால் போனது.

'பூ மனமே வா' படமும் பாதியில் நின்றது. படத்தை தொடர்ந்து எடுக்க பணம் வேண்டும். முன்னாள் தமிழக அமைச்சர் ரகுபதியிடம் கடன் கேட்டிருக்கிறார்.

ரகுபதியின் எதிர்பார்ப்பை நடிகை ஒருவர் மூலம் தீர்த்து வைத்தார். கடன் கைக்கெட்டியது.

கடன் தொல்லையில் இருந்து மீள்வதற்காக 'பூ மனமே வா' படப்பிடிப்பை தொடரப்போகிறார் ராமராஜன். ஆனால் சங்கீதா முரண்டுபிடிக்கிறார். ராமராஜனுடன் நெருக்கமாக இருந்த சங்கீதா தற்போது அவருக்கு முள்ளாக மாறியிருக்கிறார்

ஹீரா | முகப்பில் | அஜித்குமார்

"பாலாடை மேனி— பனி வாடைக் காற்றில்
நீராட வந்தேனடி! — சிறு
நூலாடும் இடையில் மேலாடும் உடைகள்
போராடக் கண்டேனடி!"



பிரபுதேவா-கீர்த்திரெட்டி-சுஜாதா
படம்: நினைவிருக்கும்வரை

## தாமதம்

கனடாவில் கலை நிகழ்ச்சி ஒன்றுக்கு சென்றார் கரண். அங்கு விவகாரமான கிளப்புகளுக்கு சென்றதால் படப்பிடிப்பு ஒத்திகைகளுக்கு செல்லவில்லையாம்.

வளர்ந்துவரும் நடிகரான கரண் இப்படிச் செய்யலாமா? என்று கேட்கிறார் இயக்குநர். அதுமட்டுமா, சென்னையில் பஸ் சாரதி ஒருவரை கரண் தாக்கியிருக்கிறார். அதுவும் பெரிய பிரச்சனையாகி ஓய்ந்திருக்கிறது.

## மம்முட்டி அஜித் அப்பாஸ்

'மின்சார கனவு' படத்தை இயக்கியவர் ராஜீவ் மேனன். அவரது இயக்கத்தில் மூன்று கதாநாயகர்கள் நடிக்கிறார்கள். மம்முட்டி, அஜித்குமார், அப்பாஸ். இப்படத்திற்கு நீளமாக பெயர் வைத்துள்ளனர். 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்.'

இப்படத்தில் ஐஸ்வர்யா ராய், தபு ஆகியோர் கதாநாயகிகள். மணிவண்ணன், நிழல்கள் ரவி, ஸ்ரீவித்யா ஷாமிலி ஆகியோரும் நடிக்கின்றனர்.

படப்பிடிப்பு ஆரம்பமாகி சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

## சுவாதியின் நட்பு

வேலு பிரபாகரன் இயக்கும் படம் 'சிவன்'. இப்படத்தில் நெப்போலியன் அருண்பாண்டியன் இருவரும் கதாநாயகர்கள். சுவாதியை இப்படத்தில் ஒருவழி பண்ணிவிட்டார் நெப்போலியன். சுவாதி குப்புறப் படுத்திருக்க அவர்மீது நெப்போலியன் எண்ணெய் தேய்க்கிற காட்சியும் படமாக்கப்பட்டது.

மழையில் சொட்ட சொட்ட நனைந்து போன சுவாதியை நெப்போலியன் அணைக்கிற கிளுகிளுப்பான காட்சியும் இருக்கிறதாம். காட்சிகளில் நெப்போலியனுடன் நெருங்கி நடித்தாலும், சுவாதி இப்பட நட்பால் நெருங்கியிருப்பது அருண்பாண்டியனிடம். எப்படி பற்றிக் கொண்டது இந்த நட்பு என்பது அவர்கள் இருவருக்கு மட்டுமே வெளிச்சம்.

## என்னுடன்

படவாய்ப்புக்கள் இல்லாமல் வீட்டில் ஈ அடித்துக் கொண்டிருக்கிறார் சங்கீதா. அவரை அழைத்து வந்து 'என்றும் என்னுடன்' படத்தில் வாய்ப்புக் கொடுத்திருக்கிறார் புது இயக்குநர் ராகவேந்திரா.

இப்படம் வெற்றி பெற்றால் சங்கீதா காட்டில் மழை பொழிகிறதோ இல்லையோ தூறலாவது விழும்.

சினி அலசல் | குண...

படம்: கள்ளழ... நடிப்பு: விஜய... இயக்கம்: பா... ஒளிப்பதிவு: ... மத ஒற்றுமையை வ... வெடிப்பை அடுத்து, கு... படங்கள் தயாரிகின... விஜயகாந்த் ஒரு ... முஸ்லிம் தீவிரவாதக்... அவர்கள் தனது வைக்... இந்துவாக வேசம் ... குண்டு வைப்பவர்களை... காதலிக்கிறார், ... கள்ளழகர் கோயில்...


படிப்பகம்

www.padippakam.com

## விஜயகாந்த் – குஷ்பு ஜோடிப் பொருத்தம்

'வீரம் வௌஞ்ச மண்ணு' படத்தில் விஜயகாந்த் குஷ்பு ஜோடிப்பொருத்தம் நன்றாக இருந்தது. அதனால் கள்ளழகர் படத்திலும் குஷ்புவை ஒப்பந்தம் செய்ய நினைத்தனர். புதிய முகமாக போட்டால் நன்றாக இருக்கும் என்று இயக்குநர் கூறியதால், லைலா நாயகியானார்.

தற்போது 'பெரியண்ணா' படத்தில் தனது ஜோடியாக குஷ்புவை போடுமாறு விஜயகாந்த் பலமாக சிபாரிசு செய்தாராம். ஆனால் குஷ்பு பிஸியாக இருப்பதால் தேதிகள் ஒத்துவரவில்லை. அதனால் விஜயகாந்த் ஜோடியாக மீனா நடிக்கிறார். விஜயகாந்த் ஜோடியாக நடிக்க முடியவில்லையே என்று குஷ்புவுக்கும் வருத்தம்தானாம்.

ஜாதி, மதம் பற்றியே தெரியாத கிராமம் ஒன்றை விஜயகாந்த் உருவாக்குகிறார். அதற்காக அவர் படும் கஷ்டங்கள்தான் கதை.

சூர்யா சிறைக்கைதியாக நடிக்கிறார். சூர்யாவின் காதலுக்கு விஜயகாந்த் உதவுகிறார். குறுக்கீடுகளை வெல்லுகிறார் என்று போகிறதாம் கதை. சித்திரைப் புத்தாண்டுக்கு வெளிவரக் கூடிய படம்.

## ...ட்டிய விஜய்

...ாமை', 'நட்புக்காக', ... படங்களை இயக்கித் ...ஸ். ரவிக்குமார். ...ாக நடிக்கும் படம் ...கப்போகிறார். இப்படத் ...ாமத்து இளைஞனாக ...ஜய். ...ல் புகுந்து விளை... அதனால் விஜய்க்கு ...க்கிறது. 'படையப்பா ...ா' என்று விஜய்மிடம்

## சாதனைக்கு சோதனை

பன்னிரண்டு கதாநாயகர்கள், பத்து கதாநாயகிகள், எட்டு நகைச்சுவை நடிகர்கள், எட்டு வில்லன்கள் என்றெல்லாம் ஆரவாரமாக ஆரம்பமான படம் 'சுயம்வரம்'.

இப்படம் எதிர்பார்த்தபடி பூர்த்தியாகுமா? என்று நாம் சந்தேகம் தெரிவித்திருந்தோமல்லவா. அது உறுதியாகி விட்டது.

பல நடிகர்கள் நழுவிவிட்டனர். தம்மிடம் சரியாகப் பேசாமல் தம் பெயர்களை போட்டு விட்டார் தயாரிப்பாளர் என்கிறார்களாம்.

ரஜினி, கமல் தொடங்கிவைத்த படம் இப்போது தொடர்ந்து வளர முடியாமல் நிற்கிறது.

உலக சாதனைக்கு திட்டமிட்டார்கள். உள்ளூர் சாதனைகூட தேறாது போலிருக்கிறது.

## ...நாதர்

...போது 'காதல் ... படங்களை தந்தி... ...தியன். தனது ... கூறியிருக்கிறார் அகத்தியர்.

...படிக்கும்போது ... காதல் கடிதம் ...ட்டேன். இந்த ... சாக்லெட். ...ம் கொடுங்க, ... தொந்தரவு ...ள் ஞாபகம்

அடுத்து கார்த்திக்கை வைத்து இயக்கும் படமும் காதல் கதைதானாம். 'காதல் கவிதை' படம் நன்றாக ஓடிக்கொண்டிருந்தது. 'துள்ளாத மனமும் துள்ளும்' வெளியானதால் போட்டி ஏற்பட்டுவிட்டது. இல்லையானால் 'காதல் கவிதை' காதல் கோட்டை போல வெள்ளி விழாத் தாண்டியிருக்கும்.

## மினி சினி

* ரஜினியின் 'பாட்ஷா', 'முத்து', 'அருணாச்சலம்' தெலுங்கில் அதே பெயர்களில் மொழிமாற்றப்பட்டு வெற்றிகரமாக ஓடின. தற்போது ரஜினியின் 'படையப்பா' தெலுங்கில் 'நரசிம்மா' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெளியாகப் போகிறது.

* சத்யராஜ்-ரோஜா நடித்து வரும் 'அழகர் சாமி' படத்தைத் தயாரித்து வரும் கே. பாலு, அடுத்து பிரபு கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இப்படத்தை பி.வாசு இயக்குவார் எனத் தெரிகிறது.

* தமிழ், தெலுங்குப் படங்களில் நடித்திருக்கும் மனிஷா கொய்ராலா முதன்முறையாக கன்னடப் படமொன்றில் நடிக்கிறார். 'சூர்யா' எனப்பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தின் ஹீரோ சிவராஜ்குமார்.

* டாக்டர் ராஜசேகர் நடித்த 'ரதயாத்திரா' என்ற தெலுங்குப்படம் 'மக்களுக்காக' என்ற பெயரில் தமிழுக்கு மொழிமாற்றப்பட்டு வருகிறது. இதில் ரோஜாவும் கஸ்தூரியும் கதாநாயகிகளாக நடித்திருக்கின்றனர்.

* பிரசாந்துடன் 'காதல் கவிதை' படத்தில் நடித்த இஷா கோபிகர், விஜயுடன் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். இதையடுத்து இவர் செல்வா இயக்கத்தில் கார்த்திக் ஜோடியாக புதிய படமொன்றிலும் நடிக்கவுள்ளார்.

* சக்தி ரீ.வி.யில் ஒளிபரப்பாகும் கே. பாலச்சந்தரின் 'ஜன்னல்' தொலைக்காட்சி நாடகத்தில் நாயகியாக நடிப்பவர் ரேணுகா. சமீபத்தில் இவர் மலையாளத்தில் கதாநாயகியாக நடித்துள்ள 'சமந்தரங்கள்' என்ற படம் வெற்றிகரமாக ஓடுகிறது.

* சத்யராஜின் முன்னாள் மனேஜர் ராமநாதன் தயாரிக்கும் படத்தில் பிரபுதேவா- அஜித்குமார் இருவரும் இணைந்து நடிக்கிறார்கள். இப்படத்தை ஆர்.சுந்தர்ராஜன் இயக்கவுள்ளார்.

* எஸ்.ஏ. சந்திரசேகரன் இயக்கத்தில் உருவாகும் 'பெரியண்ணா' படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிப்பவர் மானஸா. சினிமாவுக்காக மானஸாவாகியிருக்கும் இவரது நிஜப்பெயர் 'கங்கா'.

## மீண்டும் மணி

'இருவர்' படத்தின் நெத்தியடியான தோல்வியால், இந்திக்கு போனார் மணிரத்னம். 'தில்சே' சுமாராக ஓடியது. எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை. மீண்டும் தமிழுக்கு திரும்பியுள்ளார்.

'காதலுக்கு மரியாதை' போன்ற வெற்றிப் படங்களை தயாரித்த நடிகர் சங்கிலி முருகன் தயாரிக்கும் படம் ஒன்றை இயக்கப் போகிறார் மணி. கதை விவாதம் மிக இரகசியமாக நடந்து வருகிறது.



ராமராஜன்-சங்கீதா



விஜயகாந்த்-குஷ்பு



## பிரபு மறுப்பு

சத்யராஜ்-பிரபு நடிக்க மணிவண்ணன் இயக்கப்போகும் படம் 'மக்கள் நண்பன்' என்று அறிவிக்கப்பட்டது. சினி விசிட்டிலும் அச் செய்தி வெளியிட்டிருந்தோம். அப்படத்தில் நடிக்க மறுப்பு தெரிவித்துவிட்டார் பிரபு. ...

## சத்யராஜ் வீர நடை

சத்யராஜின் 'கல்யாண கலாட்டா'வும், அதையடுத்து தற்போது 'பொண்ணு வீட்டுக்காரன்' படமும் தமிழக திரையரங்குகளில் வசூலுக்கு பாதகமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கின்றன. இதனையடுத்து சத்யராஜ் மார்க்கெட் சீருக்கு வந்திருக்கிறது. மணிவண்ணன் இயக்கத்தில் 'மக்கள் நண்பன்' தயாராகப் போகிறது. அதற்கிடையே சீமான் இயக்கத்தில் 'வீர நடை' என்னும் பெயரில் தயாராகும் படத்திலும் சத்யராஜ் நடிக்கிறார். இப் படத்தில் சத்யராஜ் ஜோடியாக நடிப்பவர் குஷ்பு. இசை: தேவா. பெப்ரவரி 15ம் திகதி படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.

## விஜய் – பிரசாந்த்

## இரகசியம்



சுஷ்மிதா சென்

## தேடும் கள்ளழகர்

..., லைலா, நாசர், திலகன், மௌலி. இசை: தேவா. ...ர்பச்சான். பாடல்கள்: வைரமுத்து. ...த்தும் படம். இந்தியாவில் கோவைக் குண்டு ...வைப்பை மையமாகக் கொண்டு மனமவென்று ... ஒன்று கள்ளழகர். ...ம். அவரது சகோதரியின் கணவர் மௌலி ...வைச் சேர்ந்தவர். கள்ளழகர் கோவிலில் ...டமிடுவதை அறிகிறார் விஜயகாந்த். ...ட்டுக்கொண்டு சென்று, நாசர் உதவியுடன் ...டுபிடித்து முறியடிக்கிறார். அங்கு லைலாவை ... விழாவை தங்கர்பச்சானின் கமரா சிறப்பாக படம் பிடித்திருக்கிறது. விஜயகாந்துக்கு முஸ்லிம் இளைஞர் வேடம். அவ்வளவாக ஒட்டவில்லை. அவரது தந்தையாக வரும் திலகன் பாத்திரத்தோடு ஒன்றியிருக்கிறார்.

கடைசி சண்டைக் காட்சியும், வில்லன் மர்மமும் அசத்தல்...

குண்டை கண்டுபிடிக்கும் முயற்சிகள் சிறு பிள்ளைத்தனமாக உள்ளன. படம் பார்ப்போருக்கு பரபரப்பு தொற்றிக் கொள்ளத்தக்க காட்சியமைப்புக்கள் இல்லை. விஜயகாந்தை சரியாக பயன்படுத்த இயக்குநர் தவறிவிட்டார்.

**அபிப்பிராயம்:** சுமார் அழகர்.

## காதலனுடன் மோதல்

உலக அழகியான சுஷ்மிதா சென் புகைப்படங்களுக்கு போஸ் கொடுப்பதில் சளைக்காதவர்.

நடிகையான பின்னரும் போஸ் கொடுப்பதை விடவில்லை. மும்பாய் சினிமா சஞ்சிகைகளுக்கு விதம் விதமாக போஸ் கொடுத்து கலக்கியிருக்கிறார்.

கவிதைகள் எழுதுவது, காதலருடன் சுற்றுவது, இசையை ரசிப்பது என்று ஏகப்பட்ட பொழுது போக்குகள்.

விக்ரம் பட் என்பவரை சுஷ்மிதா காதலித்து வருகிறார். சுஷ்மிதா படங்களில் நடிக்கத் தொடங்கிய பின்னர் இருவருக்கும் இடையே ஊடல்கள் அதிகமாகி விட்டன.

தன்னுடன் நடிக்கும் நடிகர்களுடன் சுஷ்மிதா நெருங்கிப் பழகுவது விக்ரம் பட்டிற்கு பிடிக்கவில்லை. குறிப்பாக 'ரட்சகன்' படத்தில் நாகார்ஜுனுடன் சுஷ்மிதா கொட்டமடித்ததை அறிந்து விக்ரம் பட் சுடுதண்ணியாகி விட்டாராம்.

தற்போது 'இந்துஸ்தானி தீ கஸம்' என்ற படத்தில் அஜய் தேவ்கானுடன் நடிக்கிறார் சுஷ்மிதா. படப்பிடிப்பு முடிந்ததும் நேராக வீடு திரும்ப வேண்டும்' என்று அறிவுறுத்தியுள்ளாராம் விக்ரம் பட்.

## மூன்று தேர்தல் சில கோடை ஒரு மரணம்

ஐப்பசிக் காற்று,
பழுத்துதிரும் உன்னிறத்து-
அந்த மஞ்சமுனா இலை,
இன்றின் பௌர்ணமி
எல்லாமுரயெனை
மனம்-
நினைத்திற்று உன்னை!
**
நேற்றுப் போல்தானிருக்கும்
அப்பிரிவு,
ஒரு வறுமையின் இம்சையை
உயிருக்குள் உணர்த்திற்று!
**
இது துயரமில்லை,
துக்கமில்லை,
அவஸ்தைகூட இல்லை.
ஆயினுமேதோ
வாடி, வரட்சித்து
புழுதி கிளப்பிற்று
நெஞ்சுள்!
**
இனி,
உனைப் பார்த்தால் தூறும்
என்-
உயிர்க் கூட்டுள் மழை!
மீண்டும்,
அருவிகள் சலசலக்கும்
தாமரை இதழ் விரிக்கும்
ஆமாமினி,
எல்லாமே என் நதியில்
மூழ்கி, மூழ்கி சந்தோசிக்கும்!
**
ஆனால்,
நீ வருவதாயில்லை.
**
நீ வரமில்லை, சுவர்க்கமில்லை
ஆக-
தவங்களென்பதும் என்னிடமில்லை.
ஒரு வசந்தம் போலவே
உன் வரவு பார்க்கிறேன்
ஆயினும் நீ வரவேயில்லை!
**
மூன்று தேர்தல்
சில கோடை
ஒரு மரணம்
இத்தனை நிகழ்ந்த பின்னும்
நீ வரவேயில்லையே..!
**
பார்த்துப் பிரிந்து
பிரியும் முன் பார்த்து...
எத்தனை வருடங்கள்
ஆயிற்று பெண்ணே!?

யூயெல் மப்றூக்-
அட்டாளைச்சேனை.

## "குருட்டு நம்பிக்கையுடன்..."

பூஜ்ஜியங்களின் கூட்டலும்
பெருக்கலும்
பூஜ்ஜியத்திலேயே
முடிந்துபோவது போல,
என் காதலையும்
பூஜ்ஜியமாகவே வைத்துவிட்டாய்!
••
அலைகள் கொண்டுவரும்
நண்டுகளுக்காய்
காத்திருக்கும்
கடல் காக்கையைப் போல,
உனக்காகக் காத்திருந்த என்
எதிர்பார்ப்புக்களுக்கு
தீ வைத்துவிட்டுப்
போய்விட்டாயே பெண்ணே!!
••
மொட்டுக்களே இல்லாத
தோட்டத்தில்
தேன் தேடியலைந்தது
என் முட்டாள்தனம்தான்!
எனக்குத் தெரியும்!
நீ போட்ட காதல் கடிதம்
எப்போதுமே என் முகவரிக்கு
வந்து சேரப்போவதில்லை!
••
என்றாலும்,
படையிலிருந்து
தப்பியோடிய சிப்பாய்க்கு
வழங்கப்படும்
மன்னிப்புக்காலம் மாதிரி
'நீ வருவாய்' என்ற ஒரு
••
'குருட்டு
நம்பிக்கை'யுடன்
கடைசி வரைக்கும்
உன்னை
மட்டுமேதான்
எதிர்பார்த்திருப்பேன்!

பர்ஸான்- யடவத்த, நிககொள்ள.

## தேன் கிண்ணம்

## ஒரு தலைக் காதல்

என்ன பைத்தியக்காரத்தனம்,
உன்னிடம் தந்துவிட்டு
தேடித் திரிகின்றேன்
என் இதயத்தை!
***
நீயே
வைத்துக்கொள்!
***
ஏன் என்றால்,
நான்
ஒரு மாதிரி-
யார் கேட்டாலும்
எதுவென்றாலும்
கொடுத்துவிடுவேன்!
***
ஆகவே,
உன்னிடமிருப்பது தான்
பாதுகாப்பானது.
***
நீ தான்
யார் கேட்டாலும்
எதுவானாலும்
கொடுக்கமாட்டாயே.
உன்
இதயத்தையும் தான்...!

யாழ்- ஞானகணேசன்.

## வாராயோ நீ...?

இந்த
காதலர்கள்
தினத்திலும்கூட...
••
நீ அனுப்பும்
சிவப்பு ரோஜா
பொதியில் வந்தது!
••
சிரிப்பும் பேச்சும்
ஒலிப்பதிவு
நாடாவில் வந்தது,
••
கணனியில்
நீ அனுப்பும்
கவிதை வந்தது!
••
அந்நிய நாட்டில்
நீ
பதிவு பெறும்வரை...
••
சொந்த தேசத்து
அகதி எனக்கு
கண்ணில்
நீர்தான் வருகிறது!

மேகலா இரஞ்சித்-
கொழும்பு-06.

## அந்த நாள் ஞாபகம்



இந்த இரு சிறுமிகளுமே இப்போது வெகு பிரபலமானவர்கள். ஒருவர் ஸ்ரீதேவி. இன்னொருவர் வீணை காயத்ரி. இவரை நம் நாட்டில் அநேகருக்கு தெரிந்திருக்காது. 'வீணை மேதை' என்று இப்போது அழைக்கப்படுகிறார். ஸ்ரீதேவி முகத்தில் அப்போதே என்னமாய் ஒரு மலர்ச்சி!



காயத்ரி




ஸ்ரீதேவி

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் கானி

28.02.99 முதல் 06.03.99வரை



மேடம்: சகோதரர்கள் அநுகூலம், பயணம் வரவும் செலவும் சமம்.

இடபம்: புதிய உறவுகளில் எச்சரிக்கை தேவை. குடும்பச் சூழலில் சிறிய பாதிப்பு சமபலன்.

மிதுனம்: குடும்பத்தில் நற்காரியச் சிறப்பு. செலவு மிகுதி. கடன் படல்.

கற்கடகம்: கடும் முயற்சி. சமபலன். புத்திரரால் கவலை.




சிம்மம்: அரச அநுகூலம், நண்பர்கள் சேர்க்கை, விருந்தோம்பல்.

கன்னி: விரோதிகளால் தொல்லை, பண நெருக்கடி. மனக்கிலேசம்.

துலாம்: உறவினர் ஒன்று கூடல், எதிர்பாராத உதவி, மனக்கிலேசம் நீங்குதல்.

விருட்சிகம்: பண வரவு, புதிய உறவுகள், குடும்பத்தில் சிறு சச்சரவு.



தனு: மனச் சஞ்சலம், ஆலயதரிசனம், பெரியோர் சகவாசம்.

மகரம்: குடும்பத்தில் நற்காரியம், மன மகிழ்ச்சி, அரசபயம்.

கும்பம்: ஆலய தரிசனம், பொருள் இழப்பு, பயணத்தால் உடல் நலம் பாதிப்பு.

மீனம்: விருந்து வைபவம், வீண் அலைச்சல், உடல் நலம் பாதிப்பு.

## பேனா நண்பர்கள்



பெயர்: வி. கோமகன்,
வயது: 16
முகவரி: 152, பி, செட்டியார் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: ஏ. ரொஹான்,
வயது: 22
முகவரி: மெகஸீன் வீதி, திசாவெவ, அநுராதபுரம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ரி. யசிந்தா,
வயது: 17
முகவரி: கற்பகபுரம், பம்பைமடு, வவுனியா.
பொழுது போக்கு: வழமையானவை.

## பாடப்புத்தகத்தில் சினிமா புகுந்தால்.....!



### சித்திரம் வரைக:

1. பாண்டியராஜன் கண்கள்.
2. நெப்போலியன் மீசை
3. கமலின் மருதநாயக தாடி
4. சிம்ரனின் தொப்புள்
5. ரம்பாவின் தொடை
6. அப்பாஸ் முகத்தில் மீசை வரையவும்.





### கணிதம்

கவுண்டமணி செந்திலை 637 படங்களில் உதைத்திருக்கிறார். இவற்றுள் வலது காலால் உதைத்தது 319 முறைகள். இடது காலால் உதைத்தது எத்தனை முறை?

ஓமக்குச்சி நரசிம்மன் தலையில் எத்தனை முடிகள் இருக்கின்றன? துல்லியமாக எழுதவும்.







### சரித்திரம்

சித்தூர்ராணி பத்மினியாக நடித்தவர் யார்?

நடிகை மும்தாஜ் நடித்த முதல் படம் எது?

அசோகன் பி.ஏ. பட்டதாரி சரியா? தவறா?

கு.மு., கு.பி. விளக்குக.
குஷ்பு வருவதற்கு முன்பு .
குஷ்பு வந்த பிறகு.
சரித்திர நாயகன் ஒருவர் பெயரைச் சொல்:






### பாலர் வகுப்பு

அ for அரவிந்த்சாமி
ஆ for ஆனந்தராஜ்
இ for இளவரசி
ஈ for ஈஸ்வரிராவ்
உ for உன்னிகிருஷ்ணன்
ஊ for ஊர்வசி
(மீதி எழுத்துக்களை கண்டுபிடித்து எழுதவும்)





### விஞ்ஞானம்

பிரபுதேவா பூமியின் புவி ஈர்ப்புச் சக்தியினால் இழுக்கப்படாமல் வளைந்து நெளிந்து தோன்றுகிறாரே? அது எப்படி?

'சுகன்யாவின் தொப்புளில் சுற்றி விடப்பட்ட பம்பரம் நீண்ட நேரம் சுழன்றது எதனால்?' என்பதை ஆதாரப்பூர்வமாக விளக்குக.




முத்தக்காட்சியின்போது ஏற்படும் இரசாயன மாறுதலை உணர்ச்சி பூர்வமாக விளக்கத் தகுதிபடைத்தவர் ரஜினியா? கமலா?



### பூகோளம்

'ஜீன்ஸ்' படப்பிடிப்பு நடைபெற்ற ஊர்களை வரைபடத்தில் காட்டுக.

உலகம் உருண்டையானது என்று எப்படித் தெரியும்?

"சுவலட்சுமி முகம் உருண்டையாய் இருக்கிறது. அதனால்."

ஆபிரிக்கா அழகியாக நடித்தவர் பெயரை எழுதவும்?



### உடற் பயிற்சி



1. 'புன்னகை மன்னன்'னிலே ரேவதி செய்த எக்சர்சைஸ் செய்யவும்.
2. சினிமாக் காதலர்கள் பாடிக் கொண்டே ஓடுகிற மாதிரி மரத்தைச் சுற்றி ஓடவும்.



3. கவுண்டமணி மாதிரி காலை உதறவும்.
4. வெண்ணிற ஆடை மூர்த்தி மாதிரி கனைக்கவும்.
5. பிரபுதேவா மாதிரி வளையவும்.



### சங்கீதம்

1. 'ஹைரே ஹைரே' மெட்டில் 'டுவிங்கிள் டுவிங்கிள் லிட்டில் ஸ்டார்' பாட்டைப் பாடவும்.
2. மேசை மேலே ஏறி 'தய்ய தய்யா தய்யா தய்யா' பாடவும்.
3. கொலம்பஸ் பாட்டை கல்யாணி ராகத்தில் பாடவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## குளிர்பானமும் தலைவலியும்



ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் போன்றவற்றை சாப்பிடுபவர்களுக்கு தலைவலி ஏற்படும் என்பதை இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். குளிர்ந்த பொருட்களைச் சாப்பிட்டு முடித்ததும் 30 முதல் 60 விநாடிகளுக்குள் தலைவலி கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக் கத் தொடங்கி விடுகிறது.

ஐஸ் கிறீம், குளிர் பானம் இரண்டையும் அடுத்தடுத்து சாப்பிடுபவர்களுக்கு கூடுதலான தலைவலி உண்டாகிறதாம்.

இதேவேளையில் குளிர்பானம் அருந்துவதால் ஏற்படுகின்ற தலைவலிக்கும் ஐஸ்கிறீம் சாப்பிடுவதால் ஏற்படுகின்ற தலைவலிக்கும் வித்தியாசம் இருக்கிறது.

ஐஸ்கிறீம் சாப்பிடுவதால் ஏற்படும் தலைவலி கிட்டத்தட்ட ஒற்றைத் தலைவலி போலவே இருக்கும்.

எனவே ஐஸ்கிறீம், குளிர்பானம் உடலுக்கு ஒத்துக்கொள்ளாதவர்கள் அதை மிகக் குறைந்த அளவில் சாப்பிடுவதே புத்திசாலித்தனம்.

## பாதம் பதம்

கால் பாதங்களைப் பராமரிப்பது எப்படி?



- கால் பாதங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள். இவ்வாறு இருப்பதால் கால்களில் சொறி, சிரங்கு வராமல் பார்த்துக் கொள்ளலாம். குளிக்கும்போது மட்டுமன்றி, கால்களைத் தினமும் 3,4 தடவைகள் சவர்க்காரம் போட்டுக் கழுவி சுத்தமான துண்டால் துடையுங்கள்.
- கால் விரல் நகங்களை வளர வளர வெட்டி விடுங்கள். கட்டையும் நெட்டையுமாக வெட்டாமல் நகங்களை ஒரே மாதிரியாக வெட்டுங்கள்.
- இரண்டு வாரத்திற்கு ஒருமுறை இலேசான சுடுநீரில் சவர்க்காரம் கலந்து, அதில் கால்களை அமிழ்த்தி வையுங்கள். பின்பு குதிக்காலைத் தேய்த்துச் சுத்தப் படுத்தவும். இதன் மூலம் பாதங்களின் அழகையும், ஆரோக்கியத்தையும் பாதுகாக்கலாம்.
- நல்ல தரமான செருப்புக்களையே பயன் படுத்துங்கள்.

## நகம் நீளமா?

நகங்களை நீளமாக வளர்ப்பதுதான் இன்றைய நாகரிகம் என்ற கருத்து பலரிடையே பரவியுள்ளது. விரலின் விளிம்புக்கும் அதிகமாக நகங்களை வளரவிடுவது அவ்வளவு நல்லதல்ல.

சாதாரணமாக எந்தவிதமான வேலைக்கும் நீளமான நகங்கள் இடைஞ்சலாகவே இருக்கும். மேலும் அது பிய்ந்தும், உடைந்தும் தொல்லைதரும். நடுவில் பிரிந்து அல்லது அரைகுறையாக உடைந்து மூளியாகக்



காட்சியளிக்கும் நகம் விரலின் அழகையே கெடுத்துவிடும்.

எனவே அதிக நீளமான நகம் வளர்க்காதீர்கள். நக வெட்டியைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட தினங்களுக்கு ஒருமுறை வெட்டி விடுங்கள். நகத்தை நீக்குவதற்குப் பல்லால் கடிப்பது தவறாகும். அது அசிங்கமான பழக்கம் என்பதோடு ஆரோக்கியத்திற்கும் கேடு.

## சூப்பர் அதிஷ்டசாலிகள் இவர்கள்தான்

முரசு, அம்மன் ஜுவல்ஸ் தங்கமாலை பரிசுப்போட்டியில் முதல் மூன்று சூப்பர் அதிஷ்டசாலிகளை அறிய ஆவலாக இருப்பீர்கள் அல்லவா.

அம்மன் ஜுவல்ஸ் உரிமையாளர் தேர்வு செய்த அந்த அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் இதோ:

*1. தங்கமாலையைப் பரிசாகப் பெறுபவர்:*
ரி. சந்திரா
140, பிரதான வீதி,
நோர்வூட்.

*2. தங்கமோதிரத்தைப் பரிசாகப் பெறுபவர்:*
என். பியாமா
ஏ 4, கம்பளை வீதி,
தெல்கவதெனிய,
ஹெம்மாத்கம.

*3. சமையல் அடுப்பைப் பரிசாகப் பெறுபவர்:*
எஸ்.எம். கௌரி
14, நிக்கோலோயா வீதி,
இரத்தோட்டை.

பரிசு பெற்ற 53 அதிஷ்டசாலிகளுக்கும் முரசின் வாழ்த்துக்கள்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FH

பெயர்:.............................
முகவரி:.............................
.............................
தொழில்:.............................
கையொப்பம்:.............................

**உண்மை — நேர்மை — வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-03-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 76

புவனா



டயானா திருமணத்தைப் பற்றிய பேச்செடுக்கும் போதெல்லாம் நழுவிக் கொண்டிருந்த டாக்டர் ஹஸ்னட், டயானாவை சந்திப்பதை குறைத்துக் கொள்ள ஆரம்பித்தார்.

தொழிலில் ஓய்வில்லாமல் இருப்பதால்தான் தன்னை அவர் சந்திப்பது குறைந்துள்ளது என எண்ணிக் கொண்டார் டயானா.

எதிலும் கண்மூடித்தனமான நம்பிக்கை வைத்துவிட்டால், உண்மைகள் புரிவதற்கு நாளாகும்.

நாம் மிக விரும்பும் ஒருவர் தவறு செய்தால்கூட, அதற்கு நாமே ஒரு நியாயம் கற்பித்துக் கொண்டு ஆறுதல் பட்டுக் கொள்வது உண்டுதானே.

தொடர் ஏமாற்றங்களை சந்தித்தவர் டயானா. டாக்டரும் தன்னை ஏமாற்றிவிடுவார் என்பதை கற்பனை செய்து பார்க்கக்கூட அவர் விரும்பவில்லை.

அதனால் டாக்டர் ஹஸ்னட்டின் நழுவல் போக்கையும் டயானா தனக்கு சாதகமான எண்ணங்களால் நியாயப்படுத்திக் கொண்டார்.

டாக்டரின் குடும்பத்தினர் பாகிஸ்தானில் இருந்தனர். எப்போதோ ஒருமுறை அந்த முகவரியை டாக்டர் கொடுத்திருந்தார்.

### லாகூரில்

டாக்டரை மணந்து கொள்ள விரும்பிய டயானா, அதற்கு முன்னர் அவரது குடும்பத்தினரைக் காண விரும்பினார்.

டாக்டருக்கும் சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று பாகிஸ்தானுக்குப் புறப்பட்டார்.

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானின் மனைவி ஜெமீமாவும் டயானாவும் நண்பிகள்.

ஜெமீமாவின் உதவியுடன்தான் டாக்டரின் குடும்பத்தினர் இருக்கும் முகவரிக்கு டயானா போய்ச் சேர்ந்தார்.

பாகிஸ்தானில் லாகூரில் டாக்டரின் குடும்பத்தினர் வசித்தனர். அவர்களுக்கு டயானா தங்கள் வீடு தேடி வந்திருப்பதை கண்டதும் நம்பவே முடியவில்லை.

ஒருவிதமாக சுதாகரித்துக் கொண்டு, டயானாவை வரவேற்று, நன்கு உபசரித்தனர்.

டாக்டரின் தாயாருடன் மிகவும் பாசமாக நடந்து கொண்ட டயானா, தனக்கும் டாக்டருக்கும் உள்ள காதலை கூறவில்லை. 'தனது நெருங்கிய நண்பர்' என்று மட்டுமே கூறினார்.

அவர்களிடம் தன் காதலை வெளிப்படுத்தி, திருமணத்திற்கும் அனுமதி பெறவேண்டும் என்று எண்ணியே பாகிஸ்தானுக்குப் போயிருந்தார்.

பாகிஸ்தானில் தங்கியிருந்த மூன்று நாட்களும் தொடர்ச்சியாக டாக்டர் வீட்டுக்கு போய் வந்தார்.

என்ன காரணமோ தெரியவில்லை, அவரால் டாக்டர் குடும்பத்தினரிடம் தன் காதலையோ, மன உணர்வையோ வெளியிட முடியவில்லை.

ஆனாலும் டாக்டர் குடும்பத்தினரை அவருக்கு மிகவும் பிடித்துக் கொண்டது. டயானாவை அவர்களுக்கும் மிகவும் பிடித்திருந்தது.

தங்கள் மகன் பிரபல டாக்டர் என்பதால், இப்படியான பெரிய இடத்து நட்புகள் சகஜம் என்றே டாக்டரின் பெற்றோர் நினைத்தனர்.

டயானாவின் நட்பை தம் மகன் பெற்றதை எண்ணி சந்தோசப்பட்டனர்.

தமது வீட்டுக்கு டயானா வந்துவிட்டுப் போனதை, தமது மகனுக்கு தொலைபேசியில் தெரிவித்தனர்.

## "அவர் என்னை ஏமாற்றவில்லை"



டாக்டர் இதனை எதிர்பார்க்கவில்லை. டயானாவிடம் இருந்து தப்ப முடியாதோ என்று கலக்கமடைந்தார். டயானாவுடன் தொடர்பு கொள்ளலாம் என்றால், தொலைபேசி இலக்கம் தெரியவில்லை. அவர் எங்கு தங்கியிருக்கிறார் என்ற விபரமும் தெரியவில்லை.

இம்ரான் கானின் மனைவியான ஜெமீமாவின் தொலைபேசி இலக்கம் டாக்டரிடம் இருந்தது.

ஜெமீமாவும் இலண்டனில் இருந்தபோது டாக்டரின் சிநேகிதிகளில் ஒருவராக இருந்தவர். இம்ரான் கானை மணமுடிக்க முன்னர் நிலவிய நட்பு அது. பின்னர் ஒரு நாள் இம்ரான் கானுக்கும் டாக்டரை அறிமுகம் செய்து வைத்திருந்தார் ஜெமீமா.

### குழப்ப வேண்டாம்

ஜெமீமா மூலமாக டயானாவின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்று தொடர்பு கொண்டார்.

டாக்டரின் குரலைக் கேட்டதும் டயானாவுக்குக் கொள்ளை கொள்ளையான சந்தோசம்.

ஆனால் அந்த சந்தோசம் நிலைக்கவில்லை. டாக்டரின் குரலில் வழக்கமான பரிவு இருக்கவில்லை.

"அங்கு என் பெற்றோர் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர். அடிக்கடி நீங்கள் அவர்களை சென்று சந்தித்தால், அவர்களும் பத்திரிகையாளர்களது தொல்லைகளுக்கு உள்ளாவார்கள். அமைதியை இழந்து போவார்கள். தயவு செய்து அங்கு போவதை நிறுத்திக் கொள்ளுங்கள். என்னிடம் கூடத் தெரிவிக்காது இப்படிச் செய்தது முறையல்ல" என்று டாக்டர் சற்றுக் கண்டிப்பான குரலில் கடகடவென்று பேசி முடித்தார்.

டயானா ஏமாற்றமடைந்தார். தனது பெற்றோரை சென்று பார்வையிட்டதற்காக டாக்டர் மகிழ்ச்சி தெரிவிப்பார் என்றே அவர் நினைத்திருந்தார்.

இப்போது டாக்டர் கண்டிக்கும் குரலில் பேசியதும், டயானாவுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது.

தழுதழுத்த குரலில், "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றார். அன்று முழுக்க டயானாவை இருந்த துக்கம் போர்வையாக மூடிக் கொண்டது.

மறுநாளே இலண்டன் திரும்பிய டயானா டாக்டரை தொடர்பு கொள்ள முயன்றார். டாக்டர் கிடைக்கவில்லை.

டயானாவுக்கு மெல்லப் புரிய ஆரம்பித்தது

### மறுப்பு

டாக்டருக்கும் டயானாவுக்கும் இடையிலான தொடர்பு பற்றி பத்திரிகைகளில் செய்தி வந்த பின்னர், டாக்டரை பத்திரிகையாளர்களும் துரத்தித்திரிந்தனர்.



பல நாட்களாக டிமிக்கி கொடுத்துவந்த டாக்டர், ஒருநாள் தானாகச் சென்று மாட்டிக்கொண்டார்.

டயானாவுக்கும் தனக்கும் தொடர்பிருப்பதாக வெளியாகும் செய்திகளை மறுக்க வேண்டும் என்பதாலேயே தானாக மாட்டிக் கொண்டார்.

பத்திரிகையாளர்கள் அவரிடம் சரமாரியாக கேள்விகளைத் தொடுத்தனர்.

"டயானாவுடன் சாதாரணமான நட்பு இருந்தது உண்மைதான். இனிமேல் அத்தகைய நட்புக்கூட நீடிக்க மாட்டாது. இது உறுதி!" என்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

இதனை பெரிய செய்தியாகப் பத்திரிகைகள் வெளியிட்டன.

### கண்ணீர்

டயானா பத்திரிகைகளைப் புரட்டிப்பார்த்தார்.

அவரது கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் முத்தாக உருண்டு அச் செய்தி வெளியான பத்திரிகையை நனைத்தது.

சுமார் ஒருவார காலமாக கடும் சோகச் சூழலில் சிக்கியவராகக் கிடந்தார்.

நெருங்கிய சிநேதிகள் மட்டுமே அவரை சந்திக்க அனுமதி கிடைத்தது.

பேட்டி கொடுத்த டாக்டர் சில காலம் யார் கண்ணிலும் படாமல் இருப்பதற்காக இலண்டனைவிட்டு வெளியே போயிருந்தார்.

'என்னை வஞ்சிக்காத ஆண்களே கிடையாதா?' என்று தன் சிநேகிதி ஒருத்தியிடம் கேட்டுக் கேட்டு தேம்பியழுதார் டயானா.

பின்னர் தன்னைத்தானே சமாதானப் படுத்துவதுபோல டயானாவே கூறினார்;

"டாக்டர் ஹஸ்னட் என்னை ஏமாற்றி விட்டதாக நான் சொல்லமாட்டேன். ஏனெனில் என்னை திருமணம் செய்வதாக அவர் ஒருபோதும் கூறியதில்லை. அவர் ஏமாற்றவில்லை. நான்தான் ஏமாந்து போனேன்"

டாக்டர் ஹஸ்னட் கானின் பிரிவில் இருந்து மீள்வதற்கு டயானாவுக்கு வேறு பிடிமானம் தேவைப்பட்டது. வேறு துணை தேவைப் பட்டது.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**வந்தாறுமூலை வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | அ. உதயானந்தி, விஷ்ணு ஆலய வீதி, வந்தாறுமூலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com





சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்,
சிந்தை இரங்காரடீ! - கிளியே!
செம்மை மறந்தாரடீ!

- சுப்பிரமணிய பாரதியார்.

# ஊருடன் கூடி வாழ்

## பாப்பா முரசு சிறுகதை

அந்த அடர்ந்த காட்டிலே பயங்கர மிருகங்களுடன் வித விதமான பறவைகள் வசித்து வந்தன. அந்தப் பறவைகள் எல்லாம் தங்கள் இனம், நிறம், குரல் ஆகியவற்றை மறந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தன.

ஆனால் அங்கு வசித்த கிளி ஒன்றும் குயில் ஒன்றும் காட்டில் இருந்த ஏனைய பறவை இனங்களோடு சேர்வது கிடையாது.

உலகிலேயே உயர்வானவன் மனிதன். அந்த மனிதனைப் போல் தன்னால் பேச முடியும் என்ற கர்வம் கிளிக்கு.

மனிதனே, தன் குரல் இனிமையைப் பாராட்டிப் பேசுகிறான் என்ற கர்வம் குயிலுக்கு இருந்தது.

இதனால் கிளியும், குயிலும் ஏனைய பறவைகளைவிடத் தாம் தான் உயர்ந்தவை என்று நினைத்துக் கொண்டிருந்தன.

மற்றப் பறவைகளைப் போல் இவை கூடு கட்டுவதில்லை.



கிளி ஏதாவது மரப் பொந்துகளில் வசிக்கும். குயில் ஏதாவது மரக்கிளைகளில் இருக்கும்.

ஏனைய பறவைகள், இவற்றிடம், எங்காவது கூடு கட்டி வாழும்படி கூறின. ஆனால் அதனை இவையிரண்டும் கேட்பதில்லை.

கிளி எப்போதும் மனிதர் பேசுவது போலப் பேசிக்கொண்டிருக்கும். குயிலோ எப்போதும் இனிமையாகக் கூவிக்கொண்டிருக்கும்.

'ஊருடன் கூடிவாழ்' என்பது முதியோர் வாக்கு. இதனை இரண்டு பறவைகளும் மதிக்கவில்லை. தவறு செய்தால் தண்டனை கிடைக்குமல்லவா? இவற்றிற்கு ஒரு வேடன் வடிவிலே ஆபத்து வந்தது.

அந்தக் காட்டிற்கு வேடன் ஒருவன் வந்தான். அப்போது அவனுக்கு கிளிபேசும் பேச்சும், குயில் கூவும் ஓசையும் கேட்டது.

இவை இரண்டையும் தன் இருப்பிடத்திற்குக் கொண்டு செல்ல விரும்பினான் வேடன். கிளியும், குயிலும் தனியாக இருந்ததால் இவற்றைப் பிடிக்க அதிகம் சிரமப்படத் தேவையில்லை என்று நினைத்தான்.

மறு நிமிடமே வலையைத் தயார் செய்து இரண்டையும் பிடித்துக் கூண்டில் அடைத்து விட்டான்.

மற்றப் பறவைகளின் சொற்கேளாமல், அவைகளோடு கூடி வாழாமல் இருந்ததால் கிளியும் குயிலும் வேடனிடம் இலகுவாக அகப்பட்டுக் கொண்டன.

'எல்லாருடனும் ஒற்றுமையாகக் கூடி வாழ்ந்திருந்தால் தமக்கு இந்நிலைமை ஏற்பட்டிருக்குமா?' என்று வருந்தின. இனி வருந்தி என்ன பயன்?


# அதிசயம் - ஆனால் உண்மை!



← முன்னர் இந்தியாவில் உள்ள குஜராத் மாநில பாடசாலைச் சிறுவர்கள் பாடங்களைத் தமது தொடைமீது, மரத்தாலான குச்சியை மையில் தோய்த்து எழுவார்கள். இவ்வாறு எழுதுவது 12 மணித்தியாலங்கள் அழியாமல் இருக்கும்.



← சியர்ரா லியோன் நாட்டின் பழங்குடி மக்கள் மண்டையோடுகள், தொடை எலும்புகள் கொண்ட தலை அலங்காரத்தை விரும்பி அணிகின்றனர். இதனால் இறந்தவர்களது மூளைச் சக்தியும், கால் வலுவும் தமக்குள் கிடைப்பதாகக் கருதுகிறார்கள்.



↑ ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள விலர் கவுடின் என்ற இடத்தில் நீண்ட சிலுவை ஒன்றுள்ளது. இதன் மீது தச்சனாரின் கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.

# சிக்மண்ட் பிராய்ட்

இந்த நூற்றாண்டின் உலகின் சிறந்த மனோதத்துவ அறிஞர்தான் சிக்மண்ட் பிராய்ட். இவர் 1856ம் ஆண்டு செக்கோஸ்லாவாக்கியா நாட்டில் உள்ள பிரிபேரில் பிறந்தார்.

சிக்மண்ட் பிராய்ட் நவீன உளவியலின் தந்தை எனக்கருதப்படுகிறார். இவரது புரட்சிகரக் கருத்துக்களால்தான் மனநோய் மருத்துவத்துக்கான சிகிச்சை முறை மாற்றப்பட்டது.

"மனிதன் தனது கனவிலும் வாய்தவறிப் பேசுவதிலும் தான் தன்னை உண்மையாக வெளிப்படுத்திக் கொள்கிறான். உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைத் தொடக்கி வைப்பவர் மறதியாக இந்நிகழ்ச்சியை முடித்து வைக்கிறேன் என்று சொன்னால் அனைவரும் சிரிப்பார்கள். ஆனால் அவர் அந்த நிகழ்ச்சியை முடித்து வைக்கத்தான் ஆழ்மனதில் நினைக்கிறார்" என்று கூறினார் பிராய்ட்.

நோயாளியின் இன்றைய பிரச்சனைக்கு அவரின் சிறுவயது நிகழ்வுகளே காரணம் எனவும் பிராய்ட் கூறினார். இவரது இத்தத்துவப்படியே இப்போது பல



மருத்துவர்கள் சிகிச்சையளித்து வருகிறார்கள்.

யூத இனத்தைச் சேர்ந்த சிக்மண்ட் பிராய்ட் 1939ல் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **06.03.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **286**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 284

பரிசுக்குரியவர்:
அ. தியூபன்,
புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பா. திருமால்,<br>செட்டிபாளையம் ம.வி.கே, செட்டிபாளையம். | பீ.எம். ;,பாத்திமா நுஸ்கியா,<br>மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |
| எம். ஹிமாஸ்,<br>மின்ஹாஜ் ம.வி, நிக்ககொல்லை, மாத்தளை. | நிஷாந்தினி ரட்ணம்,<br>இ/ பலாங்கொடை த.ம.வி, பலாங்கொடை. |
| து. பிரதீபன்,<br>அஞ்சலகம், நீர்கொழும்பு. | ர. குமுதினி,<br>கலைமகள் த.மகா.வி., கவுடுபெலல்லை,மாத்தளை. |
| ஏ. அஸ்ரீனா பானு,<br>மஹ்மூட் மகளிர் கல்லூரி, கல்முனை. | வே. வெங்கட் றமணன்,<br>கொ/ இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி. |
| என். கெமன்சன் யூட்,<br>புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார். | எஸ். ரதீஸ்,<br>ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன். |

# பத்திரிகைச் செய்திகள்

### முதல் தினசரிப் பத்திரிகை!

உலகில் முதன்முதலில் வெளியான தினசரிப்பத்திரிகையின் பெயர் 'டசிங்பர்' என்ற அரச செய்தித்தாள். 6ம் நூற்றாண்டில் சீனாவின் தலைநகர் பீக்கிங்கில் இது வெளியானது.

***

### அதிக பக்கப் பத்திரிகை:

'த நியூயோர்க் டைம்ஸ்' என்ற பத்திரிகை 946 பக்கங்களைக் கொண்ட ஒரே இதழாக வெளியானது. இதன் நிறை 16.4 கிலோ. 1965ம் ஆண்டு வெளியான இப்பத்திரிகையின் விலை அரை அமெரிக்க டொலர்.

***

### அதிகம் விற்ற பத்திரிகை:

உலகில் மிக அதிகம் விற்பனையான பத்திரிகை 'டெலிவிஷன் கைட்' என்னும் அமெரிக்கப் பத்திரிகை. 1974ம் ஆண்டில், இப்பத்திரிகை ஒரு வருடத்தில் 100 கோடி பிரதிகள் விற்பனையானது.

***

### இரண்டு விலையுள்ள பத்திரிகை:

ஒரே பத்திரிகைக்கு இரு விலைகளில் ஜெர்மனியில் விற்பனையானது. 'கசேந்திர' என்ற இப்பத்திரிகை விலை பெண்களுக்கு 1.25 மார்க், ஆண்களுக்கு 1.50 மார்க்.

***

### பிளாஸ்டிக் பத்திரிகை:

இத்தாலியில் உள்ள ஒரு பிரபல தினசரிப்பத்திரிகை ஒன்று பிளாஸ்டிக்கினால் தயாரான காகிதத்தில் அச்சிடப்பட்டு வெளியாகிறது. இதனால் பயன் என்ன? கொட்டும் மழையிலும் இப்பத்திரிகையைப் படிக்கலாம்.

***

### முதல் குறுக்கெழுத்துப் புதிர்:

பத்திரிகைகளில் முதன் முதலில் குறுக்கெழுத்துப் புதிர் வெளியானது 1913ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் திகதி. 'நியூயோர்க் வேர்ல்ட்' என்ற பத்திரிகையில் வெளியான இந்தக் குறுக்கெழுத்துப் புதிரை உருவாக்கியவர் அத்தர்வின் என்பவர்.


***

# பென்சில்

✎ பெனிசிலஸ் என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்ததுதான் பென்சில். பெனிசிலஸ் என்றால் குட்டிவால் என்று அர்த்தம்.

✎ பென்சில் கண்டுபிடிக்கப்பட்டு 200 வருடங்களாகின்றன.

✎ 500 வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்தின் கம்பர்லாண்ட் சுரங்கத்தில் கிராஃபைட் கண்டு பிடிக்கப்பட்டு பென்சில்கள் உருவாக்கப்பட்டன. ஆனாலும் அவை முறையாக இருக்கவில்லை.




✎ 1756ல் என்.ஜே. கோல்ட் என்பவர் கிராஃபைட் கொண்டு விதம் விதமான பென்சில்களைத் தயாரித்தார். இப்போது சுமார் 350க்கும் மேற்பட்ட பென்சில் ரகங்கள் உள்ளன.

✎ துணிகளில், கண்ணாடிகளில், புகைப்படச் சுருள்களில் என ஒவ்வொன்றின் மீதும் எழுதுவதற்கென்றே பிரத்தியேகமாகப் பலவகையான பென்சில்கள் உள்ளன.

# மீண்டும் வந்த மீனினம்

பலநூறு வருடங்களுக்கு முன்பு அழிந்து போய் விட்டதாகக் கருதப்பட்ட மீனினம் ஒன்று மறுபடி வந்திருக்கிறது.

கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள அருங்காட்சியகத்தில் (மியூஸியம்) ஒன்றில் பணிபுரிபவர் டாக்டர் மார்ஜோரி கோர்டனி லட்டிமர் என்ற பெண்மணி.



இவர் 1938ம் ஆண்டு கடற்கரையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தார். கடலில் மீன் பிடித்து வந்த மீனவர்கள் சிலர் தாங்கள் பிடித்து வந்த மீன்களை விற்பனை செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது மீனவர் ஒருவரின் வலையில் இருந்த மீன் ஒன்று லட்டிமரின் கவனத்தை ஈர்த்து விட்டது. நீல நிறத்துடன், தடித்த துடுப்புக்களுடனும், கனமான எண்ணெய்ப் பிசுபிசுப்புடனான செதில்களையும் கொண்ட அந்த மீனை விலை கொடுத்து வாங்கினார்.

பின், தான் வேலை பார்க்கும் அருங்காட்சியகத்தில் வைத்தார். அந்த மீனை அப்படியே வரைந்து மீன் ஆராய்ச்சியாளரான பேராசிரியர் ஸ்மித் என்பரிடம் காட்டினார்.

படத்தைப் பார்த்த ஸ்மித் ஆச்சரியமடைந்தார். காரணம் அந்த மீனினம் அழிந்து பல வருடங்களாகிவிட்டன. பரிணாம வளர்ச்சியில் அந்த மீன் மீண்டும் கடலில் உற்பத்தியாகி இருக்கலாம் என்று தெரிவித்தார்.

மற்றவர் கண்ணில்பட்டு அந்த மீன் புசிக்கப்படுவதற்கு முன் லட்டிமர் அதை வாங்கி அருங்காட்சியகத்தில் பதப்படுத்தி வைத்து அரிய சேவை செய்ததால் அந்த மீனுக்கு 'லட்டிமர்' என்ற பெயரையே சூட்டி விட்டனர்.

இப்போதும் அந்த மீன் பதப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது.

# எது தெரியுமா?

உலகம் முழுவதும் பலரால் பாடப்படும் பிரபலமான பாடல் எது என்று தெரியுமா?

'ஹப்பி பேர்த்டே ரு யூ' என்னும் பிறந்தநாள் பாடல் தான். இது 1893ம் ஆண்டு அமெரிக்க ஆசிரியைகள் இருவர் தங்களது மாணவிகளுக்காக இந்தப்பாடலை இயற்றினார்கள்.

பிறந்த நாளை கேக் வெட்டிக் கொண்டாடும் முறை பல நூற்றாண்டுகளுக்கு முன் ஜெர்மனியில் அறிமுகமாகியது.




படிப்பகம்

www.padippakam.com

# மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

# டிசம்பர் பௌர்ணமி 18

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான். இந் நிலையில் சாந்தா காணாமல்போகிறாள்... **இனி.....**

"நான் சொன்னமாதிரியே அந்தப் பொண்ணு சாந்தாவோட விஷயத்தை முடிச்சிட்டே போலிருக்கே?"

விஜயராகவன் இப்படி டெலிஃபோனில் கூற மறுமுனையில் இருந்த சாமிதுரை சிரித்தான்.

"அய்யா! நீங்க ஒரு காரியத்தை செஞ்சுமுடின்னு சொன்ன பிறகும், நான் சும்மா இருக்க முடியுங்களாய்யா?"

"சரி... விஷயம் அப்போ பொலிஸ் ஸ்டேஷன் படியேறியிருக்கு. எல்லாம் கமுக்கமா இருக்கட்டும்."

"எனக்குத் தெரியாதா? நீங்க கவலைப்படாமே இருங்கய்யா... எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்... பேசின படி பணம் வந்துட்டா போதும்." –

"பணம் தானே? குடுத்துடறேன்."

"வீட்டுக்கு வரட்டுங்களாய்யா?"

"நீ வராதே! நானே உன்னோட இடத்துக்கு வர்றேன்."

"எப்ப வர்றீங்க?"

"இன்னிக்கு இராத்திரி ஒன்பது மணியிலிருந்து பத்து மணிக்குள்ளே வர்றேன்."

"மறந்துடாதீங்கய்யா..."

"மறக்க முடியுமா? பணத்தோட வர்றேன்."

விஜயராகவன் ரிஸீவரை வைத்துவிட்டு, டெலிஃபோன் பூத்தை விட்டு வெளியே வந்தார். மனசுக்குள் சந்தோஷம் எட்டிப் பார்த்தது.

'சாந்தா இனி இல்லை.'

'இனி விசாலிக்கு அவ ஆசைபட்ட மாதிரியே வாழ்க்கை அமையும்.'

இனிப்பாய் நிமிஷங்கள் கரைய, காரை ருத்ரமூர்த்தியின் வீட்டை நோக்கி விரட்டினார்.

★★★

போர்ட்டிக்கோவில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு, விசாலியும் ருத்ரமூர்த்தியும் எட்டிப் பார்த்தார்கள்.

ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரோடு பேசியபடி நித்தியனும் முகுந்தனும் காரினின்றும் இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

ருத்ரமூர்த்தி உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் அவர்களையே பார்த்துக் கொண்டிருக்க, அந்த இளவயது இன்ஸ்பெக்டர் தொப்பியைக் கழற்றி சுக்கத்தில் வைத்தபடி பக்கத்தில் வந்து நின்றார்.

"மிஸ்டர் ருத்ரமூர்த்தி..."

"சொல்லுங்க..."

"உங்க சன் நித்தியன் உங்க மேல ஒரு கம்ப்ளைன்ட் கொடுத்திருக்கார்..."

"என்ன கம்ப்ளைன்ட்?"

"அவர் காதலிச்ச பொண்ணு சாந்தாவுக்கு உங்களால ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கும்னு சொல்றார். இந்தக் குற்றச் சாட்டுக்கு நீங்க என்ன பதில் சொல்றீங்க?"

"இன்ஸ்பெக்டர்! அந்தக் குற்றச் சாட்டில் துளிகூட உண்மை கிடையாது. என் மகனோட காதலுக்கு குறுக்கே நின்னது வாஸ்தவம்தான். அந்தப் பொண்ணு சாந்தாவுக்கு டெலிஃபோன் பண்ணி மிரட்டியதும் வாஸ்தவம்தான். ஆனா அந்தப் பொண்ணு இப்போ காணாமே போனதுக்குக் காரணம் நானில்லை."

"பின்ன யாரு?"

"எனக்குத் தெரியாது. ஒரு பெண்ணைக் கடத்திட்டுப் போற அளவுக்கு நான் கொடுமைக்காரன் கிடையாது. எம் பையனுக்கு நல்ல இடத்துல கல்யாணம் முடியணுங்கிறதுக்காக நான் கொஞ்சம் மைல்டா ஸ்டெப்ஸ் எடுத்தது உண்மை."

நித்தியன் ஆவேசமாய் குறுக்கிட்டான்.

"இன்ஸ்பெக்டர்! நிச்சயமா இவர் மூலமாத்தான் சாந்தாவுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கணும். நீங்க இதுல கொஞ்சம் இன்ட்ரஸ்ட் எடுத்து டீப்பா என்கொய்ரி பண்ணினா, உண்மைகள் வெளியே வரலாம். என்னோட அப்பா அப்பாவித்தனமா முகத்தை வெச்சுக்கிட்டு பேசறதைப் பார்த்து ஏமாந்துடாதீங்க."

இன்ஸ்பெக்டர் இப்போது குரலை உயர்த்திக் கொண்டார்.

"மிஸ்டர் ருத்ரமூர்த்தி! உங்க சன் இவ்வளவு ஸ்ட்ராங்கா ஒரு குற்றச் சாட்டை சொல்லும்போது அதுல உண்மை இல்லாமே இருக்காது. அந்தப் பொண்ணு சாந்தா விஷயத்துல ஏதாவது எமோஷனலா பண்ணியிருந்தா... அதை இப்பவே சொல்லிடுங்க... சட்டரீதியா உங்களுக்கு எந்தவிதமான பிரச்சனையும் வராம நான் பார்த்துக்கிறேன்."



அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த விசாலி இப்போது குறுக்கிட்டாள்.

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! அங்கிளாலே சாந்தாவுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்காது. இந்த ஒரு கோணத்திலேயே கேஸை நீங்க பார்த்துக்கிட்டிருந்தா அது உண்மையான குற்றவாளிக்கு வசதியா போயிடும். கேஸை நீங்க டிஃபரன்ட் ஆங்கிள்ல யோசிச்சுப் பார்க்கணும்."

இன்ஸ்பெக்டர் அவளை ஏறிட்டார்.

"நீங்க?"

"என் பேர் விசாலி. நித்தியனுக்கும் எனக்கும்தான் நிச்சயம் பண்ணியிருந்தாங்க. எனக்கு இந்த 'நித்தியன்–சாந்தா' காதல் விவகாரம் தெரிஞ்சிருந்தா இவ்வளவு பிரச்சனைகள் வந்திருக்காது. உலகத்திலேயே மிகக் கொடுமையான காரியம் ரெண்டு காதலர்கள் சேரவிடாம பிரிக்கிறதுதான்."

"மிஸ் விசாலி! உங்களுக்கு இந்த காதல் விவகாரம் எப்போ தெரியும்?"

"ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான்."

"சாந்தா காணாம போனது எந்த இடத்துல?"

"மிஸ்டர் முகுந்தன் வீட்ல..." விசாலி சொல்லி முகுந்தனைக் கை காட்ட இன்ஸ்பெக்டரின் பார்வை இப்போது முகுந்தன் மேல் நிலைத்தது.

"உங்க வீட்டுக்கு சாந்தா எதுக்காக வந்தா?"

"ராஜ கணேஷ்னு ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர், ஏதோ ஒரு விபச்சார கேஸ் விஷயமா சாந்தாவை வந்து மிரட்டியிருக்கார்... சாந்தா பயந்துபோய் என் வீட்டுக்கு வந்தா. நான் நித்தியனுக்கு தகவல் கொடுத்து வரச் சொன்னேன். நித்தியனும் வந்தான். சாந்தாவை வீட்ல தனியா விட்டுட்டு ரெண்டு பேருமா அந்த இன்ஸ்பெக்டரைப் போய்ப் பார்த்து பேசிட்டு வந்தோம். சாந்தா வீட்ல இல்லை. தரையில இரத்தக்கறை இருந்தது. உடனடியா நித்தியனுக்கு அவனோட அப்பா மேல சந்தேகம் வந்தது. வந்து அவர்கிட்டேயே நேரிடையா கேட்டோம். அவர் சரியா பதில் சொல்லாததினால உங்ககிட்ட வந்து கம்ப்ளைன்ட் பண்ணினோம்."

"நீங்க ஸ்டேஷன்ல இவ்வளவு டீடெய்ல்லா சொல்லவேயில்லையே. வாங்க மொதல்ல உங்க வீட்டுக்குப் போவோம். அந்த இரத்தக்கறைகள் இன்னும் தரையிலேயே இருக்கா? இல்லை சுத்தம் பண்ணிட்டீங்களா?"

"அப்படியேதான் இருக்கு சார்."

"வாங்க அதைக் கவனிப்போம்." நித்தியனையும் முகுந்தனையும் அழைத்துக் கொண்டு இன்ஸ்பெக்டர் புறப்பட்டுப் போய் விட விசாலியும் ருத்ரமூர்த்தியும் கவலைப் பார்வைகளால் ஒருத்தரையொருத்தர் நனைத்துக் கொண்டார்கள்.

"அங்கிள்! நிலைமை இவ்வளவு மோசமா போனதுக்கு காரணம் நீங்கதான்.. நித்தியன் விரும்பியது அந்த சாந்தாவை. அவளுக்கு கட்டி வெச்சிருந்தா இவ்வளவு பிரச்சனைகள் முளைச்சிருக்குமா?"

"தப்புதாம்மா...! நீ இந்த வீட்டுக்கு மருமகளா வரணும்ங்கிற ஆசை என்னோட கண்ணை மறைச்சிருச்சு. அவ ஒரு அநாதைப் பொண்ணுதானே... மிரட்டினா பயந்துக்குவான்னு நினைச்சேன். ஆனா பிரச்சனை விஸ்வரூபம் எடுத்துருச்சு. இப்படியெல்லாம் ஒரு சூழ்நிலை உண்டாகும்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை."

"அங்கிள்.....!"

"என்னம்மா?"

"என்கிட்டேயாவது உண்மையைச் சொல்லுங்க?"

"உண்மையா? என்ன உண்மை?"

"சாந்தா இப்போது உயிரோடு இருக்காளா? இல்லையா?"

"என்னம்மா விசாலி! நீ கூட என்னைச் சந்தேகப்படறே... ஒரு பெண்ணை கொலை செய்யற அளவுக்கு நான் கல் நெஞ்சக்காரன் கிடையாது."

விசாலி ஏதோ பேச வாயைத் திறப்பதற்குள் போர்ட்டிகோவில் விஜயராகவனின் கார் வந்து நின்றது.

"அப்பா வந்துட்டார்."

ருத்ரமூர்த்தி எழுந்து போய் கலங்கிய விழிகளோடு வரவேற்றார். "வாங்க சம்மந்தி!" என்று சொல்ல வந்தவர். "வாங்க" என்கிற வார்த்தையோடு நிறுத்திக்கொண்டார்.

விஜயராகவன் முகத்தைத் திகைத்த மாதிரி வைத்துக்கொண்டு கேட்டார்.

"என்ன பிரச்சனை?"

விசாலி குரல் கொடுத்தாள்.

"அப்பா! நீங்க மொதல்ல வந்து இப்படி உட்காருங்க. கடந்த ரெண்டுமணி நேரத்துல இங்கே நடக்கக்கூடாத சில சம்பவங்கள் எல்லாம் நடந்துருச்சு."

"நீ என்னம்மா சொல்றே?"

முகத்தை அப்பாவித்தனமாக வைத்துக் கொண்டு மகளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார் விஜயராகவன்.

விசாலி சில நிமிஷங்களை எடுத்துக்கொண்டு எல்லாவற்றையும் சொல்லி முடிக்க அவர் செயற்கையான அதிர்ச்சியோடு ருத்ரமூர்த்தியை ஏறிட்டார்.

"உங்க பையனுக்கு காதல் விவகாரம் இருந்தா, அதை முடிச்சு வைக்க வேண்டியதுதானே? எம் பொண்ணு வாழ்க்கையோட ஏன் விளையாடணும்?"

"தப்புத்தான்! நான் செஞ்சது தப்புத்தான்."

"வாய்ல சொல்லிட்டா தீர்ந்ததா? இன்னிக்கு விவகாரம் வீட்டுப் படியைத் தாண்டி பொலிஸ் ஸ்டேஷனுக்கு போயாச்சு. என்னோட ஃபேமிலி ஸ்டேட்டஸுக்கு இது தேவையா?"

"அப்பா?"

"என்னம்மா?"

"அங்கிள் மேல எந்தத் தப்பும் இல்லை. நித்தியன் என்கிட்டேயே நேரிடையா விஷயத்தைச் சொல்லியிருந்தா பிரச்சனை ஓவர். இவ்வளவு தூரம் வந்திருக்காது."

"நீ சும்மாயிரும்மா... நித்தியனை கல்யாணம் பண்ணிக்க நீ எவ்வளவு ஆசைப்பட்டேன்னு எனக்குத்தான் தெரியும். ஜெயிலுக்குப் போயிருக்காங்கிற காரணத்தையும் தள்ளி வெச்சுட்டு சம்பந்தம் பேச ஒத்துக்கிட்டதே உனக்காகத்தான்... இன்னிக்கு அப்பாவும் மகனும் ரொம்ப சுலபமா ப்ளேட்டை மாத்திப் போட்டு பிரச்சனை பண்றாங்க. நான் இவங்களை சும்மா விடப்போறதில்லை."

"அப்பா!"

விஜயராகவன் விசாலி குறுக்கிட்டதையும் பொருட்படுத்தாமல் ருத்ரமூர்த்தியிடம், இரைந்தார்.

"ஹோட்டல்ல பல பேர் அறிய கல்யாணம் நிச்சயம் பண்ணியாச்சு. இன்விடேஷனையும் பிரிண்ட் பண்ணியாச்சு. இந்த நிலைமையில் கல்யாணத்தை நிறுத்தினா நான் ஒத்துக்கமாட்டேன். யார் உயிரோட இருந்தாலும் சரி.... காணாமே போனாலும் சரி... கல்யாணம் குறிப்பிட்ட தேதியில் நடக்கணும்... நடந்தாகணும்."

"அப்பா! கொஞ்சம் பொறுமையா இருங்க. உங்க கோபத்தைக் காட்டுற நேரம் இது இல்லை."

"நீ சும்மாயிரும்மா... கோபத்தை காட்டினாத்தான் காரியம் நடக்கும. பேசி வைச்ச தேதியில் உனக்கும் நித்தியனுக்கும் கல்யாணம் நடக்கும். அது யார் தடுத்தாலும் நிக்கப்போறதில்லை."

(பௌர்ணமி தொடரும்)

---

# அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன் 30



**ராஜையா**

பூபியான் தீவு யாருக்குச் சொந்தம் என்பது முடிவாகாத நிலையில் அத்தீவில் புதிய நகரத்தைக் கட்டக் கூடாது என்று சதாம் எதிர்ப்புத் தெரிவித்தார்.

ஆனால் சதாமின் இந்த ஆட்சேபத்தை குவைத் அலட்சியப்படுத்தியது. சதாம் ஆத்திரமடைந்தார்.

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா நடத்தி வரும் பொருளாதார யுத்தத்தில், அது குவைத்தை ஒரு போர்முனையாக மாற்றி வைத்திருக்கிறது என்பதை சதாம் உணர்ந்தார்.

குவைத்துக்கும், அமெரிக்காவுக்கும் ஒரேயடியில் பாடம் கற்பிக்க முடிவு செய்தார்.

அமெரிக்காவுக்காகவும் அதன் நேச ஐரோப்பிய நாடுகளுக்காகவும் குவைத் செய்துவரும் 'பெட்ரோல் திருட்டு' விவகாரத்தை சதாம் கையில் எடுத்தார்.

அரபு மண்ணுக்கடியில் பெட்ரோல் வளம் குறிப்பிட்ட அளவுக்குத்தான் இருக்கிறது. அது இன்னும் சிறிது காலத்துக்குள் காலியாகிவிடும். பெட்ரோல் வளம் தீர்ந்து போய்விட்டால் அதன்பிறகு அரபுநாடுகளுக்கு வருமானம் இருக்காது. ஒட்டாண்டிகளாய் நிற்க வேண்டிவரும். எனவே, பெட்ரோல் உற்பத்தி செய்யும் நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு மனம் போல் பெட்ரோல் எடுப்பதை ஒழுங்கு செய்யவேண்டும்!

அத்துடன், பெட்ரோல் 'சீ.. சீ' என்னும் அளவுக்கு எக்கச்சக்கமாக உற்பத்தி செய்யப் படுவதால், அமெரிக்காவும் மேலைநாடுகளும் அடிமாட்டு விலைக்கு பெட்ரோலை வாங்குகின்றன; கொள்ளையடிக்கின்றன. ஆகவே பெட்ரோல் விலையையும் சீரமைக்க வேண்டும்!

இவ்விரு நோக்கங்களுக்காக பெட்ரோல் ஏற்றுமதி செய்யும் நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து 'ஒபெக்' என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளன. ஒவ்வொரு நாடும் எவ்வளவு பெட்ரோல் உற்பத்தி செய்யவேண்டும் என்ற வருஷக் கோட்டாவையும், பெட்ரோல் விலையையும் இந்த அமைப்பு முடிவு செய்யும்.

ஆனால் அமெரிக்காவின் 'பெட்ரோல் கொள்கை' ஒபெக் இலட்சியங்களுக்கு நேர்மாறானது.

பெட்ரோல் 'சல்லிசான' விலையில் கிடைக்க வேண்டும். இதற்கு 'நான் குடி; நீ குடி' என்கிற அளவுக்கு அரபு மண்ணில் தாராளமாக பெட்ரோல் உற்பத்தியாக வேண்டும்! இதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம்! இது அமெரிக்காவின் பெட்ரோல் கொள்கை!

ஆகவே, அமெரிக்கா குவைத்தைத் தூண்டிவிட்டு, 'ஒபெக்' அமைப்பு நிர்ணயித்த அளவுக்கும் அதிகமாக பெட்ரோல் உற்பத்தி செய்ய வைத்தது. குவைத்தின் இந்நடவடிக்கையால் பெட்ரோல் விலையும் சரிந்து ஈராக்கின் பொருளாதாரத்துக்கு பெரிதும் பாதகம் ஏற்படுத்தியது.

ஈராக்குக்கும், குவைத்துக்கும் இடையில் 'ருமைலா' பெட்ரோல் வயல் இருக்கிறது. இதன் ஒரு பக்கத்திலிருந்து ஈராக்கும் மறு பக்கத்திலிருந்து குவைத்தும் பெட்ரோல் எடுக்கின்றன. நிர்ணயித்த அளவுக்கும் அதிகமாக குவைத் பெட்ரோல் எடுப்பதால், ஈராக்குக்கான பெட்ரோல் அதன் சேமிப்பிலிருந்து களவு போகிறது என்று குற்றம் சாட்டினார் சதாம் உசேன்.

"பெட்ரோல் திருட்டு மூலம் ஈராக்குக்கு குவைத் நஷ்டம் ஏற்படுத்துகிறது. இதற்கு நஷ்டஈடு தரவேண்டும்!" என்று அவர் கோரினார்.

"கோரிக்கையை ஏற்காதே!" என்று குவைத்தை அமெரிக்கா தடுத்தது.

ஆவேசமடைந்தார் சதாம்.

அமெரிக்காவின் பேச்சுக்கேற்ப ஆடிக் கொண்டிருந்த குவைத் மன்னரை மிரட்ட ஈராக் இராணுவத்தை குவைத் எல்லையில் சதாம் குவித்தார்.

உடனே சதாமை மிரட்ட அமெரிக்கப் போர்க்கப்பல்கள் வளைகுடாவில் போர் ஒத்திகை நடத்திக்காட்டின.

இதில் எரிச்சலடைந்ததால்தான், சதாம் அமெரிக்கத் தூதரை அழைத்து கண்டித்தார். கிளாஸ்பியிடம் இறுதியில் சொன்னார்:

"குவைத்தை பிடிச்சுக்கணும்; அதை ஈராக்கோடு இணைச்சுக்கணும்ங்கறது என் நோக்கம் இல்ல. ஆனா, எங்க நியாயமான கோரிக்கையை அது இனியும் நிராகரிக்கக்கூடாது. பெட்ரோல் திருடுனதுக்கு நஷ்டஈடு குடுத்துத்தான் ஆகணும். மறுத்தா, அதுக்குப் பிறகு நாங்க என்ன செய்வோம்னு சொல்ல முடியாது. ஞாபகம் வச்சுக்குங்க...!"

இருள் கனத்துத் தொங்கும் பின்னிரவு...

மடை உடைத்துப் பாயும் வெள்ளம் போல எல்லை அரண்களை தகர்த்துக் கொண்டு திபுதிபுவென குவைத்துக்குள் புகுந்தது ஈராக் டாங்க் படை!

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

# உதட்டில் ஒரு மச்சம்

## 19

**இதுவரை**

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜயோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜயோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஒடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு இறக்கிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
அமைச்சரை கொலை செய்ய
செல்லும் கைலாஷ்
மாட்டிக்கொள்கிறான்.
மின்சார வயரைப் பிடித்து
தற்கொலை செய்கிறான்.
அடுத்தத்திட்டம் தயாராகிறது.

**இனி....**

**சுபா**

மோகனன் ஒடக்கரைவரை தேடி வந்ததுமே தேவேந்திரனுக்குப் புரிந்துவிட்டது. மோகனன் கண்டுபிடித்து விட்டார். அவன் எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தும் மோகனன் மூக்கில் வியர்த்து விட்டது.

தேவேந்திரன் அவசரமாக ரைஃபிளை படுக்கையில் வைத்து போர்வையால் மூடினான். மரக்காலைப் பொருத்திக்கொள்ளுமுன்-

கதவு தட்டப்பட்டது. திறந்தான்.

மோகனன் வழியை மறித்து நின்றார். தேவேந்திரன் டென்னிஸ் வீரர்கள் அணிவதுபோல ஷார்ட்ஸ் அணிந்திருந்ததால் அவனுடைய இடது முழங்காலுக்குக் கீழே இல்லை என்பதையும் பார்த்தார். அந்தச் செய்தி தந்த சின்னத் திடுக்கிடலுடன், "தேவேந்திரன்?" என்றார்.

"நான்தான்!"

"என் பெயர் மோகனன். பாதுகாப்பு அமைச்சரின் செக்யூரிட்டி சீஃப். உங்களுடன் ஒன்றிரண்டு விஷயங்கள் பேச வேண்டும்."

"உள்ளே வாருங்கள்."

அவருக்கு நாற்காலியைக் காட்டிவிட்டு கட்டிலில் அமர்ந்தான். ஊர் மக்கள் பலர் தேவேந்திரன் வீட்டையே கவனிக்கத் துவங்கினர்.

"அமைச்சரின் மீது உங்களூர் இளைஞன் கைலாஷ் என்பவன் கத்தி பாய்ச்ச முயன்றது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்."

"ஆமாம்."

"அது பற்றிய விசாரணையில் இருக்கிறேன். இளைஞர்களைத் தூண்டிவிட்டு வெறியுடன் செயல்பட அவர்களுக்கு எண்ணம் ஏற்படுத்தினீர்கள் என்று உங்களைப் பற்றி எனக்குச் செய்திகள் கிடைத்துள்ளன."

"தன்மானமுள்ள எந்தக் குடிமகனும் என்ன பேசுவானோ அதைத்தான் என் நண்பர்களிடம் பேசினேனே தவிர, எந்த வெறியையும் தூண்டியதாக நான் நினைக்கவில்லை."

"இந்தப் படத்திலிருப்பது யார் என்று தெரிகிறதா, உங்களுக்கு?"

மோகனன் காட்டிய ஓவியம் பார்த்து அதிர்ந்தான் தேவேந்திரன். கைலாஷைச் சந்திக்க சென்னைக்குப்போனபோது அவன் அணிந்திருந்த அதே வேஷம். அவனைப் பார்த்தவர்கள் சொன்ன அடையாளங்களை வைத்துத் தயாரிக்கப் பட்டிருந்தால்கூட இவ்வளவு தத்ரூபமாய்க் கொண்டு வந்த ஓவியன் ஆச்சரியகரமானவன்தான்.

"இந்தப் படத்திலிருப்பவனை இதற்கு முன் நான் பார்த்ததேயில்லை!" என்றான் தேவேந்திரன்.

"அப்படியா? உங்கள் வீட்டில் கண்ணாடியே கிடையாதா?"

"வாட் டு யூ மீன்?"

"தாடியும், மீசையும் பொய்ப்பல்லும் வைத்திருப்பது அசல் தேவேந்திரனேதான். ஏற்கனவே ஆர்மியில் இருந்தவர் என்பதால் உங்கள் மீது ஒரு மதிப்பு வைத்து நான் தனியாக வந்தேன். ஆர்ப்பாட்டமில்லாமல் கூட்டிப் போகலாம் என்று... ஏனென்றால் நானும் ஆர்மியில் இருந்தவன்."

"தாடியும், மீசையும் மட்டுமில்லை. என்னிடம் வேறு என்னென்ன இருக்கிறது என்று பார்க்கிறீர்களா?"

கட்டிலில் இருந்த போர்வையை உதறி விட்டு ரைஃபிளை எடுத்தான் தேவேந்திரன். "நூறு மீட்டர் தூரத்திலிருந்தாலும் துல்லியமாக இந்த ரைஃபிளால் சுட முடியும் என்பது ஆர்மியில் இருந்த உங்களுக்குத் தெரியாமல் இருக்காது! இவ்வளவு க்ளோஸ் ரேன்ஜில் இதன் வீரியத்தைப் பார்க்க வேண்டுமா?"



மோகனன் முகம் மாறியது. "ஏற்கனவே செய்த குற்றங்கள் போதாது என்று பாதுகாப்பு அதிகாரியைத் துப்பாக்கியால் மிரட்டி தண்டனையை அதிகப்படுத்திக் கொள்கிறீர்கள், தேவேந்திரன்."

"உங்களிடமிருக்கும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சுவரைப் பார்த்து திரும்பி நில்லுங்கள் டியர் சீஃப் செக்யூரிட்டி."

மோகனன் தன் பிஸ்டலைக் கீழே நழுவ விட்டார். சுவரைப் பார்த்து திரும்பி நின்றார். தேவேந்திரன் சைகையைப் பார்த்து வெளியிலிருந்து பரமேஸ்வரன் ஓடிவந்தான். மோகனின் கைகளைப் பின்புறம் இழுத்துக் கட்டினான். கறுப்புத் துணி போட்டு முகத்தை மூடினான். கால்கள் இரண்டையும் சேர்த்துக் கட்டினான். கீழே உருட்டி விட்டான்.

தேவேந்திரன் ரைஃபிளைக் கீழே வைத்தான். தன் மரக்காலை எடுத்துப் பொருத்திக்கொண்டான். "ஸாரி மோகனன், அசௌகர்யத்திற்கு மன்னியுங்கள். என்மேல் இருக்கும் கோபத்தில் ஒடக்கரை மக்களுக்கு ஏதாவது தொந்தரவு கொடுத்தால் என்னை மிக மோசமானவனாக சந்திக்க வேண்டி வரும். மற்றபடி நாம் சந்திக்கப்போவதில்லை. அதுவரை உங்கள் நினைவாக உங்களுடைய பிஸ்டல் என்னிடம் இருக்கட்டும்."

***

"அப்புறம்?" என்றான் ஷிவா துடிப்பாக.

"மோகனனின் ஜீப்பை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். டவுன் ஸ்டேஷனில் இறங்கினேன். ரயில் பிடித்து சென்னை வந்து விட்டேன்."

"மோகனன்?"

"நான் புறப்பட்டு ஒரு மணிநேரம் கழித்து அவரை விடுவிக்கலாம் என்று பரமுவிடமும் சொல்லியிருந்தேன். விடுவித்திருப்பான். பாவம், அவனைப் போட்டு உதைத்திருப்பார். அடித்து உதைத்திருப்பார். நான் எங்கே போனேன் என்று. அவனிடம் சொன்னால்தானே அவனுக்குத் தெரியும். என்னைப் பற்றிப் பேப்பரில் போடுவார்கள். டெலிவிஷனில் காட்டுவார்கள். ஒடக்கரைப் பக்கம் இனி நான் திரும்ப முடியாதபடி பண்ணுவார்கள். ஸோ வாட்?"

தேவேந்திரன் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தான்.

"ஆனால் இதையெல்லாம் நினைத்து உன் மனதைக் குழப்பிக் கொள்ளாதே ஷிவா. நம் பிரம்மாண்ட திட்டத்தின் கடைசிக் கட்டம் நெருங்கிவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் அத்தனையும் உன்னை நம்பித்தான் இருக்கிறது என்பதை மறந்துவிடாதே."

"மறக்கவில்லை தேவ்!" என்றான் ஷிவா. "நீ வந்த போதுகூட நான் காஸெட்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்."

தேவேந்திரன் நிமிர்ந்து உட்கார்ந்தான். "அந்த காஸெட்கள் உபயோகமாக இருந்ததா, ஷிவா?"

ஷிவா கேசட்டை வி.சி.ஆரில் பொருத்தி அதை ஓட விட்டான்.

பிரகாஷ் குப்தா கலந்து கொண்ட ஒரு பார்ட்டியில் எடுக்கப்பட்ட வீடியோ படம். அமைச்சரின் பக்கத்தில் அவருடைய பி.ஏ. அத்தற்குப் பின்னால் தன் மனைவியுடன் அரவிந்த்.

அரவிந்தின் மீதே பார்வையைப் பதித்தான் தேவேந்திரன். அவன் நடந்து வரும் முறை நடக்கும் போது தோள்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள்; கைகளை வீசும் வேகம்; இடுப்பில் ஏற்படும் அசைவுகள்...

காமிரா அதிகமாக அமைச்சரைத்தான் வட்டமிட்டது. பின்னணியில்தான் அரவிந்த் தெரிந்தான்.

பத்து நிமிடம் பார்த்ததும் கேசட்டை நிறுத்தினான், ஷிவா.

"இப்போது என்னைப் பார் தேவ்!"

அறையின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரை ஷிவா நடந்து காட்டினான்.

"வெரிகுட்... அற்புதமாய் பயிற்சி செய்திருக்கிறாய், ஷிவா. நடை எல்லாம் அப்படியே இருக்கிறது. ஆனால் அரவிந்தின் மேனரிஸம் ஒன்றைப் பார்த்தாயா? அடிக்கடி சட்டை நுனியை இழுத்து விட்டுக் கொள்கிறான், என்பதைக் கவனித்தாயா? அதையும் மறக்காமல் நீ பயிற்சி செய்."

"சரி தேவ்!"

ஷிவா ஒரு முறை நடந்தான். நடக்கும் போது அரவிந்தைப் போலவே சட்டை நுனியை இழுத்து விட்டுக் கொண்டான்.

"குட்!" என்றான் தேவேந்திரன்

"ஆனால் எனக்கு ஒரு கவலை இருக்கிறது தேவ்"

"என்ன ஷிவா?"

"அரவிந்தைப் போலவே பெரும்பாலும் நான் மாறிவிட்டாலும், அவன் மறுபடி வேலைக்கு எப்போது வருவான் என்று தெரியவில்லையே?"

"விசாரித்து விட்டேன் ஷிவா. வெளியே நடமாட டாக்டர்கள் அரவிந்தை அனுமதித்து விட்டார்கள். அமைச்சர் அவன் பிளேன் ஓட்டுவதைத்தான் விரும்புகிறாராம்."

"ஒடக்கரையில் இளைஞர் முகாம் ஒன்றை அமைச்சர் பிரகாஷ் குப்தா திறந்து வைக்கப் போகிறார் என்று சேதி வந்திருக்கிறதே, பார்த்தாயா தேவ்?"

"ஆமாம். கட்சியின் நூற்றாண்டு விழா வந்து விட்டது. அதை உத்தேசித்து கட்சியில் இருக்கும் இளைஞர்களுக்கு ஓர் இளைஞர் முகாமை ஒடக்கரையில் துவங்கப்போவதாக பிரகாஷ் குப்தா அறிக்கை விட்டிருக்கிறார்."

"இருக்கும் இடத்தையெல்லாம் விட்டுவிட்டு நம் ஒடக்கரை ஏன்?"

"முட்டாள். அமைச்சர் தன் சுயலாபத்திற்காக தனக்கு சொந்தமான சிறுகார் தொழிற்சாலையை நிறுவுவதற்காக ஒடக்கரையை ஆக்கிரமித்துவிட்டார் என்ற கெட்ட பெயர் வந்துவிடக்கூடாது என்று இப்போது புதிய ஸ்டண்ட் அடிக்கிறார். அந்த முகாமில் சேரும்படி நம் கிராமத்து இளைஞர்களுக்கும் வலை வீசி வருகிறார்கள். அடுத்த வெள்ளிக்கிழமை ஒடக்கரைக்கு அமைச்சர் வருவதற்கான திட்டம் தயாராகி விட்டதாம்."

"நாம் செயல்பட வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது தேவ்."

ஷிவாவின் முகத்தில் பெரும் பகுதி சிதைந்து, சர்ஜரிக்கு பிறகு மாற்றியமைக்கப் பட்டு விட்டாலும் அவன் கண்களில் ஒளிர்ந்த கனவு மாறவில்லை, என்பதை தேவந்திரன் கவனித்தான்.

"அமைச்சரின் முழு புரோகிராமும் நாளைக்குத் தெரியவரும் ஷிவா... அப்போது மறுபடி பேசுவோம்."

தேவேந்திரன் தன் மரக்காலை நிமிர்த்தி நாற்காலியிலிருந்து எழுந்தான்.

"இந்த முறை அமைச்சருக்கு அரவிந்த் விமானம் ஓட்டவில்லை என்றால், அவன் ஓட்டும் வரை நாம் காத்திருக்க வேண்டிவரும்"

"நல்லதையே நினைப்போம் தேவ்" என்றான் ஷிவா.

(○—வரும்—○)

# கவியரசுவின் சுயசரிதை

## 38

அடுத்தது திருச்சிக் கூட்டம். திருச்சியில் இருந்த சம்பத்கோஷ்டி பிரமுகர்கள் அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். மதுரையைப்போல் திருச்சியைப் பற்றி வதந்திகள் ஏதும் பரவவில்லை. அதனால் பொலிஸ் வளையங்களும் இல்லை. அவர்கள் இருவரும் சாம்பு வீட்டில் இறங்கிக் குளித்துவிட்டு ஆறுமணிக்கு டவுன் ஹால் மைதானத்திற்குச் சென்றார்கள்.

கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு தலைவர் பேசி முடிந்ததும் அவன் பேச எழுந்தான். உடனே கீழே இருந்து ஒருவன் மாலை போடுகிற பாவனையில் மேடைமேல் ஏறினான். அவன் கையில் ஒரு ஜரிகை மாலை இருந்தது. உடனே மடியில் இருந்து ஒரு செருப்பை எடுத்தான்.

அவனது சட்டையைப் பிடித்துக் கொண்டு சத்தமிட்டபடி செருப்பை ஓங்கியதும் அவன் தன் காலால் எட்டி உதைத்தான். அந்தக் காலி கூட்டத்திற்குள் போய் விழுந்தான்.

உடனே அந்தக் காலியைப் பொது மக்கள் நன்றாக உதைத்துப் பக்கத்தில் இருந்த பொலிஸ் ஸ்டேஷனுக்குள் தள்ளினார்கள். பொலிசார் உதைத்து உள்ளே இழுத்துக்கொண்டு போனார்கள்.

அந்தக் காலியை அதற்கு முன்னால் அவன் சில தடவைகள் சந்தித்திருக்கிறான். திருச்சியில் வந்து தங்கும் கழகத் தலைவர்களுக்கு எல்லாவிதமான 'சப்ளை'களையும் அவன் தான் செய்வான்.

ஆகவே-கருணாநிதிக்கு அவன் மிகவும் வேண்டியவனாக இருந்தான்.



திடீரென்று ஏற்பட்ட அந்த நிகழ்ச்சியில் கூட்டம் பரபரப்படைந்தது. சிலர் அழுது விட்டார்கள். மேடைக்கு அருகே பொலிஸ் வளையம் வந்துவிட்டது. ஆனால், அவனோ சம்பத்தோ எந்தவிதமான சலனமும் இன்றி இருந்தார்கள். அண்ணாதுரை கோஷ்டியினர் முன்கூட்டியே திட்டமிட்டிருந்தபடி கூட்டத்தின் ஒரு மூலையில் சுமார் நூறுபேர் உட்கார்ந்துகொண்டு 'அண்ணா வாழ்க!' என்று கோஷித்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் சிரித்தபடி அரைமணி நேரம் அமைதியாகப் பேசி முடித்தான். அடுத்துப் பேசிய சம்பத்தின் உருக்கமான பேச்சு கூட்டத்தையே கவர்ந்துவிட்டது. கோஷித்தவர்கள் அடங்கிக் கிடந்தார்கள். கூட்டம் முழுவதும் அவர் பேச்சைக் கைதட்டி வரவேற்றது. அண்ணாதுரை கோஷ்டியினர் முகம் சுருங்கி வெளியேறினர். சுமார் ஒரு மணிநேரம் அவர் பேசினார். திராவிடர் கழகத் தோழர்கள் அங்கு ஏராளமாக வந்திருந்தனர். அதன்பிறகு கூட்டத்தில் ஏதாவது கலவரம் நடந்திருக்குமானால் சில கொலைகளே விழுந்திருக்கும். ஏனெனில் பெரியார் தொண்டர்கள் மரணத்திற்குத் துணிந்தவர்கள். முன்னேற்றக் கழகத்தினரைப்போல் அடி விழுந்ததும் ஓட்டம் பிடிப்பவர்களாக அவர்கள் இருப்பதில்லை!

அன்றைய நிகழ்ச்சிதான் அவன் மனத்தில் பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டியது. அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் யாராக இருக்குமென்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. 'இன்னார்தான் இந்தத் நிகழ்ச்சிக்குத் திட்டமிட்டிருக்கிறார்கள்' என்று சாம்புவின் வீட்டில் அவன் பேசிக்கொண்டிருந்த போது திருச்சி தொலைபேசி இலாகாவில் இருந்து ஒரு பெண்மணி அங்கே வந்தார். அவர் அவனைத் தனியே அழைத்துக் கொண்டு போய்-பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்குப் பிறகு ஒரு நடிகர் சென்னையில் இருந்து திருச்சியில் ஒரு காலண்டர் கம்பெனிக்கு ட்ரங்கால் போட்டு, 'நிகழ்ச்சி எப்படி நடந்தது?' என்று விசாரித்தார். அதே போல் ஆயிரம் விளக்கில் உள்ள பத்திரிகை அலுவலகத்தில் இருந்தும் அந்தக் காலண்டர் கம்பெனிக்கு ட்ரங்கால் வந்ததாம். அவன் நினைத்ததையேதான் அந்தப் பெண்மணியும் சொன்னார்.

"தேவைப் பட்டால் என் வேலை போனாலும் பரவாயில்லை; நான் சாட்சி சொல்ல வருகிறேன்...!" என்றார் அந்தப் பெண்மணி.

அவருக்கு நன்றி சொல்லி அனுப்பினான் அவன். பழிதீர்க்கும் உணர்ச்சி அவன் நெஞ்சில் தலைதூக்கி நின்றது. சிலரை ஓடஓடத் துரத்தி அடிப்பது என்று முடிவு கட்டிக்கொண்டான். அது அவனால் முடியும்.

அன்று மாலைப் பத்திரிகைகளில் அவனைப் போலவே சம்பத்தும் ஏராளமான நண்பர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ராஜினாமாச் செய்துவிட்ட செய்தி-பிரதானமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது!

அவன் நெஞ்சு நிம்மதியடைந்தது.

கண்மூடித்தனமான அவனது அரசியல் வனவாசம் முடிந்துவிட்டது.

காட்டுக் குரங்குகளிடமிருந்து அவன் விடுதலை பெற்றுவிட்டான்!

சின்னஞ் சிறிய கூண்டுக்குள்ளே முடங்கிக் கிடந்த அந்தப் பறவை, பரந்த வானத்தில் எழுந்து பறக்கத் துவங்கியது.

சபலத்திற்கும், சலனத்திற்கும் ஆட்பட்ட கோழை மனிதர்களை 'தலைவர்' என்று போற்றிப் பாடிய அவன் பாட்டு முடிந்துவிட்டது.

சமுதாயத்தின் மூன்றாந்தர மனிதர்களோடு அவனுக்கிருந்த உறவு அறுந்துவிட்டது!

அர்த்தமில்லாமல் அவன் வளர்த்துக் கொண்டிருந்த வெறி தணிந்துவிட்டது!

ஒரு நெடுஞ்சாலைக் கொள்ளைக் கூட்டத்திடமிருந்து அந்த அப்பாவி மனிதன் தப்பி வெளியே வந்துவிட்டான்!

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த பொருளற்ற கூட்டத்தில் இருந்து அவன் புதிய உலகத்திற்கு வந்து விட்டான்!

பாண்டவர்களைப்போல்-பதின்மூன்று அல்ல-பத்தாண்டு காலம் வனவாசம் புரிந்த அவன், நாட்டுக்குத் திரும்பி விட்டான்!

கூண்டுப் பறவை சுதந்திரப் பறவையாகிவிட்டது!

வனவாசம் புரிந்த மிருகம் அன்று மனிதன் ஆனது!

ஏப்ரல் ஒன்பது- அவன் வரலாற்றில் புனிதமான நாள்!

அன்றுதான் அவன் உண்மையை நோக்கி நடைபோடத் துவங்கினான்!

அன்ற இரவு நிம்மதியாகத் தூங்கினான்!

மறுநாள் பொழுது 'மனிதா எழுந்திரு! உன் வனவாசம் முடிந்துவிட்டது' என்று அவனுக்கு நினைவுறுத்திற்று!

நிறைவடைந்தது

அடுத்தவார முரசில்
பரபரப்பான ஆரம்பம்
பிரபல நடிகர் ஒருவரின் அந்தரங்கம் பற்றிய கவியரசுவின் தொடர்

www.padippakam.com

# 'காதல் தீபம்.....'

அதிகாலை சூரியன் கடலில் குளித்து, பனிப்படலத்தில் தலைதுவட்டி எழ... காலை நேர அவசரங்கள் குளிரால் மந்தமடைந்திருந்தன.

மரங்கள் தன் இலைக்கண்களால் முன்னைய இரவுப் பாவங்களுக்காய் பனிக் கண்ணீர் வடிக்க, பூக்கள் புன்னகைத்துக் கொண்டிருந்தன.

"இந்தப் பூக்கள் புன்னகைக்க, மரங்கள் அழுகின்றனவே! ஏன் தெரியுமா ஜோதி...?"

ஜீவனின்... கேள்வி புரியாமல் அவன் முகம் பார்த்தாள்.

"பூக்கள் விட்டில்கள்; காலையில் மலர்ந்து மாலைக்குள் வாடிப்போகும். இரவுநேர வக்ரங்களை அவை அவற்றின் ஆயுளில் சந்திப்பதேயில்லை. ஆனால் மரங்கள் இராத்திரியிலும் விழித்திருக்கின்றன. இரகசியமான மனிதப் பாவங்களைப் பார்த்துப் பார்த்து ரணம்பட்டு கண்ணீர் வடிக்கின்றன!"

"ஜோதி... எனக்கொரு ஆசை பூக்களோட மரங்களும் புன்னகைக்கணும். அதற்கு மனிதன், மனிதனாகணும். சுயநலம், ஜாதிபேதம் கலைந்து ஒன்றுபடணும். தன் உடம்பையே சிறு கொடிக்குப் படரக் கொடுத்து சந்தோசப் படும் மரம், நம்மளவிட எவ்வளவோ உயர்ந்தது...."

ஜீவன்... சொன்ன நாளிலிருந்து அவள் பூக்களைவிட மரங்களை நேசித்தாள். அவற்றுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் அற்று, மௌனமாய் அவற்றைப் பார்த்திருப்பதில் சந்தோசித்தாள்.

'இணைக் கணிதம்' படித்தவள். கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்று கோடுகளுக்குள் மட்டுமே வாழ்ந்தவளை, தமிழை நேசிக்கக் கற்றுக் கொடுத்தவன் அவன். தமிழ் சிற்பியாய் நின்று அவளைச் செதுக்கியது. தமிழுடன் அனைத்தையும் நேசிக்க முடிந்தது. பாதையோரத்து குருட்டுப் பிச்சைக்காரனின் கண்ணீர் பார்த்து, கவலைப்பட்டு, ஆறுதல் சொல்ல முடிந்தது. அழும் குழந்தைகள் அழகாய் ஆனது. காதல் அற்ற காமத்துடன் தன் உடல் வெறிக்கும் ஆண்களைக்கூட கோபம் அற்ற புன்னகையுடன் புத்தி சொல்லி ஒதுக்க முடிந்தது. பூக்கள் மட்டுமன்றி, புற்கள், மண்டிக் கிடக்கும் புதர்களைக்கூட இரசிக்க முடிந்தது.

இத்தனை மாற்றங்களை அவளுக்குள் உருவாக்கியவன், இதயத்தில் யாரோ இருப்பது புரிந்தது. ஆனால் யாரென்றுதான் புரியவில்லை. அந்தப் பாக்கியசாலி தானாய் இருக்கக்கூடாதா? என்று ஏக்கம் வரும். அவனிடம் அவள் பெயர் கேட்கும் பொழுதுகளில்,

"அவள் சூரியனாய் நின்று பகலில் எனக்கு வழி காட்டுகிறாள். நிலவாய் வந்து இரவில் என்னைத் தாலாட்டுகிறாள்."

"ஐயோ...ஜீவா... இந்த விடுகதையெல்லாம் வேண்டாம், அவங்க பேர் என்ன நேரடியாச் சொல்லிடுங்க ப்ளீஸ்....!"

"நேரம் வரும்போது சொல்கிறேன்!"

"எப்ப வரும்..?"

உதடு பிதுக்கி தோள் குலுக்குவான்...

★★★

ஜீவன் ஏதோ மும்முரமாய் எழுதிக் கொண்டிருந்தான். அவள் சப்தம் செய்யாமல் அறைக்குள் நுழைய,

"வா... ஜோதி...!"

திடுக்கிட்டாள், "காலில் கொலுசுகூட இல்லை- எப்படித் தெரிந்தது?" அவள் ஆச்சரியம் கேள்வியாய் வந்தது.

"உன் பாதம் பட்ட பூமி, தன் ஜென்மம் சாபல்யமான, சந்தோசப் பூரிப்பில் புன்னகைத்ததே... புரிந்து கொண்டேன் நீதான் என்று."

"என்ன... கிண்டலா..?" வாய் கேட்டாலும் அவன் குறும்பு பிடித்திருந்தது. இருந்தும் இதயம் ஒரு பக்கம் வலிக்கவும் செய்தது. 'ஒவ்வொரு முறையும் உங்களைச் சந்திக்கும் பொழுதும் என் காதல் வளர்கிறது. ஜீவா... அஃறிணைகளின் மனதைக் கூடப் புரிந்து



**மகீன் எம்.சகீல்**

கொள்ளும் உங்களுக்கு, ஒரு பெண்ணின் மனது புரியவில்லையா...? புரிந்தும் புரியாதது போல நடிக்கிறீர்களா?'

உள்ளத்துள் குமுறலாய்ப் பிறந்தது. வார்த்தையாய் வெளிவரவில்லை.

"ஜீவா... என்னால இனியும் பொறுக்க முடியாது. நீங்க அவங்க யாருன்னு சொல்லலைன்னா, நான் இனிமேல் இங்க வரமாட்டேன்... பேசவும் மாட்டேன்...!"

சொல்லிவிட்டு வெடுக்கென்று திரும்பி வாசல்வரை வந்தவளை அவன் குரல் தடுத்தது.

"ஜோதி...!"

மகிழ்ச்சியுடன் திரும்பினாள்.

"நாளைக்குக் காலையில தபால்காரர் அவள் பெயரோட வருவாரு."

அவளுக்கு ஏமாற்றமாய் இருந்தது. ஆனாலும் மனதைத் தேற்றிக் கொண்டாள்.

'அவள்' பெயருக்காய்க் காத்திருந்த நாட்கள் பல. மேலும் ஒரு நாள் தானே...'

ஆனால் அந்த ஒரு நாளில் அவளுக்குள் பூப்பந்துகளும், பூகம்பங்களும் இரு பக்கத் தாக்குதலில் ஈடுபட, சிரிப்பும், கண்ணீருமாய், அந்த நாள் இன்பமும், துன்பமும் தந்து மறைந்தது.

★★★

தபால்காரர் நீட்டிய கடிதத்தை நடுங்கும் விரல்களால் பெற்று, படபடக்கும் இதயத்துடன் உறையைக் கிழித்தாள்.

இரண்டாய் மடிக்கப்பட்ட வெள்ளைக் காகிதம் வெளியே வந்தது, பரபரப்புடன் பிரித்தவளுக்கு, ஏமாற்றத்துடன் கோபமும், அழுகையும் ஒன்றாய் வந்தன.

அது எதுவுமே எழுதப்படாத ஒரு அழகான 'லெட்டர் ஹெட்' அதன் கீழ்ப்பக்க ஓரத்தில் ஒரு சுடர் அழகான மஞ்சள் வெளிச்சம் பரப்பியபடி இருக்கும் படம் வரையப்பட்டிருந்தது.

கடிதத்தை மேசைமேல் போட்டுவிட்டு அறைக்குள் வந்து கட்டிலில் வீழ்ந்தாள். அவள்

**இதயத்தில் யாரோ இருப்பது புரிந்தது. யாரென்றுதான் புரியவில்லை**

கண்களும், தலையணையும் கண்ணீரால் கழுவப்பட்டன.

யாரோ அறைக்குள் வரும் சப்தம் கேட்டு கண்களைத் துடைத்தபடி நிமிர்ந்தாள்.

தங்கை... கையில் அந்த மடலுடன்.

"அக்கா... இந்த 'லெட்டர் ஹெட்'ட எனக்குத் தர்றியா..? அழகா அர்த்தமுள்ளதா, படம் போட்டிருக்கிறாங்க..."

நீயும் இந்த 'ஜோதி'யைப்போல் எல்லோருக்கும் வெளிச்சம் கொடு... மனதில் இருள் அற்று இரு' என்று சொல்லாமல் சொல்றமாதிரி இருக்கு!"

"ஜோதி...!"

மகிழ்ச்சியில் துள்ளி எழுந்தாள். தங்கையை இறுக்கி அணைத்து கன்னத்தில் முத்தமிட்டவள்.

"அக்கா உனக்கு என்ன நடந்தது?" என்ற தங்கையின் குரலைப் பொருட்படுத்தாது வாசல் கடந்து பறந்தாள்.....

தன் 'ஜீவ'னைத் தேடி....!

# உப்புக்கல்லும் வைரக்கல்லும்

ஸஹானா கடிதம் போட்டிருந்தாள்- இத்தாலியிலிருந்து. அங்கு வசந்த காலத்தின் ஆரம்பம் முதல் டிசம்பர் பனி விலகி மொட்டுக்கள் பூக்களாய் மலர்வதைப் பார்க்க மனம் கொள்ளை போகிறது எனவும், அவளுக்கு இரண்டாவதாய் பெண் குழந்தை பிறந்திருப்பதையும் கவிதைத்துவமாய் எழுதியிருந்தாள். வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியையும் இரசித்துக் கொண்டிருக்கிறாள் அவள். எனக்குள் அவளைப் பற்றிய



எண்ணம் சந்தோசங்களைப் பிரசவித்தது.

வாழ்க்கை என்பது எத்தனை திருப்பங்களையும் எதிர்பாராத நிகழ்வுகளையும் கொண்டது என்பதற்கு ஸஹானாவின் வாழ்க்கையே போதும். எத்தனை கடும் துயரத்தை அவள் சந்தித்தாள்! ஏமாற்றத்தை சகித்துக் கொண்டாள்! அவள் நிலையில்

**ஷர்மிளா இஸ்மாயில்**

நானிருந்திருந்தால் என் புதைகுழியில் இன்று புல் முளைத்திருக்கும். ஸஹானா திடமனதுக்காரி. துன்பத்தைப் பொறுத்துக் கொண்டாள், பூமாதேவிபோல். இன்று சுகமான வாழ்க்கை அவளுக்குப் பரிசளிக்கப் பட்டுள்ளது. இறைவன் செயல். இதோ அவள் கதை.

"ஸஹானா, எனக்கு பிஸினஸில் படு நஷ்டம், முதலிட்ட பணம் முழுக்க மோசம் போயிட்டது. ஐயோ... என்ன செய்வேன்?" அவளது காதலன் ஸமீர் நடுங்கிய குரலுடன் கண்களில் நீர்வழிய அவள் கரங்களைப் பற்றினான். "அவ்வளவும் கடன் வாங்கிய பணம்? எப்படிக் கடனை அடைப்பேன்?" புலம்பினான். ஆறு வருடங்களாய் கலந்த நேச மனங்கள் அவை. திருமணம் எனும் இனிய கட்டத்தை நெருங்கிய வேளையில் பேரிடியாய் ஸமீரின் வார்த்தைகள் ஸஹானாவின் நெஞ்சைப் பிளந்தன.

அவளும் கலங்கினாள். நிலைகுலைந்தாள். ஒரு ரூபாயா? இரண்டு ரூபாயா? இலட்சங்கள். பல இலட்சங்கள். அவன் சுயமாய்த் தொழில் செய்யப் போவதை கூறியிருந்தான். ஆனால் கடன் விஷயம் பற்றி அவளுக்கு எதுவும் கூறியதாய் ஞாபகமில்லை.

கேட்டாள்- "என்ன ஸமீர் இது? இதப் பத்தி என்கிட்ட முன்னம் எதையுமே சொன்னதில்லையே! திடீர்னு...?" அவளுக்கு வார்த்தைகள் வரவில்லை. ஸமீர் சொன்னான்: "உனக்குத் தெரியாமல் செய்துட்டேன் கண்ணம்மா. தெரிஞ்சா கடன் வாங்க விடமாட்டே நீ. இல்லியா? அதான்... ஆண்டவனே... என்ன செய்வேன்..?" மறுபடியும் புலம்பினான். கண்ணீரும் கவலையுமாகப் பிரிந்தனர் அன்று.

புலர்ந்தது ஞாயிறுப் பொழுது. காலை மழைக்காக வானம் இருட்டியிருந்தது. ஸமீரின் நண்பன் வந்தான். சொன்னான். ஸமீருக்குக் கல்யாணமாம். பல இலட்சங்களை சீதனமாகக் கிடைக்கப் பெற்றானாம். கடனை அடைக்க வேறு வழி தெரியவில்லையாம். அதிர்ச்சியைக் கண்ணீரோடு விழுங்கிய ஸஹானா கேட்டாள்: "அப்போ என் அன்பு, காதல், நேசம்... எல்லாம்...? அவர் என்மீது கொண்ட காதல் பொய்தானா...?"

நண்பன் சொன்னான்: "அன்பையும் காதலையும் வெச்சு அவன் பட்ட கடனை அடைக்க முடியுமா ஸஹானா? இப்போ அவனுக்குத் தேவை இலட்சங்கள் மட்டுமே. உங்க அன்பில்ல..." போய் விட்டான். ஆச்சரியமாக அவளுக்கு அழுகை வரவில்லை.

**"அன்பையும் காதலையும் வைச்சு அவன் பட்ட கடனை அடைக்க முடியுமா?"**

இந்த உலகத்தில் பணத்திற்கு விலை போகாத மனிதர்கள் யார்? 'காசேதான் கடவுளடா' என கவிஞர் சும்மாவா சொன்னார். ஸஹானா பட்டுத் தெரிந்துகொண்டாள். பல மனிதர்களது இதயவறையில் பணத்திற்கு மட்டுமே இடமிருப்பதைப் புரிந்து கொண்டாள்- தெளிந்தாள்.

காலம் உருண்டோடியது. பெற்றோரின் புலம்பல்-வற்புறுத்தல் தாங்கமாட்டாமல் ஒரு பெண்பார்க்கும் படலத்துக்கு ஒத்துக் கொண்டாள். ஜாவிட் அவளைப் பார்த்த மாத்திரத்தே மனதைப் பறி கொடுத்தான். இத்தாலியில் வேலை பார்ப்பவன். தாய், தங்கையை யுத்தத்தில் இழந்து ஒரேயொரு அக்கா இலங்கையில். அக்காவினதும் அத்தானினதும் வற்புறுத்தலுக்காய் அவனும் பெண் பார்க்க வந்தான். அழகுடனும் கம்பீரமாயும் இருந்தான். தமிழில் பேச சற்றே தடுமாறினான்.

அவனிடம் ஸஹானா தன் கதையை மறைக்கவில்லை. சொன்னாள். முழுவதும் கேட்டான். பிறகு பதில் அனுப்புவதாய்க் கூறிப் போய் விட்டான். 'இந்த ஆண்களே இப்படித்தான். தான் எத்தனை பேரைக் காதலித்து இருந்தாலும் தனக்கு வருபவள் மாசற்று இருக்க வேண்டும் என விரும்புவார்கள்.' எனக் கூறி சிரித்துக் கொண்டாள்.

அன்று ஜாவிட் மட்டும் வந்திருந்தான். புன்னகைத்தான் கைகளில் ஒரு பார்சல். பிரித்தான். ஜொலித்தன. வைரமும் முத்தும் பதித்த பொன் நகைகள்! பல இலட்சம் பெறும். கேள்விக் குறியோடு பார்த்தாள் ஸஹானா. "எ... எனக்குத் தேவை உங்க அன்பு மட்டும் ஸஹானா. இந்த இலட்சங்களில்ல... இ... இத்தனை நாள் வெளிநாட்டுல தனிமைல நான். உண்மையான அன்பை, நேசத்தை மட்டுமே.. உங்ககிட்ட எதிர்பார்க்கிறேன்... தருவீங்களா ஸஹானா?" அவன் குரலில் ஏக்கம் தொனித்தது. அவளது மௌனம் சம்மதமாயிற்று.

# ஆடம்பரம்

கமலினி பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள். அவளுக்குச் சீதனமாகக் கொடுக்கப் பட்ட வீட்டிற்கான பூச்சுவேலைகள் மும்முரமாக இடம் பெற்றுக் கொண்டிருந்தன.

அவளின் மூத்த மகள் பூப்படைந்ததைக் கொண்டாடுவதற்கான 'பூப்புனித நீராட்டு விழா' இன்னும் சில நாட்களில் நிகழவுள்ளதனால் பல வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட வீட்டுக்கு வர்ணப்பூச்சு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கணவனின் இடத்தில் தற்போது அவளே நின்று கொண்டிருப்பதனால், முன்னின்று முழு மூச்சாக எல்லா வேலைகளையும் கவனித்துக்கொண்டிருந்தாள்.

அவளது கணவன் சற்குணம் ஜெர்மனிக்குச் சென்று சில வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் அவனுக்கு அந்த நாட்டின் பிரஜா உரிமை கிடைக்கவில்லை. அகதி அந்தஸ்துக் கோரி ஜேர்மனிக்குச் சென்ற இலங்கைத் தமிழர்களுக்குப் பிரஜா உரிமை கொடுப்பதும், அகதி அந்தஸ்துடன் தொடர்ந்து அந்த நாட்டில் வாழ்வதற்கு அனுமதி கொடுப்பதும் அந்த நாட்டின் நீதிமன்றமே.

சற்குணமும் அகதி அந்தஸ்துடன் தொடர்ந்து அங்கு வாழ்வதற்குரிய உரிமை பெற அந்த நாட்டின் நீதி மன்றத்தால் விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

"அம்மா! பெயின்ற் போதாதாம். காசு தாங்க பெயின்ற் வாங்க!" என அவளது மூத்த மகன் வந்து நின்றான். கமலினி காசை எடுத்துக் கொண்டிருக்கையில், "என்ன பிள்ளை? நீ கண்மண் தெரியாமல் செலவு செய்து கொண்டிருக்கிறாய். செலவைக் கொஞ்சம் கட்டுப்படுத்திச் செய்!" என்றவாறு அவளது அம்மா அங்கு தோன்றினாள்.

"என்னம்மா செய்யிறது? வீடு திருத்துற வேலை தொடங்கீட்டம். இனி எப்பிடி செலவுகளைக் குறைக்கிறது?"

"கனநாளா மருமகன் காசும் அனுப்பேல்லை. வெளிநாட்டுக்கெண்டு போய் திரும்பி வந்ததாலை ஏற்பட்ட கடனும் இன்னும் முடியேல்லை. அதுக்கிடையிலை நீ கடனைப்பட்டு எல்லாத்தையும் செய்து கொண்டிருக்கின்றாய்!"

"அம்மா! தண்ணி வார்வையை வீடியோ எடுக்கப்போறன். அதுக்கு வீடு வடிவா இருக்கத்தானே வேணும்!"

கமலினி நியாயங்களை அடுக்கினாள்.

"சரி! வீட்டுக்குச் செய்யிற செலவு பிரயோசனம்தான். ஆனால் கலியாணத்தைக் கூட இவ்வளவு பெரிசா செய்யமாட்டினம். நீ இதைச் சின்னதா செய்து முடியெண்டாலும் கேக்காம பெரிய எடுப்பெடுக்கிறாய்!" என்று தொடர்ந்து அம்மா கூறினாள்.

"எங்களுக்கு இரண்டு மூன்று பொம்பிளைப் பிள்ளையள் இருந்தால் எல்லாருக்கும் செய்தால் இதைவிட கூடத்தானே செலவு வரும்? நான் எல்லாத்தையும் சேர்த்து அவளுக்கே செய்யிறன்!"

கமலினிக்கு என்ன சொன்னாலும் தான் நினைத்ததைச் செய்து முடிக்காமல் விடமாட்டாள் என உணர்ந்திருந்த அம்மா அதற்கு மேல் எதுவுமே சொல்லவில்லை.

சற்குணம் ஊரில் நின்று உழைத்த போது கிடைத்த மிகச் சிறிய வருமானத்தில் குடும்பவண்டியை சிக்கனத்துடன் நகர்த்திச் சென்ற கமலினி கணவன் ஜேர்மனிக்குச்

**பூப்புனித நீராட்டு விழா என்ற பெயரில் செலவு ஒரு இலட்சம் ரூபாவை எட்டியது**



**மு.கலை**

சென்று உழைத்து அனுப்பத் தொடங்கியதும் சிக்கனம் என்ற சொல்லையே மறந்து போயிருந்தாள்.

கமலினி மட்டுமல்ல. ஐரோப்பா, அமெரிக்க நாடுகளில் நின்று உழைத்து அனுப்புகிற பணத்தை இங்குள்ளவர்கள் பலர் சிக்கனமின்றியே கரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நம்மவர்கள் உடலை வருத்தி, ஆசாபாசங்களைத் துறந்து கொண்டு வெளிநாடுகளிலிருந்து உழைத்து அனுப்பும் பணம் இங்கு எப்படி அவை பெறப்படுகின்றன என்பது பற்றி சிந்தனையின்றியே வீண் விரயமாக்கப்படுவதைக்கூட இன்று காணக் கூடியதாக இருக்கின்றது.

சற்குணம் ஊரில் நின்று உழைத்திருந்தால், இந்த விழா சிறிய அளவில்கூட செய்ய முடிந்திருக்குமோ என்பது கேள்விக்குறி. ஆனால் இன்று தன்து ஊரிலேயே இதுவரை பெரிதாகப் பூப்புனித நீராட்டுவிழா யாராலும் கொண்டாடப்பட்டதில்லை என ஊரில் எல்லோரும் கதைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் தூண்டுதலே விழாவின் ஆடம்பர ஏற்பாட்டுக்கு அடித்தளம்.

சற்குணம் இரண்டு தடவைகள் வெளிநாட்டிற்கெனச் சென்று திரும்பி வந்து மூன்றாவது தடவையே ஜெர்மனிக்குச் சென்றடைந்தான். அதனால் வெளிநாட்டுக்குச் சென்றதற்கான செலவும் இரட்டிப்பானது. இச்செலவுக்குரிய தொகை வீடு, நகை அடைமானம் வைத்ததன் மூலமும் கடன் பெற்றதன் மூலமுமே செலுத்தப்பட்டது.

அக்கடனை அடைப்பதற்கே அவனது உழைப்பின் பெரும் பகுதி தொலைந்து போனது. அவன் தனது கடனை முழுமையாகத் தீர்த்திருந்த போதிலும் ஈடுவைக்கப்பட்ட வீடு மாத்திரம் இன்னமும் மீட்கப்படாது காத்திருந்தது.

பூப்புனித நீராட்டுவிழா என்ற பெயரில் செலவுகளின் மதிப்பீடு ஒரு இலட்சம் ரூபா வரை சென்றுவிட்டது.

"தம்பி! நீ போய் பந்தல், கதிரைகளுக்கு சொல்லி வைச்சிட்டு வா!" என கமலினி மகனுக்குச் சொல்லிக் கொண்டிருக்கையில், "கமலினியக்கா! உங்களுக்கு கோல் வந்திருக்கு!" என பக்கத்துவீட்டு பெண் குரல் கொடுத்தாள்.

கணவன் ஜெர்மனியிலிருந்து தொலைபேசி எடுக்கிறார், என நினைத்தவண்ணம் சென்று ரிசீவரைக் கையில் எடுத்தாள். அவள் நினைத்ததுபோலவே கணவன்தான் தொலைபேசி வழியே பேசினான். ஆனால் ஜெர்மனியிலிருந்தல்ல.

"கமலினி! எனக்கு அகதி அந்தஸ்துத் தரமுடியாதென ஜெர்மனி நீதிமன்றம் சொல்லிவிட்டது. அதனாலை நான் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டியதாகிவிட்டது. திடீரென வரவேண்டியிருந்ததாலை உங்களுக்கு ஒரு ஃபோன்கூட செய்ய முடியாமல் போய்ட்டுது...."

ஜெர்மனியிலிருந்து கொழும்புக்கு வந்து சேர்ந்த சற்குணம் தொலைபேசி வழியே சொல்லிக் கொண்டிருப்பதை கமலினியால் தொடர்ந்து கேட்கமுடியவில்லை.

ஆடம்பர வாழ்க்கை பறிபோவதற்கு மேலாக அடைமானத்தில் சிக்கியுள்ள வீட்டை மீட்பது எப்படி? பூப்புனித நீராட்டு விழாவுக்குப் பெற்ற கடனை மீளளிப்பது எப்படி? என்ற விடைகாண முடியாத வினாக்கள் அவள் நினைவில் வந்து பயமுறுத்திக் கொண்டிருந்தன....


படிப்பகம்

www.padippakam.com

# அவள்

## இலக்கிய நயம்



தருவது ரசிகன்

மொகலாய சாம்ராச்சியத்தின்
முதல் பெண் தலைவி
ராசியா பேகம்!

அஹ்மத் முலாயம் சுல்தான்
ஆண் குழந்தை இல்லை
என்று ஏங்கினான்!
பிறந்தது ஒன்றும்
பெண்ணாகிவிட்டதே என்று
பிதற்றினான்!

'வாளேந்தி வாகை
சூடிய சாம்ராஜ்யத்திற்கு
வாரிசு இல்லையா?'

சுல்தானின் மனதில்
சோகம் சுழன்றடித்தது!

'அரியாசனத்தில்
ஏறி அமருவதற்கு
அரிமா என ஒரு
ஆண்மகன் இல்லையே!

சுல்தான் காதுபடவே
அனுதாப வார்த்தைகள்!

'கட்டிக் காக்கப்படும்
இந்தக் கெட்டிக்கார
சாம்ராஜ்யம்
எனக்குப் பின்னர்
கொட்டிய முத்துக்களாய்
எட்டுத்திக்கும் சிதறிவிடுமோ?'

சுல்தான் மனது
சோகத்தில்
சுருங்கித்தான் போனது!

ரசியா பேகம்
ரசிப்பான
பெண் குழந்தை!
தத்தித் தத்தி
சுல்தான் மனதை
கொத்தி எடுத்த
கொஞ்சு மொழி
குழந்தை!

ரசியா பேகத்தில்
சுல்தான்
பாசமழை பொழிந்தாலும்
இதயத்தின் மூலையில்
ஆண்வாரிசுக்கான
ஏக்கம் போகவில்லை!

ரசியா பேகத்தின்
பத்து வயதில்
சுல்தானின் கவலைக்கு
விழுந்தது முற்றுப்புள்ளி!

மனதையள்ளும்
மகள் ரசியாவுக்காக
அரண்மனையெங்கும்
அலங்காரப் பொம்மைகள்!
விளையாட்டுப் பொருட்கள்!

எதையும் தொடவில்லை
ரசியா பேகம்!

"வேறென்ன வேண்டும்
மகளே?"
விழிகளை சுழற்றினாள்
விடையேதும் கூறவில்லை!

மறுபடியும் கேட்டார்
சுல்தான் மன்னர்!

ரசியாவின் விழிகள்
புலிப் பொம்மையில்
குத்தி நின்றன!

சுட்டு விரல் காட்டி
துடுக்காகச் சொன்னாள்:
"அதுதான் வேண்டும்
உயிரோடு வேண்டும்!"

சுல்தான் பிரமித்தார்.
இவள் பூ அல்ல
புலிக் குட்டி!

இந்த புலிக்குட்டி
விளையாட
புலிக்குட்டி தேடுகிறது!

உயிரோடு பிடித்த
புலிக் குட்டி ஒன்றை
தன் பத்து வயதில்
அன்போடு வளர்த்தாள்
ரசியா பேகம்!

மகன் இல்லையென்னும்
மனக்குறை போனது!

சாண் பிள்ளையானாலும்
ஆண் பிள்ளை என்பது
வீண் வாதம்!

எந்தப் பிள்ளையானாலும்
வளரும் முறையில்தான்
வீரியம் இருக்கிறது!

ரசியா பேகம்
போர்க்கலை கற்றாள்!
ரசியா பேகம்.
போர்க்களம் சென்றாள்!

முதல் களத்திலேயே
மூன்று பேரின்
சிரம் உருட்டிவிட்டு
சிங்க நடையுடன்
தந்தையிடம் வந்தாள்!

ஆணுக்கு மட்டும்தான்
புலி நடை, சிங்க நடை
என்பது பெண்ணின்
வீர நடை காணாதவரின்
ஒரு தலையான வரையறுப்பு!

'மொகாலய சாம்ராஜ்யம்
எனக்குப் பின்னரும்
மூழ்காது!'
திருப்தியாக கண்
மூடிக்கொண்டார் சுல்தான்!

மலையளவு சுமை
மாபெரும் சாம்ராஜ்யத்தை
கட்டியாள்வது!

அத்தனை பாரத்தையும்
தன்தோளில் தாங்கி
எத்திக்கும் புகழ் பரப்பி
எழுந்து நின்றாள் பேகம்!

அவள் உள்ளத்திலும்
கல்லெறிய வந்தான்
ஒரு கட்டழகன்!

அரபுக் குதிரைகள்
கொண்டுவந்த
கல்தூண் அழகன்
மஸ்ஜித்!

முதலில் ரசியா பேகத்திற்கு
சேவகனாகத்தான்
பணியில் சேர்ந்தான்!

எந்த ஆணையும்
சொந்தம் கொண்டாட
எண்ணியிராத பேகத்தை

மஸ்ஜித்தின்
குழந்தை மனம்
கொக்கி போட்டு இழுத்தது!

அந்த மஸ்ஜித்தை
ஒருநாள் இரவு
ஒருவன் சந்தித்தான்!

"தேவையான பொன்
பரிசாகத் தரப்படும்
ஒரே ஒரு சேவை
செய்தால் போதும்!"
என்றான் வந்தவன்.

"என்ன சேவை?"
என்றான் மஸ்ஜித்.

"ரசியா பேகத்தை
கொன்றுவிடு!
நீ ராஜாபோல
வாழ ஏற்பாடு செய்கிறோம்!
மேலும்..."

அவன் சொல்லி
முடிப்பதற்குள்
சிரம் உருண்டு
தரையில் கிடந்தது!

'சபாஷ்' என்றொரு
குரல் கேட்டது!
அது ரசியா பேகத்தின்
கம்பீரக் குரல்!

பரீட்சை நடத்தியவளே
அவள்தானே!
உண்மையானவனா? என்று
நாடிபிடித்தறியும் பரீட்சை!

பாவம் ஒரு தலை
மண்ணில் புரண்டு போனது!

மஸ்ஜித்-அன்றுமுதல்
மெய்காப்பாளனாகினான்!

எந்த ஆணாலும்
உட்புகமுடியாத

என் இதயக்கோட்டையில்
நீ ஊடுருவியது எப்படி?

அவள் தனக்குள்ளேயே
விசாரணை ஆணைக்குழு
நியமித்திருந்தாள்!

அதுதான் காதல்
அவன்தான் காதலன்
முடிவை அறிவித்தது
விசாரணைக் குழு!

அவனுக்கு சொல்லாமல்
தன் நெஞ்சுக்குள்
பத்திரப்படுத்தி வைத்திருந்தாள்!

ராசியா பேகம்
ஒரு பெண்!

பெண்ணுக்கு நாம்
அடங்கியிருப்பதா?

பெண்ணின் உத்தரவுக்கு
நாம் தலைவணங்குவதா?

அரச பதவியில்
ஆசை வைத்தவர்கள்
ஆண் ஆதிக்க எண்ணத்தை
கொம்புசீவி விட்டனர்!

உள்ளேயே ஒரு
சூழ்ச்சி மேகம்
சூல்கொள்வது தெரியாமல்
ராசியா பேகம்
வெளி எதிரிகளிடம் மட்டும்
விழிப்பாக இருந்தாள்!

அந்த சதிந்தினமும்
வந்தது!

ராசியா பேகம்
தூங்கிக் கொண்டிருந்தாள்.
வெளியே மஸ்ஜித்
விழித்திருந்தான்!

ஆனால், அவர்கள்
உள்ளிருந்த பாம்புகள்!

தடமறிந்து, தருணமறிந்து
தீவைத்தனர்!
பற்றி எரிந்தது மாளிகை!

தப்ப முடியாமல்
தாழிடப்பட்டிருந்தன
மாளிகை கதவுகள்!

மஸ்ஜித் துடித்து
கதறினான்!
தனக்காக அல்ல
தன் தலைவிக்காக!
தான் மாள்வதாயிருந்தாலும்
தலைவி வாழ்வதற்கு
வழி உண்டா?
அடிபட்ட புலியாக
ஓடியோடி தேடினான்!

ராசியா பேகம்
நகைத்தாள்!

"மஸ்ஜித் என்
பிரிய காவலனே!
எம் இறுதி நேரம்
இதோ வந்துவிட்டது!

நான் மரணத்திற்கு
அஞ்சபவளல்ல!

மரணத்தின் பின்னரும்
என் பெயர் நிலைக்கும்!
பெண் புயல் என்று
உலகம் அழைக்கும்!

என் கவலையெல்லாம்
எனக்காக நீயும்
எரியப்போவதை
நினைத்துத்தான்!

வா! மஸ்ஜித்!
உனக்காக என்னை
தருகிறேன்!

அதன்பின்னர்
நமக்காக நாம்
சொர்க்கம் புகுவோம்!"

சொன்னவள்
மஸ்ஜித்தை
மார்புறத் தழுவினாள்!

"எடுத்துக்கொள்
மஸ்ஜித்!
தீ என்னை தின்ன முன்னர்
நீ என்னை தீண்டி விடு!"

மஸ்ஜித் மறுக்கவில்லை
ஆனால் கடைசியாக
ஒரே ஒரு கேள்வி
கேட்டான்:

"மரணத்தின் நடுவில் நின்று
எப்படி கலங்காதிருக்கிறீர்கள்?
துன்பத்தை கண்டு எப்படி
துவளாதிருக்கிறீர்கள்?"

ராசியா பேகம்
சற்றும் தடுமாற்றம்
இன்றி கூறினாள்:

"இன்பம் வந்த காலத்தில்
அது நிரந்தரம் என்று
துள்ளிக் குதித்ததுமில்லை
துன்பம் வந்துள்ள போதும்
துவளப் போவதுமில்லை!"

"இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்!"

அதிகாரம்- 63, குறள்- 629

(ஸ்போர்ட்ஸ்)

# இது மூன்றாவது முறை

முதலாவது ஆசிய டெஸ்ட் சாம்பியன் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான முதல் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுவிட்டது.

இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தின் தலைநகரான கல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரின் சர்ச்சைக்குரிய ரன்-அவுட் கொடுக்கப்பட்டது. இதனால் இரசிகர்கள் வன்முறையில் ஈடுபடத் தொடங்கினார்கள். இறுதியாக இரசிகர்கள் வெளியேற்றப்பட்ட பின் போட்டி நடத்தப்பட்டு முடிவு தீர்மானிக்கப்பட்டது.

ஈடன் கார்டன் மைதானத்தில் இவ்வாறான, இரசிகர்களின் ரகளை காரணமாக போட்டி பாதிக்கப்படுவது இது மூன்றாவது முறையாகும்.

1967ம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, ஈடன் கார்டன் மைதானத்தில் டெஸ்ட் போட்டியில் விளையாடியது. போட்டியின் துவக்க நாளே இது போன்ற சம்பவம் ஏற்பட்டு, முதல் நாள் முழுவதும் போட்டி நடைபெறவில்லை.

இரண்டாவதாக 1996ல் உலகக்கோப்பை அரையிறுதிப் போட்டியில் இலங்கைக்கு எதிராக இந்திய அணி விளையாடியபோது, மிகப்பெரிய ரகளை தலைதூக்கியது. அப்போது போட்டி கைவிடப்பட்டு இலங்கை அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

# ரமேஷுக்கு எச்சரிக்கை



கல்கத்தா ஈடன் கார்டனில் இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி சார்பாக அதிக ஓட்டங்களை எடுத்தவர் தமிழ் நாட்டு வீரர் சடகோபன் ரமேஷ். கிரிக்கெட் விதிகளுக்கு முரணாக நடந்து கொண்டமைக்காக இவர் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

ரமேஷ் இந்தப் போட்டியில் 79 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆடிக்கொண்டிருந்தபோது, வாஸிம் அக்ரம் வீசிய பந்தைத் தடுத்தாட முயன்றார். அப்போது தென்னாபிரிக்க நடுவர் டேவிட் ரிச்சாட் எல்.பீ.டபிள்யூ. முறையில் அவுட் என்று சைகை செய்தார்.

ஆனால் நடுவரின் தீர்ப்பால் அதிர்ச்சியடைந்த ரமேஷ், மைதானத்தை விட்டு வெளியேறாமல் இருந்தார். பின் தனது பேட் பந்தில் பட்டது, என்று பேட்டைத் தூக்கிச் சுட்டிக் காட்டினார். ஆனால் இவரது சைகை நடுவருக்கு எதிர்மறையாகத் தோன்றியது.

இது குறித்து, ரமேஷ் மைதானத்தில் செயற்பட்ட விதத்தைக் குறித்து, போட்டி நடுவரான கேமிஸ்மித்திடம் புகார் செய்தார். அவரும் இது தொடர்பான வீடியோ படச்சுருளைப் போட்டுப் பார்த்து, ரமேஷிடம் விசாரணை நடத்தினார். இதன் பின்னர் ரமேஷின் செயல் தவறானது என்று போட்டி நடுவர் தீர்மானித்தார். எனினும் இவருக்கு இது முதல் தவறு என்றபடியால் இவர் எச்சரிக்கப்பட்டு மன்னிக்கப்பட்டார்.

எனினும் இன்னும் 3 மாதங்களுக்குள் அதாவது பெப்ரவரி 17ம் திகதி தொடக்கம் மே - 17ம் திகதிக்குள் இதேபோன்றதொரு குற்றச்சாட்டு இவர்மேல் எழுந்தால், ஒருநாள் போட்டி அல்லது டெஸ்ட் போட்டி ஒன்றில் விளையாடத் தடை விதிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளார்.

# கோப்பை யாருக்கு?

வரும் மே மாதம் தொடங்கவிருக்கும் 7வது உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் கோப்பையைக் கைப்பற்றி சாம்பியன் பட்டத்தை வெல்லப்போவது தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி என்பது பலரது கணிப்பு.

இதற்கு முன்னோடியாக சென்ற வருட இறுதியில் டாக்காவில் நடைபெற்ற மினி உலகக் கோப்பையை தென்னாபிரிக்கா வென்றது. அது மட்டுமன்றி மேற்கிந்தியத்தீவு அணியை டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் வென்று வரலாறு காணாத சாதனை கண்டது.

இப்படி வெற்றிக்களிப்புடன் இருந்த தென்னாபிரிக்கா அண்மையில் நியூஸிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்தது. அங்கு நியூஸிலாந்துடன் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 2 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. ஒன்றில் வெற்றி.

முதல் இரண்டு உலகக் கோப்பைப் போட்டிகளைத் தவிர ஏனைய போட்டிகள் அனைத்திலும் பலம் வாய்ந்த அணியாகக் கருதப்பட்டு, பலரால் கோப்பையைக் கைப்பற்றும் என்று கணிக்கப்பட்ட அணிகள், கோப்பையைக் கோட்டை விட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! காதல் பற்றி காட்டமான ஒரு கருத்துக் கூறும்?

எம். தேவேந்திரன், மட்டக்களப்பு.

காதலர்களிடம் கல்லெறி வாங்க வைத்துவிடுவீர் போலிருக்கிறதே! சமீபத்தில் படித்து சிரித்த ஒரு கவிதை இது:

"ஒன்னும் ஒன்னும் ஒன்னுதான்-
காதல் கணக்கு...
ஒன்னும் ஒன்னும் ரெண்டுதான்-
கூட்டல் கணக்கு...
ஒன்னும் ஒன்னும் மூணுதான்-
குடும்பக் கணக்கு...
அட... ஒன்னுமில்ல மண்ணுதான்-
கடைசிக் கணக்கு."

◆❑

★ இலண்டனில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள இலங்கையர்களை நாடு கடத்த சட்டம் வருவது உண்மையா?

எஸ். சபேசன், கொழும்பு-11.

அரச பத்திரிகை ஒன்று அவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது. தமிழர்களைத் திருப்பி அனுப்பப் போகிறார்கள் என்ற அர்த்தப்பட்டு மகிழ்ச்சியுடன் செய்தி போட்டிருக்கிறது. ஆனால் அச்சட்டம் பொதுவாக சகல வெளிநாட்டவர்களுக்கும் பொருந்தக் கூடிய சட்டம்தான். இதனால் பெரிய பாதிப்புக்கள் எதுவும் ஏற்படமாட்டாது.

◆❑

★ இந்தியப் பிரதமரது பாகிஸ்தான் பஸ் பயணம் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

வி. கிருபாஜ், கல்கிசை.

இதனால் உறவுகள் பூத்துக் குலுங்கும் என்று நம்பினால், நமக்கு ஏமாற்றம் காத்திருக்கிறது. அமெரிக்காவை மூக்கை நீட்டவிடாது பாகிஸ்தானுடன் அனுசரித்துப் போகலாம் என்று இந்தியா நினைக்கிறது. ஆனாலும் காஷ்மீர் பிரச்சனையில் எதிரும் புதிருமான நிலைப்பாடு மாறாதவரை, இருநாடுகளும் பூக்கும் புன்னகைகளுக்கு ஆயுள் அதிகமில்லை. இருந்து பாருங்கள்!

◆❑

★ ஈராக் மீது அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்துகிறதே?

எம். பைசா, கந்தளாய்.

"உலகில் யார் பேச்சையும் நான் கேட்க மாட்டேன். என் பேச்சை மட்டும் உலகம் கேட்க வேண்டும்!" என்பதுதான் அமெரிக்க சண்டியரின் கொள்கை! ஈராக்மீதான ஒவ்வொரு தாக்குதலிலும் அதுதான் உறுதியாகிறது!

◆❑

★ குர்திஷ் தலைவரைக் கைது செய்து துருக்கி அரசு விசாரிப்பது முறையா? இது கண்டிக்கப்படவேண்டியதுதானே?

ஆர். பரமநாதன், கொழும்பு-6.

ஆம்! இன்னொரு முக்கியமான கேள்வி, குர்திஷ் மக்களுக்காகக் கண்ணீர் வடித்து ஈராக்மீது குற்றம் சாட்டும் அமெரிக்கா, குர்திஷ் தலைவரை கைது செய்து விசாரிக்கும் துருக்கிமீது ஒரு துரும்பைக்கூடத் தூக்கிப் போடவில்லையே- ஏன்? அமெரிக்கா வடிப்பது கண்ணீரல்ல, நீலிக்கண்ணீர் என்பதற்கு இதுவும் ஓர்உதாரணம்.

◆❑

★ இந்திய அணியின் புதிய வீரர் ரமேஷ் தொடர்ந்து இதேபோல பிரகாசிப்பாரா?

சி. மணிவண்ணன், வவுனியா.

ஆட்டத்தைப் பார்க்கும்போது, 'இளம் கன்று மனம் தளராது' என்றுதான் தெரிகிறது.

◆❑

★ சிந்தியா! 'துள்ளாத மனமும் துள்ளும்' பார்த்தீரா? உமது மனம் துள்ளியதா?

ஏ. கல்யாணி, வத்தளை.

முதல் பாதியில் கல கலப்பில் துள்ளியது. இரண்டாவது பாதியில் சோகத்தில் துள்ளியது. அருமையான படம். விஜய், சிம்ரான் மட்டுமல்ல, அனைவருமே பாத்திர மறிந்து நடித்து அசத்திவிட்டார்கள் போங்கள்!

◆❑

★ ஆண்டவனை நம்புகிறவர்களும் அவனை ஏமாற்ற நினைக்கிறார்கள் அல்லவா?

வ. குமரகுருபரன், திருமலை.

நிச்சயமாக! செய்த பிழைகளை மன்னிக்குமாறு உண்டியலில் இலஞ்சம் போடுவோரும் உண்டல்லவோ? ஒரு குட்டிக் கதை:

ஒரு வட்டிக் கடைக்காரனிடம் சென்று ஒருவர் வட்டிக்குப் பணம் கேட்டார்.

வட்டிக்காரர், '9 சதவீத வட்டி' என்று பலகையில் எழுதிக் காட்டினார்.

"ஒன்பது சதவீதமா? இது கடவுளுக்கே பொறுக்காதே...." என்றார் அவர். அதற்கு வட்டிக்காரர் கூறினார்:

"நீ பயப்படாதே! நான் 9 என்று எழுதியிருப்பதை கடவுள் மேலிருந்து பார்த்தால் 6 என்றுதான் தெரியும்!"

◆❑

★ திருமலை புதிய சந்தை விவகாரத்தில் புதிய ஆளுநராலும் எதுவும் செய்ய முடியவில்லையே?

என். சிவபாலன், திருமலை.

ஆளுநர் யாராக இருந்தாலும் அதிகாரம் யார் கையில் என்பதுதான் முக்கியம். ஆளுநர்கள் மாறுவதால் ஆளும் வர்க்கத்தின் அடிப்படைக் குணமான- இனரீதியான கண்ணோட்டம் மாறாது!

◆❑



'முதல்வன்' படத்தில் அர்ஜுன்- மனிஷா கொய்ராலா

★ என் மனைவியும், என் தாயாரும் எப்போதும் ஏட்டிக்குப் போட்டியாகவே நடந்து கொள்கிறார்களே; என்ன செய்யலாம்?

எஸ்.எஸ். விமலன். காரைதீவு.

தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம்.

உங்களைப் போல ஒரு குடும்பஸ்தருக்கும் இதே நிலைதான். ஆனால் அவர் பதற்றம் இல்லாமல் இருக்கப் பழகிக் கொண்டார்.

"என் வீட்டில் எப்போதும் என் மனைவிக்கும், அம்மாவுக்கும் இடையே சண்டை நடந்து கொண்டே இருக்கும். என் மனம் மட்டும் அமைதியாக இருக்கும்!" என்று அவர் கூறினார்.

"அது சரி, உங்கள் அம்மாவும், மனைவியும் சண்டை போடும்போது நீங்கள் எந்தப் பக்கம் இருப்பீர்கள்?" என்று கேட்டார் அவரது நண்பர்.

அதற்கு அவர் சொன்னார்:

"அந்தச் சமயம் நான் வீட்டுக்கு வெளியே இருப்பேன்!"

◆❑

★ இந்தியா-இலங்கை டெஸ்ட் போட்டியில் எந்த அணி ஜெயிக்கும்?

ஆர். பாரதி, கொழும்பு-09.

பாகிஸ்தானிடம் ஏற்பட்ட தோல்வியால், இலங்கையை ஜெயிக்க இந்தியா பலத்த முயற்சி செய்யும். ஒரு தோல்விக்குப் பின்னர் வெற்றி பெறுவது இந்திய அணியின் வழக்கம். இம்முறை என்னாகிறது பார்க்கலாம்.

◆❑

★ சிந்தியா! இப்போது நல்ல நல்ல சினிமா பாடல்கள் வரத்தொடங்கியுள்ளதே?

சி. அருட்செல்வி, கண்டி.

வரவேற்போம்! நல்ல பாடல்கள், நல்ல இசை போன்றவற்றைக் கேட்பதால் மனதுக்கு இதம்.

மருத்துவ வல்லுநர்கள் என்ன சொல்கிறார் தெரியுமா?

"மனம் பதற்றமாக இருக்கும்போது உங்களுக்கு பிடித்த பாடலையோ, இசையையோ கேளுங்கள். அப்போது இரத்த நாளங்கள் சீராகும். பதற்றத்திலிருந்து விடுதலை கிடைக்கும். அந்த இசையோடு சேர்ந்து நீங்களும் உரத்த குரலில் பாடினால், மூளையினுடைய கவனத்தைச் சிதறாமல் ஒரு முகப்படுத்த முடியும். எப்போதும் பாடிக்கொண்டே இருந்தால் மன இறுக்கம், பதற்றம், பயம் போன்ற உணர்வுகளை தவிர்த்துவிடலாம்."

◆❑

★ 'ஜென்டில் மேன்' போல 'முதல்வன்' அர்ஜுனுக்கு கைகொடுக்குமா?

கு. கேதீஸ்வரன், ஹெந்தளை.

கொடுக்கும்! விறுவிறுப்பாக படமாகிக் கொண்டிருப்பதாகவே தகவல்!

◆❑

★ இந்தியாவில் சிறுபான்மை மதத்தவர் மீது நடக்கும் தாக்குதல்களுக்கு யார் காரணம்?

எம். பெர்ணாண்டோ, சிலாபம்.

பாரதிய ஜனதாவின் நட்புசக்திகளான இந்து தீவிரவாத அமைப்புக்கள், இப்போது பாரதிய ஜனதா ஆட்சியின் தலையில் மண் அள்ளிப் போடுகின்றன. 'வளர்த்த கடா மார்பில் பாய்கிறதே.' மெல்லவும் முடியாமல், வெளியே சொல்லவும் முடியாமல் திணறுகிறது பாரதிய ஜனதா.

◆❑



சோனியா

★ இந்தியாவில் சோனியா காந்தியை பிரதமர் நாற்காலி 'வாவா' என்று அழைக்கிறது, எப்போது அமருவார்?

எ.ஃப். ரஹூப், மாத்தளை.

நாற்காலிக்கும் அவருக்கும் உள்ள தூரம் குறைந்துகொண்டே வருகிறது!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 50

ஆண்டவரால் அருளப்பட்ட வார்த்தைகளை மக்களிடம் தெரிவிக்கும் இறைவாக்குரைஞர் எரேமியா, பெத்லகேமுக்கு அருகேயிருந்த கேருத்கிம்காமின் என்ற இடத்தில் இருந்தார். யூதாவில் எஞ்சியிருந்த மக்களின் ஆளுநராக, நெபுகத்நேசரால் நியமிக்கப்பட்டிருந்த கெதலியா, இஸ்மயேல்; கொலை செய்யப்பட்ட பின்னர், எங்கு செல்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த யூதா மக்கள் மத்தியில் எரேமியா காணப்பட்டார்.

திரண்டிருந்த மக்களின் பதற்ற நிலை தணிந்த நிலையில், அவர்களால் எரேமியாவை அடையாளம் காண முடிந்தது. தங்களுடைய சங்கடமான நிலையில் வழிகாட்டக் கூடியவர் எரேமியாவே என்பதை உணர்ந்தவர்கள் அவரை அணுகினர். யோகனானும் ஏசனியாவும் வேறு பலரும் எரேமியாவிடம், "இறைவாக்குரைஞரான தங்களால்தான் இந்நிலையில் எங்களுக்கு ஏற்ற வழி காட்ட முடியும். இறைவனுடைய எண்ணம் என்ன.. எங்கு சென்றால் எங்களுக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும், என்பதனை அறிந்து கூறுங்கள். தாங்கள் எத்தகைய மார்க்கத்தை எங்களுக்குக் காட்டினாலும் நாங்கள் அதனைக் கடைப்பிடிப்போம். ஆகவே ஆண்டவருடைய கருத்தைக் கேட்டறிந்து சொல்லுங்கள்!" என்று கூறினார்கள்.

எரேமியா, அம்மக்களுக்காக ஆண்டவரைப் பிரார்த்தித்தார். பத்து நாட்களின் பின்னர் எரேமியா மக்களனைவரையும் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொண்டார். அவர்கள் எல்லாரும் வந்து கூடியதும் ஆண்டவரின் கருத்தை அவர்களிடம் எடுத்துரைத்தார்.

"உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கூறியவற்றை அப்படியே கூறுகிறேன். நீங்கள் எப்பயமுமின்றி பாபிலோனுக்கே செல்ல வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். மன்னர் நெபுகத்நேசருக்கு நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. ஆண்டவருடைய விருப்பத்துக்கு மாறாக யூதாமக்களும் இஸ்ரயேலரும் நடப்பதனால்தான் ஆண்டவர் அவர்கள் மீது கோபங்கொண்டார் பாபிலோனிய மன்னரான நெபுகத்நேசர் மூலம் உங்களுக்கு ஆண்டவர் தண்டனைகளை வழங்கினார். ஆகவே நெபுகத்நேசருடைய நாட்டுக்கு நீங்கள் செல்வதால் எதுவித அசம்பாவிதமும் உங்களுக்கு ஏற்படப்போவதில்லை!"

## இராஜகுமாரன்

### மனம் மாறிய மக்கள்

இவ்வாறு எரேமியா கூறியதும்- அவரிடம், ஆண்டவருடைய கருத்தை அறிந்து கூறும்படி கேட்டிருந்த அதே மக்கள்- கொதித்தெழுந்தனர். பத்து நாட்களுக்குள் அவர்களுடைய எண்ணங்கள் மாறிவிட்டன. யோகனானும் அம்மக்கள் குழுவினருடன் சேர்ந்து கொண்டு, "உமது வாக்கை நாங்கள் நம்பப் போவதில்லை. நாங்கள் அனைவரும் எகிப்து நாட்டுக்குச் செல்லப்போகிறோம். அங்கு நாங்கள் அமைதியாக வாழ வழி கிடைக்கும். அங்கு போர்ப் பயம் இருக்காது. போதிய உணவு கிடைக்கும்," என்று கூறினர்.

மக்கள் மீண்டும்- ஆண்டவருடைய எண்ணத்துக்கு விரோதமாக நடப்பதற்குத் துணிந்து விட்டனர் என்பதை எரேமியா கண்டு கொண்டார். மீண்டும் எச்சரித்தார்.

'எகிப்தில் நீங்கள் நிம்மதியாக வாழ முடியாது. ஆண்டவருடைய தண்டனை தொடரும்; வாளாலும் கொடும் பஞ்சத்தாலும் நோய் பிணியாலும் அந்நாட்டிலேயே நீங்கள் மடியப் போகிறீர்கள்!"

இவ்வார்த்தைகளைக் கூறியபின் எரேமியா அமைதியடைந்தார். மக்கள் மீண்டும் மீண்டும் ஆண்டவருடைய வார்த்தைக்கு மதிப்பளிக்கத் தவறுவது எரேமியாவுக்கு மிகுந்த மன வேதனையைத் தந்தது. அவருடன் அவருடைய உதவியாளருமான பாருக்கும் இருந்தார்.

யோகனானும் அவனுடைய தோழர்களும் எஞ்சியுள்ளோரும் எகிப்தை நோக்கிப் பயணமானார்கள். அவர்களுடன் எரேமியாவும் பாருக்கும்-வேறு வழியின்றி-சென்றனர். இவ்வாறு எகிப்து நாடு சென்ற எரேமியா மீண்டும் நாடு திரும்பியதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே இறைவாக்குரைஞரான எலியா, தனது பூதவுடலுடனேயே தீமான குதிரைகள் பூட்டிய நெருப்புத் தேரில் ஏறி விண்ணோக்கிச் சென்று மறைந்தார். அதே போன்று, தூயவரான எரேமியாவும் இறைவனிடம் சென்றிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

(திருவிவிலியத்தில் எரேமியா பற்றி வேறு தகவல்கள் காணப்படவில்லை)

எகிப்து நாட்டின் மீது பாபிலோன் மன்னர் நெபுகத்நேசர் படையெடுத்தார். அப்போது, இறைவாக்குரைஞரான எரேமியாவின் சொல்லைக் கேட்காமல் எகிப்து சென்ற யூதாமக்கள் பெரும்பாலானோர் கொல்லப்பட்டனர்.

### எசெக்கியேல்

பாபிலோன் நாட்டின் கெபார் என்ற ஆற்றங்கரையோரமாக பூசி என்ற குரு வாழ்ந்து வந்தார். அந்தக்குருவின் மகனான எசேக்கியேல் என்பவரை இறைவன் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் தெரிவுசெய்தார். இவர், எரேமியா இருந்த காலத்திலேயே மற்றுமொரு இறைவாக்குரைஞராக இருந்திருக்கக்கூடும்.

எசேக்கியேலுக்கு ஆண்டவர் பல தடவைகளில் நேரடியாகத் தோன்றி வழி நடத்தியுள்ளார். இவருடைய கருத்துக்களைக் கேட்டவர்கள், இவருடைய வார்த்தைகளுக்கு மதிப்பளித்தனர் என்றே கருதத் தோன்றுகிறது. இவர் வெறுமனே உரையாடலால் மட்டும் விளக்காமல், பலசந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டுக்கள் மூலமும் செயற்திட்டங்கள் மூலமும் விளக்கம் அளித்தார்.

பாபிலோன் மீது பாரசீக மன்னர் சீருஸ் படையெடுத்தார். சீருஸ் பாபிலோனைக் கைப்பற்றியதும் முதல் வேலையாக அங்கு கைதிகளாக இருந்த யூதா மக்கள் அனைவரையும் விடுவித்தார். எருசலேம் ஆலயத்தை மீண்டும் கட்டி யெழுப்புவதற்கான நடைமுறைகளை விரைவாக மேற்கொண்டார். இவ்வாலயத்தைக் கட்டுவதற்கான பொருட்களையும் மக்கள் பாபிலோனிலேயே திரட்டிக் கொண்டு வந்தார்கள்.

பாபிலோன் ஆட்சி அதிகாரத்தை நெபுகத்நேசர் பொறுப்பேற்று ஏழாம் ஆண்டில் எருசலேம் மீது படையெடுத்தார். அப்போது யூதா மக்கள் மூவாயிரத்து இருபத்து மூன்று பேரைக் கைது செய்து தன்னுடன் கொண்டு சென்றார். ஆட்சிபீடமேறிய பதினெட்டாம் ஆண்டில் இரண்டாவது முறைபடையெடுத்து எண்ணூற்று முப்பத்திரண்டு பேரைக் கைது செய்து தனது நாட்டுக்கு அழைத்துச் சென்றார். மீண்டும்- ஆட்சிபீடமேறிய இருபத்து மூன்றாம் ஆண்டில், நெபுகத்நேசரின் அதிகாரியான நெபுசரதான் எழுநூற்று நாற்பத்



தைந்து பேரை தன்னுடன் அழைத்துச் சென்றான். இக்காலகட்டத்தில்தான் இறைவாக்குரைஞரான எரேமியாவும் விடுதலை செய்யப்பட்டார். இவ்வாறு மூன்று தடவைகளும் பாபிலோனியரால் மொத்தம் நாலாயிரத்து அறுநூறு பேர் கைதிகளாக அந்நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இது தவிர, எருசலேமில் யூதா ஆட்சியில் இருந்த ஏராளமான செல்வங்களையும் அரண்மனை உடைமைகளையும் ஆலயத்திலிருந்த விலை மதிப்பிட முடியாத சொத்துக்களையும் தமது நாட்டுக்கு எடுத்துச் சென்றான். இந் நிகழ்ச்சிகள் கிறிஸ்துவுக்கு முன்னர் 586ம் ஆண்டிலிருந்து இடம்பெற்றன.

## இணைந்தன அரசுகள்



### யோக்கிம் விடுதலை

நெபுகத்நேசரால் கைது செய்யப்பட்ட யூதா மன்னரான யோயாக்கின், முப்பத்தெட்டு ஆண்டுகள் பாபிலோன் சிறையில் வாடினார் நெபுகத்நேசரைத் தொடர்ந்து அரியணையிலேறிய எவில்மெரதாக்கு, மன்னர் யோயாக்கினை விடுதலை செய்தார். அதுமட்டுமின்றி அவருக்குரிய சகல மரியாதைகளையும் அளித்தார். தன்னுடன் தனது அரண்மனையிலேயே அரச அந்தஸ்தில் விருந்தினராக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். அவருடைய செலவுகளுக்கான உதவித் தொகையையும் அன்றாடம் கொடுத்தார்.

எசேக்கியா இறைவாக்குரைப்பவராக இருந்த காலத்திலேயே-பிளவுபட்டிருந்த இஸ்ரயேல் மக்களும் யூதாமக்களும் ஒன்று பட்டனர். ஆண்டவருடன்-மோசே காலத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட கட்டளைகளை, தவறாது கடைப்பிடிக்கத் திடசங்கற்பம் பூண்டனர். இருப்பினும் தங்களுக்காக ஆண்டவரால் ஒப்புக் கொடுக்கப்பட்ட நாடு அந்நியர்களின் ஆதிக்கத்தில் சின்னாபின்னப்பட்டுக்கிடந்தது. அவர்களுடைய ஆதிக்கமும் வரிவிதிப்பும் மக்களை அமைதியிழக்கச் செய்தது. வேற்றின மன்னர்கள் தங்கள் கடவுள்களையே இஸ்ரயேல் மக்கள் வணங்க வேண்டும் என்று வலியுறுத்தினர். தங்களுடைய வாழ்க்கையை ஒட்டிய வாழ்க்கையையே கடைப்பிடிக்கும்படி வற்புறுத்தி வந்தனர்.

இத்தகைய பெரும் சங்கடங்கள் தங்கள் சமுதாயத்துக்கு ஏற்பட்டமைக்கு, தங்கள் ஆண்டவர் தங்களுக்கு இட்ட கட்டளைகளைப் புறக்கணித்து வாழத் தலைப்பட்டமையே காரணம் ஏற்பட்ட துன்பங்கள் என்பதனை உணர்ந்தனர். இறைவனைத் துதித்து, இத்தகைய துன்ப துயரங்களிலிருந்து விடுபட்டு வாழ வழிகாட்டுமாறு வேண்டினர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 48 விடை** ☛ ஏபேது மேலோக்கு

**பரிசு பெறுவோர்:**

*1. அருளானந்தராஜா தேவ டிலுஷன்,*
றொசைறோ ஒழுங்கை, மட்டக்களப்பு.
*2. தங்கா தருமசீலான்,*
பிரசாத் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.
*3.செல்வி த.பத்மலோஜனி,*
64/47, மோதரவீதி, கொழும்பு-15.
*4. யோ.அ.அன்ரனீற்றா,*
சந்தை வீதி, மூதூர்-03.
*5. எஸ்.வீ.ஜெயதீஸன்,* 33,கோடாபய மாவத்தை, ஹுனுபிட்டிய, வத்தளை.

**திருமறை 50** வினா:- நெபுகத் நேசருக்குப் பின்னர் பாபிலோனை ஆட்சி புரிந்தவர் பெயரைத் தருக?

மார்ச். 06க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**திருமறை 50– தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# தேர்தல் என்னும் போதினிலே தேன் வந்து பாயுது செவியினிலே




## பொதி உருண்டை

**தேவையான பொருட்கள்:**

*வடக்கு கிழக்கு மாகாணம்.*
*கத்தி- 01*
*கத்தரிகோல்-01*
*பிளாஸ்ரர்- தேவையானளவு*

**செய்முறை:**


*கத்தியை எடுத்து வடக்கு கிழக்கு மாகாணத்தை பாதியாகப் பிரிக்கவும். கத்தரிக்கோலால் ஓரங்களையும் நறுக்கவும். நன்றாக பிரித்து, நறுக்கிய பின்னர், தனித் தனியாக எடுத்து வைத்து உருண்டைகளாக செய்து ஒரு பாத்திரத்தில் வைக்கவும்.*

*இதனை பரிமாறும்போது தமிழ்க் கட்சிகளது வாய்களுக்கு, முன்பே தயாராக வைக்கப்பட்டுள்ள பிளாஸ்ரர்களை எடுத்து ஒட்டிவிடவும்.*

*உலகெங்கும் மணப்பதற்காக பொதிக்கு பிரசார மசாலா கலக்கவும்.* •



**குறிப்பு:** தகுந்த நேரம் வருவதற்கு முன்னர் பொதி உருண்டையை தயாரிக்கக் கூடாது. முதலில் பொதி உருண்டையின் ருசி பற்றி கூறிக்கூறி நாவில் நீர் சுரக்க வைக்க வேண்டும். பின்னர் சமயம் வரும்போது உருண்டைகளை தயார் பண்ணி, பிரசார மசாலாவுடன் கம கமக்க பரிமாறலாம்.




## பேச்சாளர் பேரம்பலம்

நாங்கள் உங்களை ஏமாற்ற விரும்பியிருந்தால் மார்ச் 31ம் திகதி எங்களுக்கு வாக்களிக்குமாறு கோரியிருப்போம், அவ்வாறு செய்யாது, உங்களை ஏமாற்ற விரும்பாத காரணத்தால் ஏப்ரல் முதலாம் திகதி யன்று எங்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டு வருகிறோம் என்பதை நீங்கள் நினைத்துப் பார்த்து, ஏப்ரல் முதலாம் திகதியன்று உலகோடு ஒத்து நீங்களும் செயற்பட வேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும்.



**காதிலை பூ கந்தசாமி**

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O. (QD/40/NEWS/99)





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


'தலைவலிக்கொரு மாத்திரை. தடிமலுக்கொரு மாத்திரை: தாறுமாறாத் தின்னுப் போட்டா தர்மலோக யாத்திரை' என்று ஒருபாடல் திரைப்படத்துறை முன்னோடிகளுள் ஒருவரான கவிஞர் கொத்தமங்கலம் சுப்புவால் இயற்றப்பட்டு 50ம் ஆண்டுகளில் வெளிவந்த-ஜெமினி தயாரித்த ஒரு தமிழ்ப்படத்தில் இடம்பெறுகிறது.

தர்மலோகத்தின் தலைவாயில் வரை சென்றுவிட்டவர்களையும் இழுத்துவந்து, ஒன்றன்பின் ஒன்றாக மாத்திரைகளை அவருடைய வாயில் போட்டு, அவருடைய யாத்திரையைப் பின் போட வைத்து விடுகிறார்கள், நவீன மருத்துவர்கள். அந்த ரீதியில் இன்று மாத்திரைகளின் தொகை வகை தேவையற்றுப் பெருகிவிட்டது. ஒருவர் 21 வருடங்களில் மொத்தம் 5 இலட்சத்து 65 ஆயிரத்து 939 மாத்திரைகளை தனது நோயைத் தீர்ப்பதற்காக விழுங்கி சாதனை படைத்திருக்கிறார். ஸிம்பாப்வே நாட்டில் மிந்துரா என்ற நாட்டிலுள்ள சி.எச்.ஏ.கில்னர் என்பவர்தான் அந்தச் சாதனையாளர்.

1967 ஜூன் 9ம் திகதி முதல் 1988 ஜூன் 19ம் திகதி வரை இப்பாரிய தொகை மாத்திரைகளை அவர் விழுங்கியுள்ளார். அதாவது இந்த 21 வருடங்களில் தினசரி சராசரி அவர் 73 மாத்திரைகளை உட்கொண்டிருக்க வேண்டும். இம்மாத்திரைகளை ஒன்றிற்குப் பின்னால் மற்றொன்றாக வைத்துப் பார்த்தால் இதன் தூரம் 3.39 கிலோ மீட்டர் (2 மைல் 186 யார்) இருக்கும் என்று கணக்கிடப்பட்டது.

இத்தனை மாத்திரைகளையும் உட்கொண்டவரான கில்னரின் நோய் குணமாகியதா அல்லது.....! அவர் என்ன ஆனார் என்பதுதான் தெரியவில்லை. ஆனாலும் இந்த மாத்திரை விழுங்கி மனிதரின் பெயர் உலக சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டுவிட்டது. எப்படியெல்லாம் உலக சாதனைகள் இருக்கிறது பார்த்தீர்களா?!





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## மாத்திரை உணவு





→ இலண்டனிலுள்ள டேவிட் மொரிஸ் இண்டர்நாஷனல்' ஆபரணப்பணியகம் விலை உயர்ந்த நகைகளை உற்பத்தி செய்வதில் சாதனைகள் படைத்து வருகிறது.

இந்த நிறுவனம் உற்பத்தி செய்த விலை உயர்ந்த செல்ஃபோனின் விபரம் படத்தோடு 296 வது முரசில் வெளிவந்தது அல்லவா.

## மதிப்பு

↑ இந்த வாரம் இன்னொரு வாயைப் பிளக்க வைக்கும் தகவல்.

இந்த அழகியின் கையில் தவழ்வது சி.டி.பிளேயர். தற்போது சி.டி. கசட்டுக்கள் ஒடியோ, வீடியோ உலகில் செல்வாக்குப் பெற்று வருகின்றன. அதனால் சி.டி. பிளேயர்களுக்கு கிராக்கி. அழகி வைத்திருப்பது சி.டி. ஒடியோ பிளேயர்.

இதன் விலைதான் உலகசாதனை. என்ன விலை தெரியுமா? 22 ஆயிரம் பவுண். நம்நாட்டு மதிப்பில் 24 இலட்சத்து 20 ஆயிரம் (யப்போவ்) ரூபாய்.

அப்படி என்ன இதில் இருக்கிறது என்கிறீர்களா? 18 காரட் தங்கத்தால் பேழை செய்யப்பட்டுள்ளது. அது போதாது என்று பேழையில் வைரக்கற்களும் பதிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிக விலை உயர்ந்த 'சி.டி.ஒடியோ பிளேயர்' இதுதான்.

இலண்டனில் மேஃபெயார் பகுதியில் உள்ள கொண்டுயுற் வீதியில் மேற்படி நிறுவனத்தின் காட்சியறை உள்ளது. பெரும் கோடீஸ்வரர்கள் தான் இங்கு விஜயம் செய்கிறார்களாம்.

## தய்யா தய்யா

↓ பொம்மைகள் போல காட்சியளிக்கும் இந்தக் கார் லேசப்பட்ட காரல்ல. உலக சாதனைக்கார். சுவிற்சலாந்தின் ஜெனிவா நகரில் கடந்த வருடம் நடைபெற்ற மோட்டார் கார் கண்காட்சியின்போது பார்வையாளர்களைக் கவர்ந்த கார் இதுதான்.

410 குதிரை வலுவுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட இவ்வண்டி 260 கிலோமீட்டர் வேகத்தில் (162 மைல்) செல்லக்கூடியது. புறப்பட்ட 4.8 செக்கனில் 96.5 கிலோமீட்டர் (60 மைல்) வேகத்தை எட்டும் வல்லமை கொண்டது. இந்த வண்டிக்குச் சொந்தக்காரரான தின்ஸ்பீட் இதற்கு E-GO ரொக்கெட்' என்று பெயர் சூட்டியுள்ளார். இதில் ஒருவர் மட்டுமே பயணம் செய்ய முடியும். முன்புறமுள்ள காற்றுத்தடுப்புச் சாதனம் வண்டியின் வேகத்துக்கேற்றாற்போல் தானாக உரிய மாற்றங்களைச் செய்து கொள்ளும்.

உலகில் தற்போதுள்ள கார்களில் அதிக வேகம் கூடிய கார் என்று உலக சாதனை படைத்துள்ளது. மற்றுமொரு கார் தகவல்: பிரிட்டனில் 1996ம் ஆண்டும் இடம்பெற்ற ஒரு காட்சியில் வைக்கப்பட்டிருந்த இந்தக் கார் இருபத்தோராம் நூற்றாண்டின் இறுதிக்காலத்துக்குரியது (2096ம் ஆண்டு) என்று வாணிக்கப்பட்டது. இதனை கொவென்றி பல்கலைக்கழகத்தினர் வடிவமைத்தனராம்.

இதில் ஒரு புதுமை என்னவென்றால், இக்காரில் பூசப்பட்ட வர்ணம் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தனது வர்ணத்தை மாற்றிக்கொள்கிறது. வண்டியில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடிகள்கூட மாற்றமடையக்கூடியவை. (பச்சோந்திக் கார் என்று கூறலாமோ!) இக்காருக்கு சாரதியே தேவையில்லை. கணனி மூலமே இயங்கக்கூடியது. விபத்திலும் சிக்காதாம். வால்.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி வாஸினீ 22.02.1999

மட்டக்களப்பைச் சேர்ந்த வாகீசன்-திருமலையைச் சேர்ந்த மைதிலி தம்பதியினரின் மூத்த புதல்வி **வாஸினீ** தனது முதலாவது பிறந்தநாளை CANADA TORONTO வில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, கனடாவிலுள்ள அம்மம்மா, தாத்தா, மாமா, சித்திமார், மட்/ஆரையம்பதியில் வசிக்கும் அப்பம்மா, அப்பப்பா, சித்தப்பா, மாமிமார், பாட்டிமார், பாட்டன், CANADA MONTREALலில் வசிக்கும் பெரியம்மாமார், பெரியப்பாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் செல்வி வாஸினீயை காளி அம்மன் துணையுடன் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: மட்/அப்பம்மா குடும்பத்தினர்

## போதை



→ சென்ற ஆண்டு ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் ஓட்டங்களை குவித்தவர்கள் பலர் இருக்கலாம்.

அவர்களுக்குள் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்தவர்கள் ஆக மொத்தம் ஐந்து பேர்.

இதில் விசேஷம் யாதெனில் அந்த ஐந்து பேரில் நான்கு பேர் இந்திய வீரர்கள். ஒருவர் மட்டும் அவுஸ்திரேலியர்.

அவுஸ்திரேலிய அணியின் தூண்களில் ஒருவரான றிக்கி பொண்டிங்தான் அந்த வீரர்.

சென்ற ஆண்டு 24 போட்டிகளில் விளையாடி இவர் குவித்த ஓட்டங்கள் 1166. இதில் மூன்று சதங்கள், ஆறு அரைச் சதங்கள் அடங்கும். ஒருநாள் போட்டியில் இவரது அதிகப்பட்ச ஓட்டக் குவிப்பு 145. சராசரியாக 53.

இலங்கை, இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான கால்டன் அன்ட் யுனைட்டட் கோப்பைப் போட்டியில் றிக்கி பொண்டிங்குக்கு கெட்ட நேரம்.

இப் போட்டித் தொடரில் விளையாடிய பொண்டிங் ஜாலியாக இருப்பதற்கு சிட்னி நகர இரவு விடுதி ஒன்றுக்கு போயிருக்கிறார்.

அங்கு கொஞ்சம் கூடுதலாக 'தண்ணி' போட்டுவிட்டு, வம்பு பண்ணியிருக்கிறார். இதனால் தகராறு ஏற்பட்டு, விஷயம் அவுஸ்திரேலிய கிரிகெட் கட்டுப்பாட்டுச் சபை வரை போய்விட்டது.

அவர்கள் பொண்டிங்கை மூன்று ஒரு நாள் போட்டிகளில் பங்கு கொள்ள தடை விதித்ததோடு, ஐயாயிரம் அவுஸ்திரேலிய டொலர் தண்டமாக அறவிட்டனர். நம்நாட்டு மதிப்பில் இரண்டு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய்.

கடந்த ஆண்டு ஆயிரம் ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர்களின் பட்டியல் இது.

| வீரர்கள் | போட்டிகள் | ஓட்டம் | சதம் |
|---|---|---|---|
| டெண்டுல்கர் | 34 | 1894 | 09 |
| கங்குலி | 36 | 1328 | 04 |
| அசாருதீன் | 37 | 1268 | 03 |
| ஜடேஜா | 36 | 1004 | 03 |



படிப்பகம்

இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காவிந்த பிளேஸ், 1ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் ... நாவலவில் உள்ள ... அச்சகத்தில் பெப்ரவரி 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.